Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20

# ஈழநாடு

ஈழநாடு
ஆண்டுச் சந்தா
ரூபாய் 10-00
தனிப்பிரதி
சதம் 20

தேசிய வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, புரட்டாசி 24- ஆம் நாள். ரபியுஸானி பிறை 7 (10-10-59) சனிக்கிழமை இதழ் 36.

# சுதந்திரத்தை உண்மைப் பொருளாக்கிய தலைவர்

## பண்டாரநாயக்காவுக்கு செனேட் சபையின் புகழ் மாலை

### சர்வதேச மதிப்பு ஈட்டித் தந்த ஆற்றல் மிக்க பிரதமர்

—செனேட்டர் நடேசன்

காலம் சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவுக்கு சென்ற வாரம் செனேட் சபை வணக்கம் செலுத்தியது.

அரசாங்கத்தின் சார்பில் சபை முதல்வரும் சுகாதார மந்திரியுமாகிய செனேட்டர் ஏ. பி. ஜயசூரியாவும் எதிர்க் கட்சிக்காக திரு, ஈ. பி. விக்கிரமநாயக்காவும் பேசிய பின்னர், செனேட்டர் எஸ். நடேசன் அநுதாபத் தீர்மானத்தை ஆதரித்துப் பிரசங்கம் செய்தார். அவ்வமயம் அவர் கூறியதாவது:

எம் நாட்டில் ஏற்பட்ட ஒரு பெரிய சமூகப் புரட்சி திரு. பண்டாரநாயக்காவை அதிகார பீடத்தில் ஏற்றி வைத்தது. வெறும் வாக்களிக்கும் யந்திரங்களாக இதுகாறும் கருதப்பட்டு வந்த பொது மக்கள், எமது அரசியல் வாழ்க்கையில் தங்களுக்கும் ஒரு முக்கிய ஸ்தானம் உண்டென்பதை உணர்ந்தனர். ஒரு சில குடும்பங்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி வந்த காலம் மலையேறி விட்டது. இந்தப் புரட்சியின் உண்மைக் கருத்தை நாம் இன்னும் கிரகித்துக் கொள்ளவில்லையென்ருல், காலஞ்சென்றவருக்கு அஞ்சலி செலுத்தும் லட்சக்கணக்கான பொது மக்களைப் பாருங்கள் என்று நான் கூறுகிறேன். அப்படி நாம் உணராவிட்டால், எங்களுக்கும் அவர்களுக்குமிடையே யுள்ள விசாலமான இடைவெளி எவ்வளவு தூரமென்பதை வற்புறுத்துகிறது.

### பாரதத்தைப் பின்பற்றினுர்

பண்டாரநாயக்கா இன்னும் சில நன்மைகளைச் செய்திருக்கிருர். அவருடைய ஆட்சியின் கீழ் நாம் மூன்ரும் வகுப்பு ஐரோப்பியராயிருந்து முதலாம் வகுப்பு ஆசிய மக்களாக மாறினேம். வெளிநாட்டு கடற்படைத் தளங்களையும் விமானத் தளங்களையும் அகற்றி எங்கள் சுதந்திரத்தைஉண்மைப்பொருளாக்கினர். சர்வலோக சபைகளில் இலங்கையையும் மதிக்கக்கூடிய முறையில் அவர் எமது வெளிநாட்டுக் கொள்கையை அமைத்தார். அவரது வெளிநாட்டுக்கொள்கை எமது மூத்த சகோதர நாடாகிய பாரதத்தைப் பின்பற்றியிருந்தது. அவர் இறந்த தினத்தன்று, என்றுமே இல்லாதவாறு, இந்தியா முழுவதிலும் விடுமுறையாக்கப்பட்டு, தேசம் முழுவதிலும் துக்கம் அனுஷ்டித்தார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அவருடைய அறிவும் ஆற்றலும் மிக ஆழமானது. எல்லாப் பிரச்சினைகளையும் பல கோணங்களிலிருந்தும் படித்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வருவார். நியாயம், நீதி, நேர்மை, சாதி சமய சமரஸம் — இவற்றை அடிப்படையாக வைத்தே அவர் ஒவ்வொரு பிரச்சினையையும் கைக்கொண்டார். இப்பேர்ப்பட்ட ஒற்றுமையில்லாவிட்டால் பொருளாதார முறையில் நாடு முன்னேற முடியாதென்பது அவருடைய தீர்க்கமான நம்பிக்கை.


### தீர்க்கதரிசனமாக உணர்ந்தார்

எனது சொந்த அநுபவத்தால் கூறுகிறேன்: "தமிழ் மொழிக்கு நியாயமான அளவு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் —ஒரு வித பிராந்திய சுயாட்சியே இந்த மொழிப் பிரச்சினைக்கு இறுதியான பரிகாரம்" —என்பதை திரு. பண்டாரநாயக்கா தீர்க்க தரிசனமாக உணர்ந்திருந்தார். மொழிப் பிரச்சினை பற்றிய பேச்சு காரசாரமாக அடிபட்டபோதும் கூட திரு பண்டாரநாயக்கா தமிழர்களை எப்படியாவது திருப்திப்படுத்த வேண்டுமென்று கூறி வந்திருக்கிருர்.

(9ஆம் பக்கம் பார்க்க)

### தணிக்கை

அவசரகாலச் சட்டத்தின் கீழ் அரசாங்க செய்திகளுக்குத் தணிக்கை விதித்திருப்பதால் வாசகர்களுக்கு 'ஈழநாடு' அச்செய்திகளை அறிவிக்க முடியாததை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றது.




Wolseley Pumps

"வூல்ஸிலி" பம்புகள்

தோட்டக்காரர்களினுல் பாராட்டப்படுகின்றன.

நீங்கள் நீர் இறைக்கும் இயந்திரம் வாங்க எண்ணினுல் **வூல்ஸிலியை** நம்பி வாங்குங்கள்.

எல்லா உப-பாகங்களும் எப்பொழுதும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்:


ஓட்டோஸ் லிமிட்டெட்

ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்.
போன்: 496 தந்தி: "ஓட்டோஸ்" யாழ்ப்பாணம்

### பிரிட்டன் தேர்தல் முடிவுகள்

| | |
|---|---|
| கொன்ஸர்வேட்டிவ் | 365 |
| தொழிற் கட்சி | 258 |
| லிபரல் | 5 |
| கம்யூனிஸ்ட் | —— |

2 ஸ்தானங்களின் முடிவு இன்னும் தெரியவில்லை.



உருவாகி வரும் புதிய நூல் நிலையத்தின் தோற்றம்

## யாழ்ப்பாணத்துக்குப் பெருமைதரும் கட்டடம்

### ஞாயிற்றுக்கிழமை திறப்புவிழா

தென்கிழக்கு ஆசியாவிலேயே சிறந்த ஒரு நூல் நிலையமாக விளங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டுள்ள நூல் நிலையத்தின் வேலைகள் இப்போது அரை குறையாகவே இருக்கின்றன. பத்தில் ஒரு பகுதியே இன்று பூர்த்தியாகியுள்ளது. கலைமகளின் அருள் மிகுதியும் நிறைந்த நவராத்திரி காலத்திலே இந் நூல் நிலையத்தின் ஒரு பகுதி 11-10-59 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30க்குத் திறந்து வைக்கப்படும். கட்டடக்கலையில் திறமைமிக்கவர்களின் யோசனையுடன் திட்டமிடப் பெற்று நிருவப்படும் இப்பொதுசன வாசிகசாலை யாழ்ப்பாணத்துக்கு மாத்திரமன்றி ஈழநாட்டுக்கே பெருமை அளிக்கும் ஒரு நிலையமாக எதிர்காலத்தில் விளங்குமெனின் அது மிகையாகாது.

இப்போது திறக்கப்படவிருக்கும் நூல் நிலையக் கட்டடத்தின் ஒருபகுதி 115 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்டது. கட்டடவேலை முழுவதும் நிறைவேறிய பின்னர் நூல் நிலயத்தைத் திறந்து வைப்பதே வரவேற்கத்தக்கதாயினும்,இப்போது நூல் நிலயமாக உபயோகிக்கப்பட்டு வரும் கட்டடம், யாழ்ப்பாணம் மாநகரசபையின் வேறு நிர்வாக வேலைகளுக்குத் தேவையாக இருப்பதால் அவசர அவசரமாகப் புதிய கட்டடத்தின் ஒரு பகுதியைத் திறக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதெனத் தெரிகின்றது.

இத்திறப்பு விழாவில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா பங்குபற்றிப்பேசுவார்.மேயர் திரு.அ.தங்கராஜா துரையப்பா புதிய நூல் நிலயத்தின் ஒரு பகுதியைத் திறந்துவைப்பார்.

## நாட்டைப் பிளத்தல் ஆபத்தானது

### சிங்களரும் தமிழரும் சேர்ந்து வாழலாம்

திரு. பேரின்பநாயகத்தின் கருத்து

நேற்றுவரை சத்துருவாக இருந்த ஒருவர் இன்று நண்பனுகித் தோளிலே தட்டி இனிமையாகப் பேசுவது நடக்கக் கூடிய காரியமென்பதைப் புதிய பிரதமர் திரு. தஹநாயக்கா நிரூபித்துவிட்டார். தமிழினத்துக்கு விளைக்கப்பட்ட அநீதிகளுக்காக அவர் இப்போது வருந்துவதையும் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுமென அவர் பேசியிருப்பதையும் தான் இங்கு குறிப்பிடுகின்றேன்.

திடீரெனப் பிரதமர் பதவியில் தூக்கிவைக்கப்பட்ட ஒருவரின் பேச்சு விடியமுன் கெடுமென பலர் சொல்வதும் எனது காதுகளுக்கு எட்டத்தான் செய்கின்றது. வாய்ச் சொல் வீரரின் பட்டியலில் திரு. தஹநாயக்காவைச் சேர்க்கமுன்னர் படியேறிய ஒருவர் 'படியிறங்கிப் 'பேசியதன் காரணத்தை ஆராய்வதில் ஒரு பொல்லாப்புமில்லை.

'வெறும் பேச்சுகளைக் கேட்டுக் காது புளித்துப்போய் விட்டது, தஹநாயக்கா மகாத்மயாவே செயலிற் காட்டட்டும் பார்க்கலாம்' என்று திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் சொல்லிவிட்டார்.

சரி, கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. ச. பேரின்பநாயகன் பிரதமர் தஹநாயக்காவின் மனமாற்றத்தைப் பற்றி என்ன எண்ணுகின்ருர் என்பதை அறியலாமென்று அவரிடம் சென்றிருந்தேன்.

நான்போன சமயம்தான் 'ட்றிபியூன்' பத்திரிகையைத் தட்டிப் பார்த்துவிட்டு கையிற் சுருட்டை எடுத்தார். மறுகணம் பிரதமர் தஹநாயக்கா தமிழினத்துக்கு அளித்துள்ள உறுதி மொழியைப்பற்றி இருவரும் பேசலானேம்.

தமது தலையை இலேசாகத் தடவிக்கொண்டே திரு. பேரின்பநாயகம் கூறியதாவது:

"பிரதமர் தஹநாயக்காவின் வாக்குறுதியை நான் வரவேற்கின்றேன். ஆனுல் தமிழினம் பட்டபாடுகளை எளிதில் மறந்துவிட முடியாது. மூன்று நான்கு வருடங்கள் சென்ருலும் அவர்கள் பட்ட துன்பங்களை எப்படி மறக்க முடியும், மக்கள் அவரும் இவரும் சொல்வதைக் கேட்டு ஏமாறப்போவதில்லை. சொல்வதைச் செயலிற் காட்டும்வரை பிரதமர் தஹநாயக்காவின் வாக்குறு

(9–ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

அதிக நுரை தந்து உடைகளை விரைவில் வெண்மையாக்குவது **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

தரத்தில் சிறந்தது - **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

உடைகள் வெண்மையாக வேண்டுமானல் **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

### அறிவித்தல்

தற்பொழுது எல்லோரையும் ஆதரிப்பதற்காக மாதாந்தம் ரூபா 5-, 10-, 15-, 20- முதலிய கட்டணங்களை ஏற்றுக் கொள்கிறோம். ஊழியர்கள் விண்ணப்பிக்கவும்.

**ஸ்ரீ லங்கா**
**கஷ்டநிவாரண சங்கம்**
ஆபரண மாளிகை பில்டிங்
76/3,78/1,கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

### அறிவித்தல்

புற்று நோயைத் தமிழ் மருந்தால் தடையின்றி மாற்றலாம். உலகினிலே கொடிய ரோகம் புற்று நோய் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. இந்நோய் சத்திரசிகிச்சை, ஒளிசிகிச்சை மூலமே குணப்படலாமே தவிர தமிழ் மருந்தினலல்ல என்ற அபிப்பிராயம் இனி நிலவ இடமில்லை. மீட்க முடியாதெனக் கைவிடப்பட்ட அநேகர் **யோகீஸ்வர ரசம்** என்ற பெயருடைய தமிழ்மருந்தினல் குணமடைந்துள்ளனர். இம்மருந்திற்கு அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. புற்று நோயைப் பற்றி என்னுடன் ஆலோசியுங்கள்.

**பொ. செல்லையா**
ஆயுள்வேத வைத்தியர்
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்**

### முக்கிய அறிவித்தல்

உங்கள் வீட்டிற்குத் தேவையான பல சரக்கு சாய்ப்புச் சாமான்களுக்கு எம்மிடம் கலந்தாலோசியுங்கள். எவ்வித முற்பணமும் இன்றி, உங்களுக்குச் சிரமமுமின்றி வீட்டிற்கே பொருட்களைக் கொண்டு வந்து தருகிறோம். விபரங்கட்கு, எம். ஏ. டோசாஜீ அன் கோ, 136, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம் (போன் 459).

சிறந்த
★ **சினிமா சிலைட்**
★ **விளம்பரச் சித்திரங்கள்**
★ **புளொக்குகள்**
முதலியவற்றிற்கு:-
**கலாநிலையப் பதிப்பகம்**
**சிவன் கோவில் மேலை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## ஊர்காவற்றுறைப் பகுதியில் பஸ் பிரயாணிகள் இன்னல்

### போதியளவு பஸ்கள் இல்லாக்குறை

யாழ்ப்பாணம்

இலங்கைப் போக்குவரத்துச் சபையாரின் யாழ்ப்பாணம் வேலணை டிப்போவில் பஸ்கள் எண்ணிக்கையில் குறைந்திருப்பதால் சுற்றுடலிலுள்ள பிரயாணிகள் பெருங் கஷ்டங்களுக்குள்ளாகி வருகிறார்களென்று தெரிகிறது. இதனல் வேலணை ஊர்காவற்றுறை செல்லும் கல்லூரி மாணவ மாணவிகள் பெரும் இன்னல்படுகின்றனர். போதியபஸ்களில்லாமல்பாதிக்கப்பட்ட சேவைகளின் விபரம் பின்வருமாறு.

பண்ணை — ஊர்காவற்றுறைக் கிடையே இரு பஸ்கள் தான் ஓடுகின்றன.

பண்ணை—சிறுப்பிட்டி (18 மைல்) ஐந்து பஸ்கள் அவசியம் தேவை.

வேலணை—ஊர்காவற்றுறை: இப்பாதையில் ஓடும் பஸ்கள் புங்குடுதீவு, வேலணை, சரவணை, நாரந்தனை தெற்கு ஆகிய இடங்களில் உள்ளவர்களுக்குப் பிரயாண வசதிகள் அளித்து வருகின்றன. இந்தப் பாதைக்கு இரண்டு பஸ்கள் அவசியமாகும். ஊர்காவற்றுறை — சிறுவில் பகுதிக்கு பஸ் சேவையே இல்லை. பண்ணை—மண்டைதீவு, யாழ்ப்பாணம் — பண்ணை ஆகிய இடங்களுக்கு ஒவ்வொரு பஸ்தான் ஓடுகின்றது.

—ந. நி.

## யந்திரப் படகு சேவை

### பண்ணைக் கூட்டுறவு ஸ்தாபனம் பொறுப்பேற்கும்?

யாழ்ப்பாணம்

ஊர்காவற்றுறை - காரைதீவு யந்திரப்படகு சேவையை இம்மாதம் முதல் திகதி தொடக்கம் பொறுப்பேற்று நடாத்தும் படி பண்ணைக் கூட்டுறவு போக்குவரத்து ஸ்தாபனத்தாரை அரசாங்கம் கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

இது பற்றி ஊர்காவற்றுறைப் பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு. பி. பாக்கியநாதன் தெரிவிப்பதாவது: "இம்மாற்றத்தைச் செய்யுமாறு எங்கள் சங்கம் அரசாங்கத்திடம் கேட்டுள்ளது. அதற்கு இணங்கவே ஊர்காவற்றுறை யந்திரப்படகு சேவை பண்ணைக் கூட்டுறவு போக்குவரத்து ஸ்தாபனத்தாரின் பொறுப்பில் விடப்பட்டது. இந்த ஸ்தாபனத்துக்குப் போக்குவரத்து விஷயங்களில் அனுபவமுண்டு. மற்றும் இதில் வேலை பார்ப்போர் ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவர்களாயிருப்பதால் இதில் அதிக சிரத்தையும் ஊக்கமும் காட்டக்கூடும். கிரமமான ஒரு சேவையை மக்களுக்கு அளிக்க இந்த ஸ்தாபனத்தாரால்தான் முடியும்." ந. நி.

### WANTED

A Supervisor of Co-op. Societies.

Qualification: S. S. C. (English) with credits in Maths or Arithmetic and Tamil or any other equivalent exam. Any person with experience in Co-op. work. Age: 30-45. Salary: Rs. 150 inclusive of all allowances. Cash Security: Rs. 1000.

Apply to the Hony. Secy. Jaffna Co-operative Provincial Bank Ltd., Jaffna on or before 17th Oct. 1959.

Jaffna,
5th Oct. 1959. Ad. 10

## மட்டக்களப்பில் தண்ணீர் தட்டுப்பாடு

### தேரின் அச்சு முறிந்தது அபசகுனமா?

கிழக்குத் தபால் :: நமது நிருபர்

மட்டக்களப்பு.

பருவமழையை எதிர்ப் பார்த்திருந்த இங்குள்ள விவசாயிகள் சொற்ப மழை பெய்ததும் வயல் வேலைகளை ஆரம்பித்தார்கள். ஆனல் மழை போதியளவு தொடர்ந்து பெய்யாமையால் விவசாயிகள் வானத்தைப் பார்த்த வண்ணம் இருக்கின்றனர்.

போதாக் குறைக்குப் பெருந் தண்ணீர்த் தட்டுப்பாடு நகரத்தையும், சுற்றுப் புறத்திலுள்ள மக்களையும் வாட்டிவருகிறது.

**அச்சு முறிந்தது**

இப்பகுதியிலுள்ள பழம் பெரும் சிவஸ்தலமாகிய கொக்கட்டுச் சோலைத் தான் தோன்றீஸ்வரன் கோயில் தேரோட்டத் திருவிழாவின்போது தேர், மதிலில் மோதி, அதன் அச்சு முறிந்துவிட்டது. இதனல் தேரை மேலே செலுத்த முடியாமல் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. இதனை ஓர் அபசகுனமாகவே மக்கள் கருதுகிறார்கள். கோயில் அதிகாரிகள் தேரைத் திருத்தி இடையில் தேரோட்டவிழாவை நடாத்த எண்ணியிருப்பதாகக் கூறப்படுகிறது.

**இரு சமயப் பெரியார்கள்**

சமீபத்தில் திருப்பெருந்திரு. குன்றக்குடி அடிகளாரும், பித்துக்குளி முருகதாசரும் இங்கு விஜயஞ் செய்து சமய விழிப்பை யூட்டினார்கள். பித்துக்குளி முருகதாசரின் அரிய கூட்டுப்பிரார்த்தனைப் பாடல்கள் சைவமக்களை மட்டுமன்றி மற்றச் சமயிகளின் நெஞ்சையும் உருகச் செய்துவிட்டது.

குன்றக்குடி அடிகளார் "சிவசக்தி" வழிபாடு பற்றி அரிய தோர் சொற்பொழிவாற்றினார்கள். அப்போது தமிழ் மறைகளான தேவார, திருவாசகங்களுக்குப் பூஜையில் சரியான இடமளிக்கத் தவறினல் அவற்றின் முக்கியத்தை உணர்த்தவும், அவற்றையே வணங்கும்படி தூண்டும் இயக்கமே வளரக்கூடும் என எச்சரித்தார். அவர் கோயில்களில் ஆசீர்வாதத்துக்கு முன் தேவார, திருவாசகங்கள் பாடப்பட வேண்டுமென்றார்.

**சீனி உற்பத்தி**

கல்லோயாப் பள்ளத்தாக்கில் பெருஞ் செலவில் அமைக்கப்பட்டுள்ள சீனித் தொழிற்சாலை அடுத்த ஆண்டின் நடுப்

(7ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதியில் நீண்ட வரட்சி

### தீவுப்பகுதிமக்கள் படும் அவஸ்தை


யாழ்ப்பாணம்

வடபகுதியில் பல மாதங்களாக நிலவி வரும் வரட்சி காரணமாக நெடுந்தீவு, புங்குடுதீவு, எழுவைதீவு ஆகிய பிரதேசங்களில் குடிதண்ணீர் இல்லாமல் மக்கள் அவஸ்தைப் படுகிறார்கள்.

இப்பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு யாழ்ப்பாணம் சமூக சேவைப்பகுதியினர் தினமும் தண்ணீர் விநியோகம் செய்து வருகின்றனர். குடும்ப மொன்றுக்கு ஒரு கலன் வீதம் விநியோகம் செய்யப்படும். இத் தண்ணீர், மக்களின் அவசிய தேவைக்குப் போதாதெனத் தெரிகிறது. இதுபற்றி யாழ்ப்பாணம் சமூக சேவைப்பகுதி அதிபர் திரு. ஜே. என். அப்பாத்துரை குறிப்பிட்டபோது வரட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கும், கால் நடைகளுக்கும் நஷ்ட ஈடு வழங்கும் திட்டத்தை அரசாங்கம் கையாளப் போவதாகவும், யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவி வரும் வரட்சி நீடித்தால் பெருமளவு சேத முண்டாகுமெனவும் தெரிவித்தார். —ந.நி.

## றெனேல்ட் டோபீன்

### கணப்பொழுதில் துரிதமே இயங்கி விடுகிறது




வாகனப் போக்குவரத்தூடேயும், முடுக்குகளிலும், நேரான இடங்களிலும் கச்சிதமாக இயங்கி விரைந்து செல்கிறது.

இதுவே வீதியினிலே வியப்பூட்டும் ரிங்காரத்துடனும் உறுதியுடனும் ஓடும் கார் உண்மையான அசல் விண் தாரகை.

4 கதவுகள் 5 ஆசனங்கள்
45 மைல்கள் ஒரு கலனுக்கு

இதன் ரகங்களில் மிகவும் சிறந்தது

9T-CFT-D-324

ஸி. எப். ரி. என்ஜினியரிங் லிமிட்டெட்
467, யூனியன் பிளேஸ் — கொழும்பு.

# பூத்துக் குலுங்கும் விருட்சங்கள் நிறைந்த ஹொரகொல்லை

## பண்டாரநாயக்காவின் பாங்கான பங்களா

பச்சைப் பட்டுக் கம்பளம் விரித்ததுபோல பசும்புல் தரை. பூத்துக் குலுங்கும் தென்னங் காடு. இடையிடையே பரந்த விசாலமான விருட்சங்கள். இது தான் ஹொரகொல்லை வளவு. ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் விஸ்தீரண முள்ள இந்தப்பெரிய தோட்டத்தில், கொழும்பிலிருந்து கண்டிக்குச் செல்லும் 24-ம் கட்டையடியில், பிரதான வீதியிலிருந்து நூறுயார் தூரத்தில், காலஞ் சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் முப்பாட்டனார் அசல் ஆங்கில முறையில் ஒரு பங்களாவை 1829- இல் கட்டினார். பிரதமரின் தந்தையார் சேர் சொலமன் டயஸ் பண்டாரநாயக்காவும், அவருடைய தந்தையாரும், சென்ற வாரம் எம்மை விட்டுப் பிரிந்த பிரதமரும் இங்கு தான் ஓடியாடி விளையாடினார்கள்.

நான் இந்த இடத்துக்குச் சென்றபோது, பேச்சழகும் சொல்லழகும் நிரம்பிய அவரது வாக்கு சாதுர்யமான பிரசங்கங்களை இந்த அழகான விருட்சங்களின் கீழ்த்தான் பயின்றாரோ, தென்னைமரச் சோலைகளுக்கிடையிலிருக்கும் இந்த வெளிகளில் தான் குதிரையேற்றம் பழகினாரோ என்ற எண்ணம் என் உள்ளத்தில் எழுந்தது.

### ஒரு சிற்றரசு

அன்றுமென்ன, இன்றுமென்ன! பண்டார நாயக்கா குடும்பம் ஒரு சிற்றரசு. குடிமக்கள் பல நூற்றுக் கணக்கானவர். அவருடைய பூதவுடல் ஹொரகொல்லைக்கு எடுத்துப் போன தினத்தன்று நான் அங்கிருந்தேன். அதிகாலையில் ஒரு பொக்குவாய்க் கிழவி, பிரதமரைத் தூக்கி வளர்த்த தாதி, பொல்லும் பிடித்துக்கொண்டு வந்தாள் — "எங்கே ஹாமுத்துரு"என்று! ஹாமுத்துரு என்றால் பெரிய ராஜா என்று பொருள்படும். பிரதமரின் மூத்த சகோதரி அந்த மூதாட்டியை வரவேற்று 'ஹாமுத்துரு உங்களுடைய ஹாமுத்துரு தானே, அவர் இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடுவார்' என்று சமாதானம் கூறிய சம்பவம் இன்றும் என் மனத்தை விட்டு அகலவில்லை.

### முப்பாட்டனார் சேவை

கொழும்பு—கண்டி ரயில் பாதை திறக்கப்பட முந்தியே ஹொரகொல்லை பங்களா கட்டப்பட்டது. எனவே, பிரிட்டிஷ் அதிகாரிகள் இப்பாதையைத் திறந்தபோது, திரு. பண்டாரநாயக்காவின் முப்பாட்டனார் தமது ஆட்களை ஏவி இதில் உதவி செய்தாராம். இந்தச் சேவைக்காக அவருக்கு அக்காலத்து அரசாங்கம் ஓர் தங்கப்பதக்கத்தையும் வழங்கியது.

ஹொரகொல்லைத் தோட்டத்தில், பங்களாவுக்கு முற்பக்கம் சுமார் ஐம்பது யார் தூரத்தில் நிலமட்டத்துக்கு ஐந்து அடி ஆழத்தில் இரு கல்லறைகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒரு பிரேதப்பெட்டி உள்ளடங்கக் கூடியதாக அமைக்கப்பட்டிருக்கிறது. பிரதமரின் உடலம் ஒன்றில் வைக்கப்பட்டு கொங்கிறீற் சிமெந்தினால் அடைக்கப்பட்டது. அதற்குப் பக்கத்தில் இருக்கும் மற்றைய கல்லறை வெறுமனே இருக்கிறது.

பிரதமரின் தந்தையார் சேர். சொலமன் டயஸ் பண்டார நாயக்காவின் பூதவுடல் ஹொரகொல்லைத் தோட்டத்திலேயே, ஆனால் பங்களாவுக்கு எதிர்ப்புறம் தெருவைத் தாண்டியுள்ள வத்தையில் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. பண்டாரநாயக்காவில் எவ்விதமான குறைபாடுகள் இருந்தபோதிலும் அவரது பெருந்தன்மையை நாம் மறக்கவே மறக்க முடியாது. அவர் விரும்பியிருந்தால் இந்திரபோகத்தில் வாழ்ந்திருக்கலாம். பணிவிடை செய்ய அவருக்கு நூற்றுக்கணக்கானவர் காத்திருந்தார்கள். பொருளிருந்தது, பதவியிருந்தது — யாவுமிருந்தன. சொன்ன மாத்திரத்தில் சேர் பட்டம் கிடைத்திருக்கும் ஆனால் அவர் அதை விரும்பவில்லை. தாம் நினைத்து அமைத்துக்கொண்ட ஒரு கொள்கையின் பிரகாரம் இலங்கையின் அரசியல் வாழ்வைச் சமைத்தார். இந்தியா, சீனம் போன்ற பெரும் ஆசிய நாடுகளுடன் நாமும் தலைதூக்கி நிற்கக்கூடிய அளவுக்கு எமது செல்வாக்கை வியாபித்தார்.

ஆனால் இந்தக் கொள்கையை அவர் பூரணமாக்காதபடிக்கு கூற்றுவன் இடையில் புகுந்துவிட்டான். அது இலங்கையின் துரதிர்ஷ்டம்!

—வி. என். பி.


பயிர் பூச்சிகளாலும் பயிர் பீடைகளாலும் எவ்வளவு சேதம் ஏற்படுகிறதென்று உங்களுக்குத் தெரியுமா?

ஜெர்மனியாரின் பயிர் பீடை நாசினிகளையும், தெளி கருவிகளையும் பாவித்துப் பயிர்களைப் பாதுகாருங்கள்

**பொலிடோல்:** பிரசித்திவாய்ந்த ஒரு பூச்சி நாசினி திரவம் ஆகவும், தூள் முறையாகவும் பாவித்துக்கொள்ளலாம்.

**டிப்தெரெக்ஸ்:** நெற்பயிர் பீடைகளுக்குச் சிறந்த சக்தி வாய்ந்த ஒரு நாசினி திரவமாகவும், நீர்கலந்த தூளாகவும், தனித்தூளாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**குப்பிரவிற்று:** கமத்தொழிற் பகுதியாலும் தேயிலை ஆராய்ச்சித் தாபனத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட செம்பு பொதிந்த பங்கசு கொல்லி, தேயிலை, வெற்றிலை, புகையிலை பயிர்களின் பங்கசு நோய்களை அடக்க வல்லது.

**சிரீசையன்:** நெல்விதை மற்றும் விதைகளை தோற்று விதை பங்கஸ் நோய்களை நீக்கலாம்.

**நைகரகாபமேற்று:** பயிர் நோய்களைத் தடுக்கக்கூடிய ஓர் பங்கஸ் கொல்லி.

**ஹெடோனல்:** களைநாசினி, களைப்பூண்டுகளை அழிப்பதால் நெற் பயிருக்கு சிறந்த வளர்ச்சியைக் கொடுக்கும்.

**தூக்கோன்இரை:** ஈ, கரப்பான் பூச்சி ஆகியவற்றை அடக்க வாய்ந்த பூச்சி கொல்லி.

**சீலியோ நச்சுப்பசை:** எலிகளையும், அகழான்களையும் பரிநாசஞ் செய்யும் அரிக்கும் விலங்கு கொல்லி.

**பிலாட்சி உபகரணங்கள்:** உகந்த தெளி கருவிகளும், தூவிகளும் குறைந்த விலைக்கு எடுத்துக்கொள்ளுக.

மேற்கூறியவை யாவும் M. P. C. சங்க மூலமாயும் எங்கள் பிரதிகருத்தர்
K. S. செல்லையா, ரோயல் டிஸ்பென்சரி, யாழ்ப்பாணம்.
சிவசக்தி ஸ்டோர்ஸ், வவுனியா.
C. A. வயித்திலிங்கம், 5, டமறில் ஒழுங்கை, மட்டக்களப்பு.
K. V. சோமசுந்தரம், மன்னன் குளம், அக்கரைப்பற்று.
ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்டோர்ஸ், வெலிமடை.
சரஸ்வதி ஸ்டோர்ஸ், வெலிமடை.
அனுலா சீற் ஸ்ரோர்ஸ், வெலிமடை. மூலமாயும் வேண்டிக்கொள்க.
பயனீயர்ஸ் டிரேடிங் சென்றர், நெல்லியடி, கரவெட்டி.
எஸ். எம். ஏ. அலியுத்தும்மா லெப்பே, 153, மெயின் வீதி, கல்முனை.
எல். ஈ. எப். அமரசேகரா 10, வல்லானை, பாணந்துறை.
என். சச்சிதானந்தன், திருக்கேதீஸ்வரம், மன்னார்.
சிவசக்தி ஸ்டோர்ஸ், வவுனியா.
வி. வடிவேலு அன்ட் பிறதர்ஸ், 25-27, பழையகடைத்தெரு, நுவரேலியா.
கே. செல்லத்துரை, முதலியார் வளவு, சுன்னாகம். மூலமாயும் வேண்டிக்கொள்க.
தேவையான விபரங்களுக்கு எழுதுக.

விலாசம்:

**சதாம் ஹவுஸ் லிமிட்டெட்**
தபால் பெட்டி இல. 743,
150, வாட் பிளேஸ். கொழும்பு 8.


# சமூக சேவையில் புதிய திருப்பம்

## மாணவர்களுக்குச் சுகாதார போதனை

அனுராதபுரம்.

விகார ஹல்மில்லாக்குலம என்னும் சிற்றூர் ஒன்றில் உள்ள மக்கள் போதிய சுகாதார வசதியும், கல்வி பெறும் வாய்ப்பும் இல்லாதவர்களாக இருந்து வருகிறார்கள் என்பதை அறிந்து, அதற்கு ஆவன செய்ய முன்வந்துள்ளது அனுராதபுரம் சமூக சேவைக் குழு.

திரு. ஆர். ஸ்டனிஸ்லாஸ் என்னும் ஆசிரியரின் தலைமையில் இயங்கும் இந்தக் குழுவில் அர்ச். சூசையப்பர் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் ஏறத்தாழ 25 பேர் விரைவில் விகார ஹல்மில்லாக்குலம விற்குச் சென்று அங்கு ஒருவாரம் தங்குவார்கள் என்றும் அப்போது சுகாதார வசதிகளைச் செய்வார்கள் என்றும் தெரிகிறது. அத்துடன் இரவு வகுப்புக்கள் நடத்தி கல்வி வசதியற்ற குழந்தைகளுக்கும் முதியோர்களுக்கும் அறிவுச் செல்வமளிப்பார்கள் என்று மேற்படி சமூக சேவைக் குழுத் தலைவர் என்னிடம் தெரிவித்துள்ளார்.

வெளியூர்களிலே பணியாற்ற விரும்புகின்ற சமூகசேவைக் குழுவினர் அடிக்கடி அனுராதபுரத்திலேயே சிறுசிறு கூட்டங்களோ வகுப்புக்களோ அமைத்து இந்நகர் மக்களுக்கும் மாணவர்களுக்கும் சுகாதார மேன்மை பற்றி விளக்கினால் நல்லது என்றும் பலர் கருதுவதாகத் தெரிகிறது.

சமூக சேவைக் குழுவினரின் முயற்சிகளுக்கு அரசாங்க அதிபர் திரு. நிஸங்கா பி. விஜேரத்தின உதவுவதாக உறுதியளித்திருக்கிறார் என்றும் அறிந்து கொண்டேன்.

ந. நி.

# வைத்தியத் துறை முன்னேற்றமே

## உலகின் ஜனப் பெருக்கத்துக்குக் காரணம்

மைசூர் அரசாங்க வைத்திய மாநாட்டில் சென்ற வாரம் டக்டர் ஸி. வி. ராமன் பேசும்பொழுது இந்தியா, சீனம் முதலிய நாடுகளில் ஜனத்தொகை பெருகி வருவதாகவும், இதற்குக் காரணம் வைத்திய முறையில் ஏற்பட்டுள்ள துரிதமான முன்னேற்றமே எனவும் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசியதாவது:

வைத்திய முறை விஞ்ஞான ரீதியில் ஆராயப்பட வேண்டும். விஞ்ஞான அறிவின் அடிப்படையில் வைத்தியம் இயங்குமேயானால், அது சக்தி வாய்ந்ததாக விளங்கும்.

வைத்தியத் துறையில் ஆச்சரியப்படத் தகுந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அவற்றின் மூலமாக, மனித உடலின் பல்வேறு வியாதிகளுக்கும் சிகிச்சை செய்து மாற்ற முடிந்துள்ளது.

ஜனத் தொகையின் எண்ணிக்கை அதிகரிப்பதற்குக் காரணம், வைத்திய முறையில் ஏற்பட்டுள்ள இந்த முன்னேற்றமேயாகும். இதன் காரணமாக உலகில் இறப்பவர்களின் தொகை குறைந்து வருகிறது. இந்த விதமாக ஜனத்தொகை பெருகினால், பெரிய சமூக ஆபத்து ஏதாவது வந்துவிடக் கூடும். இதைத் தடுப்பதற்கு நாம் வழி வகைகள் கையாள வேண்டும். வைத்தியத்துறை முன்னேற்றமே உலகின் ஜனப் பெருக்கத்துக்குக் காரணம்.

# புதிய பஸ்நிலையம் இம்மாதம் 15ந் திகதி உபயோகத்துக்குவரும்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணப் பட்டினத்தின் மத்தியில் நிறுவப்பட்டுள்ள புதிய பஸ்நிலையம் இம்மாதம் 15-ம் திகதி தொடக்கம் பஸ் போக்குவரத்துக்கு உபயோகிக்கப்படும். இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் திகதி தொடக்கம், புதிய பஸ் நிலையத்தைப் பொறுப்பேற்கும்படி இலங்கைப் போக்குவரத்துச் சபையிடம் யாழ்ப்பாணம் மாநகரசபை கேட்டிருந்தது. அப்போது இதனை அவர்கள் கையேற்கமுடியவில்லை.

புதிய பஸ்நிலையத்துக்கான இறுதி வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. பிரயாணிகள் சௌகரியமாகத் தங்குவதற்குத்தற்காலிகமான தங்குமிடம் ஒன்று அங்கு அமைக்கப்படுகிறது. நிரந்தரமான தங்குமிடம் ஒன்று விரைவில் நிறுவப்படும்.

ந. நி

தொடர் கதை

# துறைக்காரன்

வ. அ. இராசரத்தினம்

## 5. தலையிடி

வேலாயுதம் எதிர்பார்த்திருந்ததைப் போலவே அவன் மூத்தமகன் கந்தசாமி வரவில்லை. இளையமகன், கடைக்குட்டி செல்லன்தான் வந்திருந்தான்.

ஏறத்தாழ வீட்டுக்கும் துறையடிக்கும் ஒருமைல் தூரம் இருக்கும். மூன்று வருடங்கட்கு முன்னே வேலாயுதம் குடும்பத்தோடு துறையடியிற்தான் இருந்தான். கங்கைக் கரையிலே அவன் வீடு இருந்தது. வீடு மட்டும் என்ன? ஒரு தோட்டமே இருந்தது. ஐம்பது தென்னங்கன்றுகள் காய்க்கத் தொடங்கியிருந்தன.

அந்த ஐம்பது தென்னங்கன்றுகளையும் வேலாயுதம் தன் கையாலேயே நட்டிருந்தான். ஒழிந்த நேரங்களில் தன் கையாலேயே தண்ணீர் ஊற்றினான். கங்கையின் செழிப்பான தண்ணீரையும், கடலோரத்து உப்புக் காற்றையும் உட்கொண்டு தென்னம்பிள்ளைகள் செழுமையாய் வளர்ந்தன. நான்கு வருடங்களிற் புதுப் பாளையை விரியவிட்டுக் குலை கட்டி விம்மி நிற்கையில் வேலாயுதம் மனத்திலே சொல்லிக் கொண்டான். 'பதினைந்துவருடம் அரும்பாடு பட்டுப் பள்ளிக்கனுப்பி, பெற்ற பிள்ளையை வளர்த்தேன். அவன் போக்கைப் பார்த்தால் உருப்படமாட்டான் போல இருக்கிறது. பெற்ற பிள்ளையால் கடைசிக் காலத்தில் எந்தப் பயனுமே இல்லாவிட்டாலும், நான் பெறாத பிள்ளைகள் இப்போது காய்க்கத் தொடங்கிவிட்டன. கால்மேற் கால் போட்டபடி இருந்து கொண்டே இனிச் சாப்பிடலாம்.'

வேலாயுதம் இப்படி எண்ணிக் கொண்டாலும் சவளைத் தூக்கி எறிந்து விடவில்லை. கங்கையை விட்டு விட்டுப் போய்விட அவனுக்கு மனம் வராது. வாழ்விலும் தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும் இந்தக் கங்கா தேவிதான் தாய்போல அவனை அரவணைத்துக் காப்பாற்றியிருக்கிறாள். பிள்ளைகளை நம்பித் தாயைக் கைவிட்டுவிட முடியுமா?

தென்னம்பிள்ளைகள் காய்க்கத் தொடங்கியதும் கையிலே சிறிது பணம் சேமிக்க முடிந்தது. தென்னையிலிருந்து விழும் ஒவ்வொரு தேங்காயும், ஒவ்வொரு மட்டையும், அவன் பெண்களின் கல்யாணத்திற்கான 'இன்சூரன்ஸ் பொலிசி' போலச் சேர்ந்து வந்தன.

ஆனால் வேலாயுதம் சேமித்துக் கொண்டு வருவது கங்காதேவிக்குப் பொறுக்கவில்லைப் போலும். மூன்றாம் வருடம் மார்கழி மாதத்தில், காட்டிலும் கரம்பிலும், மேட்டிலும் கழியிலும் சோனாவாரியாகப் பெய்த மழைத் தண்ணீர் அத்தனையும் சேர்த்துக் கொண்டு பொங்கிக் குமுறிக் கொண்டு ஓடத் தொடங்கினாள். காடு கொள்ளாமல் மிரண்ட சாதுவைப்போல, காட்டிலும் மேட்டிலும், தெருவிலும் திண்ணையிலும் பிரவாகித்து, உழவர்களின் குடிசைகளையும், இடையர்களின் மாடு ஆடுகளையும் தன்னுள் அணைத்துக் கொண்டு தலை தெறிக்க ஓடிய அந்த ஓட்டத்தில் வேலாயுதத்தின் குடும்பம் தப்பிப் பிழைத்ததே ஆச்சரியமான கதை. ஆனால் அவன் வீடு, அரும்பாடுபட்டு வளர்த்த ஐம்பது தென்னம் பிள்ளைகள்—ஐயோ அந்தத் தோட்டமே அள்ளுண்டுபோயிற்று. அந்தத் தோட்டம் இருந்த இடத்தில் இப்போது கங்காதேவி அன்னநடை நடக்கிறாள்.

வேலாயுதத்தின் அடிவயிற்றிலிருந்து பெருமூச்சுக் கிளம்பியது! கண்கள் கலங்கிக் கண்ணீரை நெட்டித்தள்ளின. கடைசிக் காலத்தில் அவனுக்கு ஆதரவாக இருந்த ஐம்பது பிள்ளைகளைப் பறிகொடுத்த சோகத்தில் சற்று நேரம் செயலிழந்து இருந்தான்.

மறுபடியும் உணர்வு பெற்றபோது, இனிமேற் குடும்பம் மூத்தமகனை நம்பித்தான் இருக்க வேண்டும். ஆனால் அந்த மகன்......?

"ஏன் அண்ணன் வரவில்லையா?" என்று இளைய மகனிடம் கேட்டான் வேலாயுதம்.

"இல்லப்பா. அவர் மூதூருக்குப் போகிறாராம்"

"ஏன்?" என்று கேட்டான் வேலாயுதம்.

எட்டுவயது நிரம்பாத செல்லனுக்கு அண்ணன் மூதூருக்குப் போன காரணத்தை விளக்கிச் சொல்லத் தெரியவில்லை. ஆகவே அடுத்த கேள்விக்கு இடம்வைக்காமல் "எனக்குத் தெரியாதப்பா" என்றான்.

"தென்னம் பிள்ளைக்குத் தண்ணி ஊற்றினானா?"

"இல்லப்பா, அவர் விடிய முதலே போய்விட்டார்" என்றான் செல்லன்.

வேலாயுதம் பெருமூச்சு விட்டுக்கொண்டே பையன் கொண்டுவந்த பிட்டை வாங்கிச் சாப்பிடத் தொடங்கினான். செல்லன், வள்ளத்திற் போய்க் குந்திக்கொண்டு சவள் வலித்துப் பார்த்தான்.

சாப்பிடுகையில் வேலாயுதத்தின் எண்ணங்களும் ஓடத் தொடங்கின.

எல்லாத் தந்தையரையும் போலவே அவனும் தன்மகனைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிப் படிப்பித்தான். கந்தசாமியும் படிப்பில் கெட்டிக்காரன் தான். பதினாறு வயதிலே எஸ்.எஸ்.ஸி. பாஸ்பண்ணி விட்டான். அந்தக்காலம் என்றால் இதற்குள் உத்தியோகம் கிடைத்துவிடும்!

ஆனால் நேற்றுக்கூடத் தர்மலிங்கம் வாத்தியார் சொன்னார். 'இனித் தமிழனுக்கு உத்தியோகமே கிடையாது' என்று.

உத்தியோகம் கிடைக்காவிட்டால் என்ன? காலுங்கையும் இல்லையா? எஸ். எஸ். ஸி. பாஸ் பண்ணிவிட்டால், தென்னம் பிள்ளைக்குத் தண்ணீர் ஊற்றக் கூடாது; கோழியை முட்டைக்குப் பிடித்து அடைக்கக் கூடாது என்று எங்காவது சொல்லியிருக்கிறதா?

கந்தசாமி மட்டுமா? எஸ். எஸ். ஸி. படித்த எல்லோருமே அப்படித்தான். படித்த படிப்புக்கு உத்தியோகமும் கிடைக்கிறதில்லை. உடம்பும் வளைகிறதில்லை. அதிலும் கிராமத்துப் பையன் எஸ். எஸ். ஸி. பாஸ் பண்ணிவிட்டால் அவனுக்கென்று ஒரு வரட்டுக் கௌரவம், தலைக்கனம் பிறந்து விடுகிறது. கையிற்சவளையோ, மண்வெட்டியையோபிடிப்பதை அவமானமாகவே கருதிவிடுகிறான். இந்த வரட்டுக் கௌரவம் அவனை உலகில் ஒன்றுக்குமே உதவாதவனாகச் செய்து விடுகிறது. கந்தசாமியும்ஒன்றுக்கும் உதவாதவனாகத்தான் போய் விட்டான்.

வேலாயுதத்துக்குக் கோபம் குமுறியது. எதிரிலே கந்தசாமி நின்றிருந்தால் அடித்திருப்பான். ஆனால் இப்போது பெருமூச்சு விடத்தான் முடிந்தது.

தன் காலுங்கையும் ஆடு மட்டும் வேலாயுதம், கந்தசாமியிடமிருந்து சல்லிக்காசையும் எதிர்பார்க்க வில்லைத்தான். ஆனால் தன்னுடைய வண்ணான் கூலிக்காகவாவது உழைத்துக் கொள்ள முடியாதா. அடிக்கடி சோதனை, 'இன்ரெபியூ' என்று இருபது முப்பது வாங்கிக் கொள்கிறான். ஆனால் உத்தியோகந்தான் கிடைக்கமாட்டேன் என்றது.

உத்தியோகம் என்றதும் பேராசிரியர் மயில்வாகனம் சொன்னது அவனுக்கு ஞாபகம் வந்தது. தர்மலிங்கம் வாத்தியாரை விட அவர் அதிகம் படித்தவர். அதனால் தானோ என்னவோ தமிழனுக்கு இனி உத்தியோகங் கிடைக்காது என்று எடுத்த எடுப்பிற் சொல்லி விட வில்லை.

சென்ற வருடந்தான். கச்சான் காற்றுச் சுழற்றி யடிக்கும் ஆவணி மாதம். கடற்கரையின் அடம்பன் கொடிகள் கூடப் பசுமையிழந்து வரண்டிருந்த போதுதான் பேராசிரியர் மயில்வாகனமும் அறுபது அறுபத்தைந்து மாணவர்களும் அங்கே வந்தார்கள். மாணவர்களைக் கூட்டிக் கொண்டு ஊர் சுற்ற வந்தவராம் அவர். யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டுக் கிளிநொச்சிக் கமங்கள், வவனியா, திருக்கேதீச்சரம், அனுராதபுரம் மிகுந்தலை எல்லாம் தரிசித்து விட்டுத் திருக்கோணமலைக்கு வந்தார்களாம். கோணேசரைத் தரிசித்து, கன்னியாவிலும் நீராடிவிட்டுக் கங்கையைப் பார்க்க இங்கே வந்தார்களாம்.

அவர்கள் வரும் போது பதினொரு மணியாகிவிட்டது. வந்தவர்கள் எல்லோருமே கங்கையில் நீராடிவிட்டு வெண்மணற் திட்டிற் சமைத்துச் சாப்பிட்டார்கள். அவர்கட்கு வேண்டிய எல்லா உதவியையும் வேலாயுதம் செய்து கொடுத்திருக்கிறான். போகும் போது அவர் அவனுக்குச் சன்மானமாக ஐந்து ரூபாய் கொடுத்தார். ஆனால், அவர் எவ்வளவு தெண்டித்தும் வேலாயுதம் அதை வாங்க மறுத்து விட்டான். மனுசனைவிடக் காசு பெரிசா?

ஆமாம்; அந்தப் பேராசிரியர் தான் எவ்வளவு அன்போடு பழகினார். எவ்வளவு அனுதாபத்தோடும், அன்போடும் அவர் தன் வாழ்க்கையைப் பற்றிக் கேட்டார்? வேலாயுதமும் உள்ளது உள்ளபடி ஒன்றும் ஒளிக்காமல் அவரிடம் சொன்னான். அவன் சொல்லியதை எல்லாம் பேராசிரியர் ஒரு சின்னச் சிவப்புப் புத்தகத்தில் எழுதிக்கொண்டார்.

அவர் கேட்டது போலவே, வேலாயுதமும் அவரிடம் ஆயிரம் கேள்விகளைக் கேட்டான். பேராசிரியரும், அலுக்காமற் சளைக்காமல்வேலாயுதம்கேட்ட அத்தனை கேள்விகட்கும் குழந்தைப் பிள்ளை போலப் பதில் சொன்னார்.

வேலாயுதம் அவரிடம் கேட்டான். "ஐயா; இந்தப்பிள்ளைகள் எல்லாரும் என்ன படிக்கிறார்கள்?"

'எஸ். எஸ். ஸி' என்றார் பேராசிரியர்.

"இவ்வளவு பேரும் ஒரே பள்ளிக்கூடத்திலா படிக்கிறார்கள்" வேலாயுதம் ஆச்சரியம் கொண்டவனாகக் கேட்டான்.

"இவ்வளவு பேர் மட்டுமா? இன்னமும் ஐம்பத்திரண்டு பிள்ளைகள் இதேவகுப்பிலேயே படிக்கிறார்கள்"

வேலாயுதம் மூக்கில் விரலை வைத்தான். ஒரே பாடசாலையில் எஸ். எஸ். ஸி. வகுப்பில் நூற்றுக்கும் அதிகமான பிள்ளைகள் படிக்கிறார்கள் என்பதை அவனால் நம்பக் கூட முடியவில்லை.

அவன் ஆச்சரியத்தை விளங்கிக் கொண்டே பேராசிரியர் சொன்னார்: "நம்முடையதேசத்திலே ஒவ்வொரு வருடமும் எழுபதாயிரம் பையன்கள் எஸ். எஸ். ஸி. படிக்கிறார்கள். படிப்பு முடிந்ததும், மிகச் சிலர் மேற்படிப்புப்படிக்கிறார்கள். மற்றவர்கள் எல்லோரும் வேலை தேடி அலைகிறார்கள். இந்நாட்டுக்கு உள்ள பெரிய தலையிடி அதுதான்" என்றார்.

"இவர்கள் எல்லோருக்கும் உத்தியோகம் கிடைத்து விடுமா?" என்று கேட்டான் வேலாயுதம்.

"அதுதான் சொன்னேனே பெரிய தலையிடியாக இருக்கிறதென்று. அத்தனை பேரும் விரும்புகிற மாதிரி உத்தியோகம் கிடைத்து விடாது. ஆனால் நமது கல்வி முறையின் காரணமாக அவர்கட்கு வேறு வேலை செய்யவுந் தெரியாது. இதனால் எத்தனையோ இளைஞர்கள் வாழ்க்கையில் ஒன்றுக்கும் உதவாதவர்களாக மனமுடைந்து தற்கொலை கூடச் செய்து விடுகிறார்கள்."

பேராசிரியரின் முகத்தில் இருள் படர்ந்தது. அவர் குரல் கம்மிற்று. கையில் வைத்திருந்த பத்திரிகையைப் பிரித்து "இதே பார் இந்த இளைஞன், என்னிடம் தான் படித்தான். போன வருடந் தான் எஸ். எஸ். ஸி. பாஸ் பண்ணினான். வேலை கிடைக்காததினால் மனமுடைந்து 'பொலிடோலை'க் குடித்துச் செத்து விட்டான்."

வேலாயுதம் பத்திரிகையைப் பார்த்தான். செத்துப் போன பையனின் படங் கூடப் பத்திரிகையில் இருந்தது. வேலாயுதத்தின் கண்கள் அவனையறியாமலே பனித்தன.

பேராசிரியர் சொன்னார்: "இது போன்ற சம்பவங்கள் நாட்டிலே நடை பெறாமலிருக்க வேண்டுமானால் நமது கல்வி முறையே மாற வேண்டும். எல்லாருக்கும் தொழிற் கல்வி கற்பிக்க வேண்டும்."

அப்படியென்றால் என்ன என்று வேலாயுதத்திற்கு விளங்கவில்லை. பாடசாலையிலேயே கைத்தொழில், கமத்தொழில், கோழி வளர்ப்பு போன்றவைகளைப் படிப்பிக்க வேண்டும் என்று பேராசிரியர் விளக்கினார்!

கமத்தொழில் படிக்கிறதாக இருந்தால், பேராசிரியர் சொல்வது போலப் பாடசாலையிலே கைத்தொழில் செய்வதாக இருந்தால் கிராமத்திலே எவருமே தம் குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்ப மாட்டார்கள், என்று எண்ணினான் வேலாயுதம்.

எல்லோரும் படிக்கட்டும். 'சும்பி காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னுமாம்.' வேலையில்லாமத் தட்டுத் தடுமாறினத் தானகவே எல்லோரும் நிலத்தைக் கொத்தத் தொடங்கி விடுவார்கள். கந்தசாமியும் அப்படித் தான் செய்வான்.

வேலாயுதம் சாப்பிட்டு முடித்து விட்டான். கையை அலம்பிக் கொண்டு வாயைக் கொப்பளித்து விட்டுச் சுருட்டுச் சுற்றினான். தூரத்தே சுருட்டுக்காரச் செல்லையா அண்ணன் வந்து கொண்டிருந்தார்.

(தொடரும்)


கலாநிலையப் பதிப்பகம்

தினக்குறிப்பு
**1960**

எமது தினக்குறிப்புடன், மாணவர்களுக்கென
பிரத்தியேகமான தினக்குறிப்பையும்
வெளியிடுகின்றோம்.

எமது தினக்குறிப்பின் விலை
**75** சதம்

விபரங்களுக்கு:- தினக்குறிப்பு 1960,
த. பெ. எண் 49,
யாழ்ப்பாணம்.

இங்கே வெட்டவும்

மனேஜர் :
கலாநிலையப் பதிப்பகம்
த. பெ. எண் : 49.
சிவன் கோவில் மேலைவீதி,
யாழ்ப்பாணம், : : [இலங்கை.]

1960ஆம் ஆண்டு பொது/மாணவர்களுக்கான தினக்குறிப்பில் ............பிரதிகளை எமது பெயரில் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம். இத்துடன் முற்பணமாக ரூபா............ அனுப்பி வைத்துள்ளோம்.

எமது பெயரும் முகவரியும் பின்வருமாறு :

பெயர்:..........................................

முகவரி:..........................................

..........................................

# போதிமர நிழலில்

— வெள்ளங்காடு, வீ. வியாகேச தேசிகர் —

**அமுதத்தைச் சுவைப்பதற்கு முன்னர், ஆலகால விஷத்தைத் திருநீலகண்டத்திற் கட்டிவிடவேண்டுமென்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை.**

**உண்மை விளக்கும் பகுதியில் என் சீடர்களும் நானும் கலந்து கொள்வதுடன் நீங்களும் உங்கள் அபிப்பிராயங்களை அவ்வப்போது அறிவிப்பதின் மூலம் கலந்து கொள்ளலாம்.**

**உங்களுக்கு என்னைச் சந்திக்க விருப்பமானல் போதிமர நிழலுக்கு வாருங்கள்.**

ஈழவள நாட்டில் வெள்ளங்காடு என்ற திவ்விய க்ஷேத்திரத்தில் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், பாணிகன் மரபில், மாப்பாணர் என்பவருக்கும் மங்கையர்க்கரசி அம்மாளுக்கும், விசாக பட்சத்துப் பூரணையில் திருக்குமாரனாக வியாகேசனாகிய நான் அவதரித்தேன்.

சிறுவயதிலிருந்தே சகலசெல்வங்களிலும், சுகபோகங்களிலும் வளர்க்கப்பட்டேன். இக்காலப் பத்திரிகை இலக்கியம் என் கண்களிற் படாதவாறு என்வாழ்க்கை, இலக்கியத் தந்தக் கோபுரத்தில் அமைக்கப்பட்டிருந்தது. ஆடலிலும் பாடலிலும், சந்தனம் கமழும் சுகபோக வாழ்விலும், கபிலவஸ்து அரமனையில் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த சித்தார்த்தரைப் போன்று என் இலக்கிய வாழ்க்கை அமைந்திருந்தது.

எட்டுத்தொகை (கலித்தொகை, அகநானூறு, புறநானூறு முதலியன) பத்துப்பாட்டு (சிறுபாணாற்றுப்படை, பட்டினப்பாலை முதலியன) பதினெண் கீழ்க் கணக்கு (திருக்குறள், நாலடியார் முதலியன) ஐம்பெருங்காப்பியங்கள் (சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியன). ஐஞ்சிறு காப்பியம் (சூளாமணி, உதயணன் காதை முதலியன), இன்னும் சில சங்ககால இயற்றமிழ் இலக்கிய நூல்களும் கட்டி வைத்த அகிலும் சந்தனமும் கமழும் அந்த ஒய்யார மாளிகையில், சிலசமயங்களில் கம்பனின் காவியம் என்ற மதுவும் அருந்தி, இலக்கியத் துன்பம் என்ற வெயில் படாதவாறு வளர்க்கப்பட்டேன்.

என்மனம் வேறு வழியிற் சிதறக் கூடாது என்று கவலையுற்ற என் பெற்றோர்கள், உரிய காலத்தில் அழகே உருவான இலக்கியச் செல்வியாகிய யசோதையை மணம் செய்து வைத்தார்கள். காலப்போக்கில் 'எழுத்தாளன்' என்ற ராகுலனைப் பெற்றுச் சுகமாக வாழ்ந்து வரும் நாளில்......

மக்களின் அன்றாடவாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இக்கால இலக்கியம் என்ற உலகத்துக்குள் உந்தப்பட்டேன். தந்தக் கோபுர வாசியாகிய என்னை, நான் கண்ட காட்சிகள் துன்புறுத்தத் தொடங்கின.

கூனிக்குறுகிவளைந்தமுப்பைக் கண்டு துணுக்குற்ற சாக்கிய இளவரசனைப் போல ஈழத்து இருபதாம் நூற்றாண்டு இலக்கியத்தின் கூன் என்னை வருத்தியது: அதுதான் 'தாய்நாடு', 'சேய்நாடு' என்ற முறையில் எழுப்பப்படும் குரல். என் சிந்தனை கிளைவிட்டு வளர்ந்தது.

**இங்கிலாந்திலிருந்து சென்ற**வர்கள் அமெரிக்காவில் குடியேறினர்கள். அங்கு தங்களுடைய வாழ்க்கையை அமைத்தார்கள். ஆனல் இன்று எந்த அமெரிக்கனும் இங்கிலாந்தைத் தாய்நாடு என்றும், தனது நாட்டைச் சேய்நாடு என்றும் அழைப்பது கிடையாது. அமெரிக்கன் ஷேக்ஸ்பியரையும் மில்டனையும் வாசிக்கத்தான் செய்கிருன். ஆனல் அதற்காகத் தனக்குத் தனியே ஒரு இலக்கிய மரபும் பாரம்பரியமும் இருக்கிறதென்பதை மறப்பதேயில்லை. வசன நடை இலக்கியத்துக்குத் தனியே ஒரு வழியைக் காட்டிய ஆறுமுக நாவலரையும், டக்டர் உ. வே. சாமிநாதய்யருக்கு எவ்வளவோ காலத்துக்கு முன்னரே செல்லரித்த ஓலைச்சுவடிகளையும் அச்சுவாகனமேற்றிய சி. வை. தாமோதரம்பிள்ளையையும் அருளிய ஈழநாட்டார், ஏன் இப்படிக் கூனி, தன்மானம் இழந்து, தங்களைச் சேய்நாடு எனத் தாழ்த்திக்கொண்டு, வளமற்ற இலக்கிய வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென என் மனம் வருந்தியது.

துன்பத்தால் கனத்த மனத்துடன் நடந்த சித்தார்த்தனைப் போல நானும் உலவினேன்.

ஈழத்து இலக்கியத்தை வாட்டி வரும் பிணி என் மனத்தை வாட்டியது.

தமிழகத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளையும், புத்தகங்களையும் வரவேற்று, வாசித்து, புதுமைப் பித்தனையும், கு. ப. ரா.வையும் வ. ரா. வையும் 'ஆகா ... ஊஹூ' என்று இரசிக்கிருர்கள்.

ஆனல் சொந்த நாட்டானின் எழுத்துக்களை வாசிக்காது விடும் அலட்சிய மனப்பான்மை, சொந்த நாட்டுப் பத்திரிகைக்கு விலை கொடுத்து வாங்க மறுக்கும் 'பண்பு', கொடு நோயாகப் பரவியுள்ளது. மொஸ்கோவும் லண்டனும் நமக்கு எவ்வளவு அந்நியமோ, அப்படியே திருச்சியும் மரினக் கடற்கரையும் அந்நியமானவை என்பதை நாம் சிந்திக்க மறக்கிறோம். தரகர் தம்பையாவும், ராலாமி அப்புஹாமியும், நம்மவர்கள் என்பதையும் யாழ்ப்பாணமும், கொழும்பும் நாம் காணும் பிரதேசங்கள் என்பதையும் உணரத் தவறி விடுகிறோம். இந்த அலட்சிய நோயினல் ஈழத்து இலக்கியம் நசிபடுகிறது என்ற எண்ணமும் என் உள்ளத்தை அரித்தது.

அப்புறம் ஈழத்து இலக்கியங்கள் பாடை கட்டப் பட்டு சுடுகாட்டுக்கு அனுப்பப்படும் பரிதாபத்தையும் கண்டேன். புலமைக் காய்ச்சல் என்ற தீயில் பொசுக்கப்பட்டும், மட்டரக விமர்சனம் என்ற குழியில் புதைக்கப்பட்டும் இன்னும் சில காலம் வாழக் கூடிய இலக்கியங்கள் அகால மரணம் அடைவதைக்கண்ணுற்றேன். செம்புச் சல்லி பெருத துப்பறியும் புத்தகங்களுக்குத் துதிபாடி, ஆயிரக் கணக்கில் இந்த மண்ணில் வியாபாரம் செய்ய வசதி செய்து கொடுத்துக் கொண்டு, ஈழத்துச் சிறு கதைத் தொகுதி ஒன்றுக்குப் பாடை கட்ட முனையும் தன்மை என்னை மிகவும் வருத்தியது.

**ஈழத்து இலக்கியத்தை** வாட்டும் இந்த மூப்பு, பிணி, சாக்காடு ஆகிய துயரங்களிலிருந்து காப்பாற்ற மார்க்கங் கண்டு பிடிக்க வேண்டுமென்ற நோக்குடன், நான் யசோதையையும், ராகுலனையும் நள்ளிரவில் விட்டுப் பிரிந்து அலைந்து திரிந்தேன்.

ஒட்டிசுட்டானுக்கருகில் போகிறபோக்கில் தவம் செய்தேன். என்னுடன் கூட நரியன் நல்ல தம்பி, சரவணை - 'சந்தேகம்' சந்தியாப்பிள்ளை, சுடலையூர் சுப்பிரமணியம், சிற்றாண்டி சிவப்பிரகாசம், சதா. முத்தையன் ஆகிய துறவிகளும் தியானத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

குடலைத் தள்ளிச் சாய்ந்து, மாலை மங்கையின் வர்ணஜாலம் செய்யும் நீண்ட வயலைப் பார்த்தோம்.

அந்த நெற்பயிரில், நெல்லும் பதரும் இருப்பதைக் கண்டோம்.

குளக்கரைக்குச் சென்றோம். அந்தக் குளத்தில் மலர்ந்த தாமரை மலர்கள் மனத்துக்கு மகிழ்ச்சியூட்டின. ஆனல் அந்தத் தண்டு படுத்துக் கிடக்கும் சேறு குடலைக் குமட்டியெடுக்கும் துர்நாற்றம் வீசியதையும் அறிந்தோம்.

'பதரையும், சேற்றையும் சுத்தப் படுத்த வேண்டும்' என்று நான் சொன்னேன். எனது கூற்றில் நம்பிக்கை இல்லாமல் அந்த ஐந்து துறவிகளும் பிரிந்து சென்றுர்கள்.

**நான் தன்னந்தனியாக** ஈழநாட்டில் **போதிமர நிழலில்** தியானத்தில் ஆழ்ந்தேன். அப்பொழுது நான் ஞான ஒளியைப் பெற்றேன். இப்பொழுது அதனைப் பரப்பத் தயாராக இருக்கிறேன்.

முதலில் ஈழத்து இலக்கியத்தை நசித்து வரும் 12 நிதானங்களையும் உணருகின்றேன். அவையாவன:

**1—போலி.**
**2—தழுவல்.**
**3—திருட்டு.**
**4—ஓசி.**
**5—சீசன் சரக்கு.**
**6—காக்காய் பிடித்தல்.**
**7—விளம்பர மோகம்.**
**8—புலமைக்காய்ச்சல்.**
**9—குழி வெட்டல்.**
**10—மரபு அறியாமை.**
**11—சோனிப் படையல்.**
**12—இலக்கியதரக்குறைவு.**

இந்தப் பன்னிரண்டு நிதானங்களை அல்லது சார்புகளை விலக்கினற்ருன், நாம் பரிநிர்வாண பதவி என்ற தரமான இலக்கியத்தை அடையலாம். இதனை அடைவதற்கு நான்கு உண்மைகளை அறியவேண்டும். அவையாவன:

1. நோய். (நமது இலக்கியத்தைப் பீடித்துள்ள நோய்கள்)
2. நோய்காரணம். (இந்த நோய்களுக்குக் காரணமாய் இருப்பதை உணர்தல்.)
3. நோய் நீக்கும் வாய். (காரணங்களை நன்குணர்ந்து, விடுதலையடையும் வாயலை அறிவது)
4. நோய் நீக்கும்வழி. (தரமான இலக்கியத்தை அடைவதற்கு வழி.)

நோய் நீக்கும், அஷ்டாங்க மார்க்கம் என்ற எட்டுவித ஒழுக்கத்தை மேற்கொண்டு ஒழுகுதல்: அவை வருமாறு:

1. நற்காட்சி: தமிழ் இலக்கிய மரபை நன்குணர்தல்.
2. நல்லூற்றம்: சீஸன் சரக்குகளைக் கட்டிப் பிடிக்காமல், சுய சிருஷ்டியில் கருத்து ஊன்றுதல்.
3. நல்வாய்மை: தமிழ்மொழியை நன்கு கற்றல்; பிழையின்றிப் பதப் பிரயோகம் அறிதல்.
4. நற்செய்கை: தழுவல், திருடல், ஆசி கேட்டல் ஆதியாம் பழக்கங்களை விடுதல்.
5. நல் வாழ்க்கை: புலமைக் காய்ச்சலை விடுத்து, சுய விளம்பரத்தைக் கழித்து, பரஸ்பர நல்லுறவுடன் முன்னேறுதல்.
6. நல்லூக்கம்: பத்திரிகை ஆசிரியருக்கு அனுப்பும் படைப்புக்கள் திருப்பி அனுப்பப் படினும், விடாது முயற்சி செய்தல்.
7. நற்கடைப்பிடி: காக்காய் பிடித்து, சிபார்சு பெற்று இலக்கியத்துறையில் பிரவேசிக்க முற்படாதிருத்தல்.
8. நல்லமைதி: தன்படைப்புக்களைப்பற்றிய நிதானமான, நிறுவைப் பிரகாரமான கணிப்பு.

இந்த அஷ்டாங்க மார்க்கத்திலும் மிக முக்கியமான பகுதி சீலமாகும். அதை நாம் '**பஞ்ச சீலம்**' என அழைத்துக் கொள்ளலாம். அவையாவன:

1. கதைகளைத் திருடுதல், தழுவுதல், நண்பரிடம் தானம் பெறல், கடன்கேட்டல் முதலிய வழக்கங்களை நீக்குதல்.
2. செத்துப்போன அல்லது வாழுகின்ற நம் நாட்டு அல்லது பிறநாட்டு எழுத்தாளர்களுடைய வர்ணனைகளையும், உவமைகளையும் திருடுதல், தழுவுதல், கருச்சிதைத்தல் ஆகியசெயல்களில்ஈடுபடாது இருத்தல்.
3. சீஸன் சரக்குகளை (உ-ம் வகுப்புக் கலவரங்களை வைத்து எழுதுதல்) கட்சிப் பத்திரிகைகளின் கொள்கைகளுக்கேற்ப எழுதுவதை நீக்குதல்.
4. என்முதுகை நீ சொறி; உன்முதுகை நான் சொறிகின்றேன் என்றமுறையில் (சொறியர் கூட்டம்) சிறுகதை மன்னன், கட்டுரைக் கரும்பு, காளமேகம் ஆகிய விருதுகள்சூட்டுவதுபோன்ற சில்லறை வேலைகளை நீக்கல்.
5. தரமான இலக்கியத்தை, தன் சொந்த விருப்புவெறுப்புக்களை நீக்கி வாசிக்கவும் மெச்சவும் கூடிய நற்பண்பைப் பெறல்.

நான் பெற்ற இந்த ஞானத்தை வெளிப்படுத்தியதும் என்னை ஒட்டிசுட்டானில் விட்டுப்பிரிந்த துறவிகள் என்னை வந்தடைந்தார்கள்.

இந்தத் துறவிகளும் நான் அமர்ந்திருக்கும் போதிமரநிழலுக்கு உபதேசம் செய்ய வந்து போவார்கள். என்னுடைய ஞான ஒளி உங்கள்மீது படியப்போகிறது என்பதிற் சந்தேகம் கிடையாது.

**கேலி செய்தல், குத்திக்** காட்டுதல், உண்மை விளக்குதல் ஆகிய மூன்று வழிகளிலே நான் என் போதனைகளைப் பரப்புகின்றேன். அமுதத்தைச் சுவைப்பதற்கு முன்னர், ஆலகால விஷத்தைத் திருநீல கண்டத்திற் கட்டிவிட வேண்டு மென்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. கேலி செய்வதால், இதனை ஒரு தாக்கும் பகுதியென்று அஞ்ச வேண்டியதில்லை. யார் கேலிக்குள்ளாகின்றனர் என்பதை அறியவும் பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டாம். எவருக்கு இத் தலைப்பா பொருத்தமானதோ அவர் அதனைத் தரித்துக்கொள்ள வேண்டியது தான். இத் தொண்டில் என் பிரதானமான சீடர்களாக இருக்கும் ஐந்து துறவிகளுக்கும் பெரும் பங்குண்டு.

உண்மை விளக்கும் பகுதியில் என் சீடர்களும் நானும் கலந்து கொள்வதுடன், நீங்களும் உங்கள் அபிப்பிராயங்களை அவ்வப்போது அறிவிப்பதின் மூலம் கலந்து கொள்ளலாம். நான் தனித் தனியே வெற்றிலை வைக்க ஆரம்பித்து விட்டால், 'பெரியது', 'சிறியது' என்ற பிரச்சினைகள் எழுந்து விடும். ஆகவே, சுயேச்சையாகக் கலந்து உங்கள் ஒத்துழைப்பை நல்குங்கள்.

எடுத்த எடுப்பிலே அதிகம் பேசிவிட்டேன். உங்களுக்கு என்னைச் சந்திக்க விருப்பமானல் போதிமர நிழலுக்கு வாருங்கள். வணக்கம்.

'ஹென்றி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்றி

★ சேட்
★ ஷோட்ஸ்
★ காற்சட்டை

ஹென்றி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்றி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.

# சூரிய சக்தி மூலம் இயங்கும் வானவெளிக் கப்பல்கள்

## எந்தக் கிரகத்துக்கும் போகக் கூடிய வாய்ப்பு

சூரிய சக்தியின் உதவி கொண்டு வானவெளியில் எல்லையற்ற காலம் சென்று கொண்டிருப்பதுடன், அங்கிருந்து பூமிக்கு செய்திகள் அனுப்பக் கூடிய வானவெளிக் கப்பல்கள் உருவாகும்ஓர் யுகத்திற்கு அண்மையில் நாம் இருக்கிறோம். இனுமாக, தேவையான அளவிற்கு கிடைக்கக்கூடிய சூரிய சக்தியைக் கொண்டு, எதிர் வரும் காலத்தில் சந்திரன் உட்பட கிரகங்கள் அனைத்தையும் பற்றி ஆராய்ச்சி நடாத்த முடியும். இலகுவில் பெறும் சூரிய சக்தி மனிதன் உள்ளிருந்து வானவெளிக்கு செலுத்தும் ஊர்திகளிலும், தானாகவே இயங்கும் ஊர்திகளிலும் உபயோகப்படுத்தப்படும்.

அமெரிக்க விஞ்ஞானிகள் எதிர்வரும் காலத்தில் வேறு எதுவித சக்தியையும் உபயோகப்படுத்தாது, சூரிய சக்தியை மட்டும் கொண்டு வானவெளி ஆராய்ச்சிகள் நடாத்துவதற்கு வழிவகுக்கக்கூடிய முறையில் சூரிய சக்தி பற்றி ஆராய்ச்சி நடாத்துகின்றனர். இவ் ஆராய்ச்சிகளிலிருந்து வானவெளிக்குச் சென்றபின்பு சக்தியின்றி இயங்கும் ஊர்திகளைப் பார்க்கிலும், சூரிய சக்தியை கொண்டு இயங்கும் ஊர்திகள் சிறந்ததெனக் கருதப்படுகிறது.

### நவீன பாய்

இப்பொழுது மெக்ஸிக்கோவைச் சேர்ந்த லாஸ் ஆல்மோஸ் விஞ்ஞான ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள், சூரிய சக்தியைக் கவரக்கூடிய ஒரு நவீன "பாயை"க் கண்டு பிடித்துள்ளனர். கடலில் போகும்தோணி பாயில் காற்றுப்பட எப்படித்தானுகச் செல்கிறதோ அதேபோல் இந் நவீன பாயும் அத்துடன் கூட இணைக்கப்பட்டிருக்கும் ஊர்தியை வானவெளிக்குக் கொண்டு செல்லும். பாயுடன் இணைக்கப்பட்டிருக்கும் வானவெளி ஊர்தி ராக்கெற் ஒன்றன் மூலம் வானவெளிக்கு அனுப்பப்படும். ஊர்தி வானவெளியை அடைந்ததும் 'பிளாஸ்டிக் பாய்' தானுக அவிழ்ந்து தன் வேலையைச் செய்ய ஆரம்பிக்கும். சிறிது சிறிதாக இப் பாய் அத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் ஊர்தியை பூமியினதும், கிரகங்களினதும் கவர்ச்சிக்கு அப்பால் கொண்டு சென்றுவிடும்.

இவ் வானவெளி ஊர்தியிலிருந்து பெறும் தகவல்களைக் கொண்டு அதனைச் சூரியன், சந்திரன் உட்பட எக்கிரகத்திற்கும் போகச் செய்யலாம். வானவெளி முழுவதும் வெற்றிடமானதினுல் இவ் வானவெளி ஊர்தி தடையெதுவுமின்றித் தன்வழிசெல்லும். எனவே இது கூடிய காலத்திற்கு உபயோகத்திலிருக்கும். லாஸ் ஆல்மொஸ் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் 1,000 இருத்தல் எடையுள்ளதும், 440 யார் அகலமானதுமான சூரிய சக்தியைக் கவரக்கூடிய ஓர் பாயை ஊர்தியொன்றுடன் இணைத்து வானவெளிக்கு அனுப்பினுல், அது அவ் வூர்தியை இரண்டரை வருட காலத்தில் செவ்வாய் கிரகத்திற்கு எடுத்துச் சென்று மறுதரம் பூமிக்குக் கொண்டு வந்து சேர்க்குமெனக் கருதுகிருர்கள்.

அமெரிக்கா ஏற்கனவே வான வெளிப் பிரயாணத்திற்கு சூரிய சக்தியை உபயோகப்படுத்த ஆரம்பித்துவிட்டது. தற்பொழுது பூமியை வலம் வரும் ஆருவது 'எக்ஸ்புளோரர்' வான வெளிக்கு அப்பால் 23,000 மைல் தூரத்திலிருந்து 1,000 கண்ணறைகளில் பெற்ற சூரிய சக்தியைக் கொண்டு இயங்கும் 'ரான்ஸ்மிட்டர்' மூலம் பூமிக்குத் தகவல்கள் அனுப்பியவண்ணம் இருக்கிறது. இக் கண்ணறைகளில் சேர்க்கப்பட்ட சூரிய சக்தி 'ரான்ஸ்மிட்டர்' கருவியுடன் இணைக்கப்பட்டிருக்கும் பற்றரிகளை 'சார்ச்' செய்கின்றன.

### விஞ்ஞான முன்னேற்றம்

சூரிய சக்தியை வான வெளி ஊர்திகளுக்கு உபயோகப்படுத்துவது ஓர் நவீன விஞ்ஞான முன்னேற்றமாகும். வருங் காலங்களில் இதன் உதவியுடன் பல கருவிகளைக் கொண்டு வான வெளி ஆராய்ச்சி நடாத்தலாம்.

இத் துறையில் மேலும் ஊக்கம் அளிக்கும் வகையில் 'வாஷிங்டன் எலெட்றிக் ஹவுஸ்சும்', 'போயிங்' விமானக் கம்பனியும் கூட்டாக ஓர் "தேமோ எலெட்றிக் ஜெனரேட்டரை", கண்டுபிடித்துள்ளனர். இந்த ஜெனரேட்டரின் ஒரு பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும் அலுமினியத் தகட்டில் சூரிய சக்தி சேர்க்கப்பட்டு வெவ்வேறு தட்ப நிலையில் அமைக்கப்பட்டிருக்கும் இரு உலோகத்தில் செலுத்தியதும் அது மின்சாரமாக மாறி ஜெனரேட்டரை இயக்கும். முறையாக அமைக்கப்பட்டதும் இந்த ஜெனரேட்டர் பாரம் குறைவாகவும், நீண்டகாலம் உபயோகிக்கக் கூடியதாகவும் அமையும். அத்துடன் செலவு எதுவுமின்றி மின்சார சக்தி வழங்கும்.

வான வெளி ஆராய்ச்சிகளுக்கு சூரிய சக்தியை உபயோகப்படுத்தும் முறை தற்பொழுது ஆரம்ப நிலையில் இருந்தாலும், இதற்கு நல்ல எதிர் காலம் உண்டு. எடை குறைவான காரணத்தாலும், நீண்ட காலம் உழைக்குமான திலுலும் கால சீக்கிரத்தில் வல்லுனர்கள் சூரிய சக்தி கொண்டு இயங்கும் கப்பல்களையே செய்துவிடுவார்கள்.

# எரிந்து கொண்டிருக்கும் பகைமைத் தீ! அதில் எண்ணெய் ஊற்றுகிறுர் நேருஜி

## காங்கிரஸ் மீது இராஜாஜி சுமத்தும் குற்றம்

வர்க்கபேதமென்ற பகை உணர்வு நீங்கி வாழ்வில் அமைதி நிலவவேண்டுமென விரும்பினுர் காந்தி அடிகள். அந்தவர்க்கப் பகைமைத் தீயை அணைக்கத் தண்ணீர் ஊற்றுவதற்குப் பதிலாக எரிந்து கொண்டிருக்கும் அத்தீயில் எண்ணெயை ஊற்றுகிறுர்கள் நேருவும் அவர் மகள் இந்திராவும், என்று திரு. ஸி. இராஜகோபாலாச்சாரியார் சென்னையிற் சென்றவாரம் நடைபெற்ற காந்திஜயந்தி விழா ஒன்றிற் பேசும் போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

நிலபிரபுத்வச் சுரண்டல் உள்ளவரை வர்க்க பேதமும் இருக்கத்தான் செய்யும் என்று பேசப்படுகின்றது. நிலபிரபுத்துவம் எங்கே இருக்கிறது? 1937 இல் ஜமீன்தார்கள் ஒழிக்கப்பட்டபோதே நிலபிரபுத்வ முறையும் மறைந்தது. அதாவது காங்கிரஸ் தலைவர்கள் இன்று சோஷலிஸம் பேசுகின்றனர். ஆனுல் 22 ஆண்டுகளுக்கு முன்னரே நிலபிரபுத்வம் மறைந்துவிட்டது.

நேரு போன்றவர்களுக்குக் கொம்யூனிஸ்டுகள் பிடிக்கவில்லை. ஆனுல் அவர்களது கொள்கைகளும் திட்டங்களும் அவருக்குப் பிடித்திருக்கின்றது. மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமென நேரு சொல்லுகின்றுர். அதே கருத்தையே நம்பூதிரிபாட்டும் வெளியிட்டுள்ளார்.

# தானே இயங்கும் கிரக ஆய்வுக்கூடம்

## வானெலி ஒலிபரப்புக் கருவிகள் இதில் உள

### ருஷியாவின் புதிய கோளம் பற்றிய விபரம்

ருஷியா வானவெளிக்கு அனுப்பியுள்ள தானே இயங்கும் கிரக ஆய்வுக் கூடம் சந்திரனிலிருந்து ஏறத்தாழ 6250 மைல் வரை சென்று நிலவைச் சுற்றிவிட்டு மறுபடியும் பூமியை வந்தடையும்.

இது சந்திரனைச் சுற்றும் போது ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய கண்டங்களிலிருந்து அதனைப் பார்க்கலாம்.

ரெக்கெட்டின் கடைசிக் கட்டத்தில் 613 ருத்தல் நிறையுள்ள இந்த 'ஆய்வுக் கூடம்' பொருத்தப்பட்டிருந்தது. பின்னர் 'ரெக்கெட்'டிலிருந்து பிரிந்த இக்கூடம் தனது பாதையிற் சுற்றத் தொடங்கியது. இதில் விஞ்ஞானத் தொழில் நுட்பக் கருவிகளும், தானே இயங்கும் வெப்பக் கட்டுப்பாடு யந்திரமும் அமைக்கப்பட்டுள்ளன.

சூரியக் கதிர்களாலும் ரசாயனத்தாலும் இயங்கக் கூடிய இரண்டு வானெலி ஒலிபரப்புக் கருவிகளும் இதில் பொருத்தப்பட்டிருக்கின்றன. நாளொன்றுக்கு இரண்டுமுதல் நான்கு மணி நேர இடைவெளியில் இந்த வானெலி, செய்திகளை ஒலிபரப்பிக் கொண்டிருக்கும். இந்த வானெலிக் கருவி பூமியிலிருந்து இயக்கப்படுகிறது.

பூமியிலிருந்து என்றுமே பிரிக்க முடியாத சந்திரனில் உள்ள பாகங்கள் எல்லாவற்றையும்பற்றிய விபரங்களைப் பதிவு செய்யக் கூடிய நுட்பமான கருவிகள் இதிற் பொருத்தப்பட்டுள்ளன.

தானே இயங்கும் 'கொஸ்மிக்' ஆய்வு கூடம் ஒன்றைச் சந்திரனின் பரப்புக்கு விரைவில் அனுப்புவதற்கு ருஷியா திட்டமிட்டிருக்கின்றதாம்.

## வைத்தீசுவர வித்தியாலயத்தில் நவராத்திரி விழா

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நேற்று ஆரம்பித்த நவராத்திரி விழா நாளையுடன் முடிவடையும். இவ் விழா கல்லூரி ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. நாளைக்காலை 9 மணிக்கு திரு. எஸ். பரம் தில்லைராஜாவினது "இன்னிசைக் கச்சேரி" நடைபெறும். அதன் பின்னர், பூஜையும், பிரார்த்தனையும் நடைபெறும்.

# ஈழத்தின் இயற்கைக் காட்சிகள்

★

## 'போட்டோ' அழகுப்போட்டி: மூன்று பரிசுகள்

இலங்கையின் இயற்கை அழகு உலகப் புகழ் பெற்றது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, மலைநாடு உட்பட இலங்கையின் பல பகுதிகளிலும் இயற்கை அன்னையின் வனப்புக்கள் மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்து ஈழநாட்டுக்குப் பெருமை அளிக்கின்றன.

நீங்கள் விரும்பும் அழகுக் காட்சிகளைப் படம் பிடித்து **கலைப்பகுதி, ஈழநாடு, தபாற் பெட்டி எண் 49, யாழ்ப்பாணம்.** என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள்.

இப்படங்களில் தரமானவற்றை அவ்வப்போது 'ஈழநாடு' இதழ்களில் பிரசுரித்து, சன்மானம் அளிப்போம். ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிரசுரமான படங்களைத் தொகுத்து, அவற்றுள் மிகச் சிறந்த மூன்று போட்டோக்களை கலைவல்லுனர் மூவர் அடங்கிய குழு தெரிந்தெடுப்பார்கள். இவற்றுக்கு முறையே ரூ 50, ரூ 25, ரூ 15 என மூன்று பரிசுகளை **ஈழநாடு** அளிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

★ **போட்டோவின் அளவு, 6" X 4"**

★ **முடிவு திகதி 31-12-59**

படங்களுடன் அதுபற்றிய குறிப்பும் அனுப்பப்படவேண்டும். படம் அனுப்புபவரின் பெயரும் விலாசமும் கடதாசியில் தெளிவாக எழுதிப் படத்துடன் இணைத்தல் வேண்டும்.

வின்டோஜெனே




வின்டோஜெனே

எல்லா வலிகளையும் அதிவிரைவில் குணமடையச் செய்யும் வலி நிவாரணி.

எல்லாவித தசைப்பிடிப்பு, தலைவலி, நரம்புத்தளர்ச்சி, கீல் வாதம், இடுப்புவலி, முடக்குவாதம், தொண்டைப்புண், தடிமன் போன்ற வியாதிகளிலிருந்து உடன் குணமடையச் செய்கிறது.

போலிகள் பற்றி எச்சரிக்கையாக இருக்கவும்.

சோல் ஏஜண்டுகள்:

**சிலோன் அன் போரின் ட்ரேட்ஸ் லிமிட்டெட்**

ஏக விநியோகஸ்தர்கள்:

**புரோவின்ஷியல் சப்ளையர்ஸ் லிமிட்டெட்**

125, மெயின் வீதி, கொழும்பு. போன்: 78653

## பூஜ்யம் தபால்

சிவபெருமான்
கயிலையங்கிரி
இமயமலை.

சுவாமி!

அன்று எங்கள் இலங்கையை ஆண்ட இராவணேஸ்வரன், கைலாய மலையைத் தங்களுடன் தூக்கி, இலங்கைக்குக் கொண்டுவரப் பார்த்தானும். தாங்கள் புன்முறுவல் பூத்து, தங்கள் கால் கட்டை விரலால் சற்று அழுத்தவே, இராவணன் நசுங்கியதாயும், பின்னர் யாழை மீட்டிச் சமாதானம் செய்யவே, தாங்கள் மகிழ்ந்து, அவனை விட்டதுடன், அவனுக்குப் பல வரங்களும்அளித்ததாகவும்புராணங்களில் படித்த ஞாபகம். இதையெல்லாம் நான் நம்பவில்லை.

ஆனல் இப்போது,கயிலையங்கிரி மட்டுமல்லாமல், இமயமலை அனைத்தையும், வடகிழக்கே ஈசானதிக்கில் உள்ள மாசேதுங், சௌஎன்லாய் எனும் இரு கம்யூனிஸ தோழர்கள் தங்கள் சீன தேசத்துடனே சேர்த்துக்கொள்ளப் பயமுறுத்துவதாகக் கேள்விப்பட்டேன். உண்மைதானு?

எங்கள் அமரகவி பாரதியார், "மன்னும் இமயமலை எங்கள் மலையே, மானில மீதிது போற்பிறிதிலையே" என்று பெருமையுடன் பாடினுர். தமிழ் நாட்டிலிருந்து காரைக்கால் அம்மையார் புனிதமான கைலாசத்துக்கு, காலால் நடக்கவிரும்பாமல் தலையால் ஊர்ந்து வந்ததாயும், "அம்மையே வருக!" என்று தாங்கள் அழைத்துக் கொண்டதாயும் புராணத்தில் படித்துள்ளேன். தங்களைத் தரிசிக்க கயிலையங்கிரியை நோக்கி வந்த அப்பர் அடிகள், "கைலாசத்துச்சிஉள்ளான்என்கண்ணுளானே" என்று பாடியருளினுர்.

அவ்வளவு புனிதமிக்க கயிலாசத்தை, சீனர்கள் தம்வசப்படுத்த முயலுவதைக் கேட்டு, தங்கள் அடியார்களுக்கெல்லாம் மனக் கலக்கம் ஏற்பட்டுள்ளது.

எல்லாம் அறிந்த தங்களுக்கு இது தெரியாதிருக்க முடியாது. இராவணனுக்குப் புத்தி புகட்டியதுபோல், புதுத்திமிர் பிடித்த சீனர்களுக்கும் செய்யத் தாங்கள் திருவுள்ளம் கொண்டிருக்கிறீர்களா? அல்லது சமாதானத்தை விரும்பும் பாரதப் பிரதமர் நேருவை சோதனை செய்யத்தான் இந்தத் திருவிளையாடலைச் செய்கின்றீர்களா?

எனக்கென்னமோ இதுபற்றி கடுகளவும் அச்சமில்லை. "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பர். நடப்பதெல்லாம் நன்மைக்குத்தானே!

இப்படிக்கு
"பூஜ்யம்"

---

படாதிபதிகள்,
ஹாலிவூட்,
அமெரிக்கா.

ஐயன்மீர்!

ருஷியப் பிரதமர் குருஷேவை நீங்கள் வரவேற்று, அவருக்கு "கான் கான்" படம் ஸ்ருடியோவில் பிடிக்கப்படும் காட்சிகளைக் காட்டியது பற்றி மிக மகிழ்ச்சி.

ஏன் தெரியுமா? அவர் அந்தப் படம் பற்றிக் கூறிய அபூர்வமான ஓர் விமர்சனத்துக்காகத்தான்.

"அந்தப் படத்தில் நடனம் நெறிகெட்டது; ருசியற்றது. இந்த ஆபாசப்படத்தை ருஷியாவில் அனுமதிக்கமாட்டோம். அப் பெண்களின் "பிருஷ்ட பாகத்தைவிட" அவர்கள் நடனம் மேலானதாகும். சாதாரண ஒழுக்கமுள்ள ஒருவருக்கு, அந்த நடனம் புரியாது. ஒரு பெண், அவளது பின்புறத்தைவிட, அழகானவள், ஆனல் எங்களுக்கு அவளது பின்புறங்கள்தான் காட்டப்பட்டன!" என்று சரியான 'டோஸ்' கொடுத்தார்.

நீங்கள் தயாரித்து அனுப்பும் இவ்வித ஆபாசப்படங்களைப் பார்த்துவிட்டு, இங்கு இந்தியாவிலும், இலங்கையிலும் எங்கள் படாதிபதிகளும் அப்படியே காப்பி அடிக்கிருர்கள்! அப்படிப் பிடித்தால்தான் படம் வெற்றிபெறுமென்று நினைக்கிருர்கள். இங்கு எவ்வளவோபேர் இவ்வித ஆபாசத்தைக் கண்டிக்கிருர்களென்ருலும், அதை யார் கேட்கிருர்கள்? உங்கள் காதுக்கு அது எங்கே எட்டப்போகிறது? என்று நான் பலதடவை நினைத்ததுண்டு.

ஆனல் இந்தப்பெரிய கைங்கரியத்தை குருஷேவ் வெகு நன்ருகச் செய்துவிட்டார். அவருக்குப் பெரிய 'தாங்க்ஸ்'.

இனியாவது உங்கள் படங்களில் ஆபாச நடனங்கள் குறையுமா? அதன்மூலம் எங்கள் படங்களும் மேம்படுமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கும்

பூஜ்யம்.

குறிப்பு:-

இரகசியமாக உங்களுக்கு ஒரு வார்த்தை. ருஷியப் பிரதமர் இப்படிக் கூறுவார் என்பது உங்களுக்குத் தெரியாது. அவர் பார்த்ததால் 'கான் கான்' படத்துக்கு உலக விளம்பரம் இலவசமாகக் கிடைத்துவிட்டது. அவர் பார்த்த இப்படத்துக்கு உலகில் இனிப் பெரிய 'டிமாண்டும்' வசூலும் கிடைக்கலாம். எப்படியும் வெற்றி உங்களுக்கேயல்லவா?

பூஜ்யம்

# சந்திரனை வலம் வரும் வான வெளி அவதான நிலையம்

## ருஷிய விஞ்ஞானிகளின் சாதனை

சோவியத் ருஷியா இன்னெரு பிரமிக்கத்தக்க சாதனையை நிலைநாட்டியிருக்கின்றது. மூன்று வாரங்களுக்கு முன் சந்திரனுக்கு வெற்றிகரமாக ஒரு ரொக்கெற்றை அனுப்பிய ருஷிய விஞ்ஞானிகள் சென்ற ஞாயிற்றுக்கிழமை சந்திரனை வலம் வரும் ஒரு வானவெளி அவதான நிலையத்தை அனுப்பியிருக்கின்றனர். பல கருவிகள் பொருத்தப் பட்டுள்ள இவ்வவதான நிலையம் 613 இருத்தல் நிறையுள்ளது. சந்திரனுக்கு சுமார் 6250 மைல் தூரத்தில் வலம் வந்து கொண்டு இருக்கக்கூடிய இந்த "நிலையம்" பூமிக்குத் தோற்றமளிக்காத சந்திரனின் மறுபுறம் பற்றிய விபரங்களை அறிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும். இந்நிலையம் சென்ற புதன்கிழமை உரிய இடத்தை அடைந்துவிடும் என எதிர்பார்க்கப்பட்டது. ஈற்றில் அது பூமியின் செய்மதியாகலாம் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

## உலக நிலை

### யப்பானில் பெரு நஷ்டம்

பலத்த சூருவளியொன்றினுல் ஜப்பானில் இதுவரை ஏற்படாத பெரு நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. ஏறத்தாழ 4000 பேர் இறந்துள்ளனர்; 12,000 பேர் காயமடைந்துள்ளனர்; சுமார் 2000 பேரைக் காணவில்லை. 10 லட்சம் பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

### பிரிட்டனில் பொதுத் தேர்தல்

சென்ற வியாழக்கிழமை பிரிட்டனில் நிகழ்ந்த பொதுத் தேர்தலின் போது 630 தொகுதிகளில் 1536 அபேட்சகர்கள் போட்டியிட்டனர். விபரம் பின்வருமாறு:- கொன்ஸவேட்டிவ் கட்சியும் ஆதரவாளரும் 625; தொழிற் கட்சி; 621; லிபரல் கட்சி 217; கொம்யூனிஸ்ட்கட்சி 18; வெல்ஷ் தேசியக் கட்சி 20; ஸ்கொற்றிஸ் தேசியக் கட்சி 5; சின்வெயின் 12; ஏனையோர்18. 1955 இல் நிகழ்ந்த பொதுத்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில்....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் உற்பத்தியை ஆரம்பிக்குமென எதிர் பார்க்கப்படுகிறது. இதற்கான பரீட்சார்த்த வேலைகள் இப்போது நடைபெறுகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படவிருக்கும் சீனி உயர்ந்த ரகத்ததாயிருக்குமென்று கூறப்படுகிறது.

### விமானத்தளம்

மட்டக்களப்பு நகருக்கருகே அவசரகாலத்தில் ஒரு விமானத்தளம் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டது. விமானத்தளம் அமைக்கப் பட்டதும் விமான சேவை ஆரம்பிக்குமென எதிர்பார்த்த பொதுமக்கள்ஏமாந்துபோனுர்கள். இந்த ஏமாற்றம் மட்டக்களப்பு மாவட்ட இணைப்புச் சபைக் கூட்டத்திலும் எதிரொலித்தது. இதனல் அக்கூட்டத்தில் விரைவில் விமான சேவைக்கான கட்டிடங்களையமைத்து வேண்டிய கருவிகளை இணைக்க வேண்டுமென்ற தீர்மானம் நிறை வேறியுள்ளது.

### மரத்தட்டுப்பாடு

போதிய காடுகளுள்ள இப்பகுதியில் வீடு கட்டுபவர்கள் தேவையான அறுவை மரத்தைப் பெறப் பெருங்கஷ்டப்படவேண்டியிருக்கிறது. இதனுல் உத்தரவுபெருத வியாபாரிகளை நம்பிக் காரியத்தைப் பார்க்க வேண்டி யேற்பட்டுள்ளது. காட்டிலாகா சட்டவிரோதமாக மரவியாபாரஞ் செய்பவர்களை வேட்டையாடுவதில் பெருங் கவனம் செலுத்திவருகிறது. ஆனல் பொதுஜன தேவையைப் பூர்த்திசெய்ய எதுவித நடவடிக்கையும் எடுக்கிருர்களில்லை.

இங்கு இயந்திரமூலம் மரமரியும் ஒருபெரிய தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டாலன்றி பொதுமக்களின் தேவையை அரசாங்கத்தால் பூர்த்திசெய்ய முடியாது.

### கூட்டுறவு மகாநாடு

இம்மாதம் 24, 25ந் திகதிகளில் கூட்டுறவு மகாநாட்டை நகரமண்டபத்தில் நடாத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. திரு. கே. ஆழ்வாப்பிள்ளை இம்மகாநாட்டை ஆரம்பித்துவைப்பார்.

## ஞானேதய வாசிகசாலை அனுதாபத் தீர்மானம்

சாவகச்சேரி வடக்கு மத்திய சனசமூக சேவா சங்கக் கூட்டம் சமீபத்தில் ஞானேதய வாசிகசாலை மண்டபத்தில் திரு. சோ. நாகேந்திர சர்மாவின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு. கு. வன்னியசிங்கத்தின் பிரிவையிட்டு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# இந்தியா - பாகிஸ்தான் எல்லை விவகாரம்

## புது டில்லியில் ஆரம்பமாகும் மாநாடு

பாகிஸ்தான் ஜனுதிபதி ஜெனரல் அயூப் கானும் இந்தியாவின் பிரதம மந்திரி ஜவஹர்லால் நேருவும் சென்ற செப்டம்பர் முதலாம் திகதி சந்தித்து இருநாடுகளுக்கும் இடையே நிலவும் சிக்கல்களை சமரசமாகபேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்துவைக்க வேண்டும் எனத் தீர்மானித்திருந்தார்கள். இதன் முதற்படியாக இம்மாதம் 15-ந் திகதி இருநாட்டு மந்திரிகள் உத்தியோகத்தர்கள் அடங்கிய ஒரு மாநாடு புது டில்லியில் ஆரம்பமாகின்றது. பாகிஸ்தானின் தலைமைப் பிரதிநிதியாக பாகிஸ்தான் உள்நாட்டு மந்திரியும், இந்தியாவின் தலைமைப் பிரதிநிதியாக எஃகு எரிபொருள் மந்திரியும் கலந்து கொள்வார்கள். இம்மாநாட்டில் இந்தியா-பாகிஸ்தான் எல்லைத் தகராறுகள் பரிசீலனை செய்யப்பட்டு அவற்றுக்குத் தீர்வுகள் காண முயற்சிகள் நடைபெறும். ஏழு நாட்களாக நடைபெற இருக்கும் இம்மாநாடு முதல் நான்கு நாட்கள் புது டில்லியிலும் பின்பு கிழக்குப் பாகிஸ்தானின் தலைநகராகிய டக்காவிலும் கூடும் எனத் தெரியவருகிறது.

### இந்தியா-சீன எல்லை விவகாரம்

பிரதமர் நேரு சீனப் பிரதமர் சௌஎன் லாய்க்கு அனுப்பிய கடிதமொன்றில் இந்திய சீன எல்லை பல வருடங்களாக பரம்பரை பரம்பரையாக இருந்து வந்திருக்கிறது என்றும் அந்த எல்லை முழுவதையும் புதிதாக நிர்ணயிக்கத் தாம் உடன்படப் போவதில்லை என்றும், சீனப்படைகள் தாம் ஆக்கிரமித்திருக்கும் இந்தியப் பிரதேசத்திலிருந்து வெளியேறியதும் எல்லையில் செய்யப்பட் வேண்டிய சிறிய மாற்றங்கள் குறித்து தாம் பேச்சுவார்த்தைகள் நடாத்தச் சித்தமாகஇருப்பதாகவும் கூறியிருக்கின்ருர்.

இந்திய அரசாங்கம் 25-9-59 இல் வெளியிட்டிருக்கும் புதிய அரசியற் படத்தில் சீனம் கோரும் இந்தியப் பிரதேசங்களும் காட்டப்பட்டிருக்கின்றன. காஷ்மீரையும், வடகிழக்கு எல்லைப் பிராந்தியத்தில் இந்தியாவுக்குரிய ஏறத்தாழ 40,000 சதுரமைல் பிரதேசத்தையும் சீனம் ஆக்கிரமிக்க அல்லது கைப்பற்றவிரும்புவதாகத்தெரிகிறது.

## இந்தியா

### மேற்கு வங்கத்தில் சூருவளி

மேற்கு வங்காளத்திலும் பிஹார் இராச்சியத்திலும்வீசிய சூருவளியினுலும் வெள்ளப் பெருக்காலும் பெரு நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. மேற்கு வங்காளத்தில் 11பேர் இறந்துபோயினர்; ஆயிரக்கணக்கானவர் வீடுகளை இழந்து விட்டனர். வெள்ளத்தால் துண்டிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து ஏறத்தாழ 50,000 மக்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர். நதிகளில் நீர் மட்டம் அபாய நிலையில் இருப்பதாக மே. வங்காள முதலமைச்சர் கூறியிருக்கிருர்.

இரு இராச்சியங்களிலும் போக்குவரத்து சீர்குலைந்திருப்பதோடு மின்சார விநியோகமும் தடைபட்டிருக்கிறது. சென்ற மாதம் நிகழ்ந்த வெள்ளப் பெருக்கால் மே. வங்காளத்தில் 5 லட்சம் ஏக்கர் விளைநிலம் பழுதடைந்துள்ளது.

### புதிய தேசாதிபதி

ஜெனரல் எஸ்.எம். ஸ்ரீநகேஷ் (வயது 56) அஸாம் இராச்சியத்தின் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிருர். இவர் இந்தியாவின் பிரதம சேனுதிபதியாக 1955 தொடக்கம் 1957 வரை கடமையாற்றியிருக்கிருர். இவர் இம்மாதம் 12-ம் திகதி பதவியேற்கின்ருர்.

### கேரளத்தில் தேர்தல்

தொகுதி, தொகுதியாக வாக்காளர் பட்டியல்களைத் திருத்ஞ் செய்யும் வேலை 1960 ஜனவரி மாதம் முடிவடையும் எனத் தேர்தல் அதிகாரி கூறியிருக்கிருர். எனவே 1960 பெப்ரவரியில்இடைக்காலப்பொதுத் தேர்தல் கேரள இராச்சியத்தில் நடைபெறக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### மந்திரியின் சுகவீனம்

மத்திய கைத்தொழில் வர்த்தக மந்திரியாகிய லால் பகதூர் சாஸ்திரி இருதய கோளாற்றினுல் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிருர்.





உத்தரவாதமுள்ள
ஜெயிஸ் பிளியூட்
நெருப்புத் தண்ணீரையே
வாங்குங்கள்.
'ஜெயிஸ்'
— மார்க்கையும்
'உதய சூரியன்'
அடையாளத்தையும் தாங்கிய
லேபிளேயும் மூடியையுமுடைய
ஜெயிஸ் பிளியூட்
நெருப்புத் தண்ணீரே சிறந்தது.

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு புரட்டாசி மீ 24 உ (10-10-59)

EELA NADU: National Tamil weekly Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna.
*Colombo Office*: 142, New Bullers Road, Colombo 4.


## புதிய பிரதமர் அவர்களுக்கு

புதிய பிரதமர் விஜயானந்த தஹநாயக்கா அவர்களே! பத்திரிகைப் பிரதிநிதிகள் மகா நாட்டிலே சமூக சமரசம்பற்றி தாங்கள் கூறிய நல்வார்த்தைகள் வரவேற்கத்தக்கன.

சிங்கள பாஷா பெரமுனேயின் தலைவராக இருந்த தாங்கள் பிரதம மந்திரி பதவிக்கு வந்திருப்பதால், என்னென்ன புதிய இம்சைகளும் அவமதிப்புகளும் ஏற்படுமோ என்று பொதுவாகத் தமிழ் பேசும் மக்கள் கவலைகொண்டிருந்தனர். கல்வி மந்திரியாகத் தாங்கள் சென்ற மூன்றரை ஆண்டு காலத்தில் இருந்தபோது, சில சமயம் கூறியவையும், கையாண்ட சில நடவடிக்கைகளும், இந்நாட்டிலுள்ள தமிழ்பேசும் மக்களின் மனத்தைப்புண்படுத்தின. தங்கள் பால் அவர்கள் நம்பிக்கையைப் பெரிதும் இழந்தனர்.

"சென்ற சிலவருட காலத்திலே இந்நாட்டில் சிறுபான்மையோரும்,சிறப்பாகத் தமிழ்ச் சமூகத்தாரும் பெரும் பீதியடைந்திருக்கிறார்கள்." என்பதைத் தாங்கள் உணர்ந்து அதைப் பச்சையாக வெளியிட்டீர்கள். மேலும் "இது தற்காலிகமான கட்டமே என்பதை அவர்களுக்குக் கூற விரும்புகிறேன். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போல நாம் இந்நாட்டில் வசிக்கவேண்டும். ஏதாவது வேற்றுமைகளோ, குறைகளோ இருப்பின், அவற்றை நீக்க நான் முயல்வேன்." என்று கூறியதுடன், "அவர்களைப் புண்படுத்தக் கூடிய எதையும் நான் செய்ய மாட்டேன் என்று சிறுபான்மையோருக்கு மனப்பூர்வமாக வாக்குறுதி அளிக்கின்றேன். ஏற்கனவே செய்யப்பட்ட புண்களை ஆற்றவும் என்னால் கூடிய மட்டில் முயலுவேன்" என்றும் தெரிவித்துள்ளீர்கள். நன்று நன்று.

ஆனால் ஓர் அடிப்படையான விஷயம் மொழியைப் பற்றியது. இந்நாட்டிலே 10 வருஷ காலம் வரை சிங்களமும் தமிழும் அரசாங்க மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வந்தன. தாங்களும் எதிர்க்கட்சியில் இருக்கையில் இதை ஆமோதித்து நிறைவேற்றினீர்கள். சென்ற பொதுத் தேர்தல் நெருங்கியதும் யார் செய்த பாவமோ, திடீரெனச் சிங்களம் மட்டும் கூச்சல் கிளம்பியது. பீரங்கிக் காவலுடன், பலத்த எதிர்ப்பினிடையே, பார்லிமெண்டில் ஒரு சில வாக்குகளால் அது நிறைவேறியதும், இந்நாட்டில் இருந்து வந்த சமூக அமைதியும் நல்லுறவும் குலைந்துவிட்டன. பின்னர் நடந்தவையெல்லாம் தாங்கள் நன்கு அறிந்தவையே.

இவற்றை இங்கு எடுத்துச் சொல்ல வேண்டிய முக்கிய காரணம், சமூக அமைதியும் நல்லுறவும் மீண்டும் ஏற்பட என்ன செய்யப்பட வேண்டுமென்பதைத் தங்களுக்கு உணர்த்தவேயாகும். சிங்களம் மட்டும் சட்டம் தமிழ் மக்களுக்குப் பெரிய அவமதிப்பு. அதை நடைமுறைக்குக் கொண்டுவரக் கையாளும் ஒவ்வொரு சிறு நடவடிக்கையும், அவர்கள் மனத்தைப் புண்படுத்துவதாகும். தமிழரை மேலும் புண்படுத்தாமல், பழைய புண்களை ஆற்றவேண்டுமென்ற எண்ணம் உண்மையில் தங்களுக்கு இருந்தால், அந்தச் சிங்களம் மட்டும் சட்டத்தை அகற்றவேண்டும். உடன் அது முடியாவிட்டால், அதை நடைமுறைக்குக் கொண்டுவருவதையாவது நிறுத்தி வைக்க வேண்டும்.

இதைச் செய்யும் துணிச்சல் தங்களுக்கு உண்டா? மரண தண்டனையை மீண்டும் துணிச்சலுடன் நடைமுறைக்குக்கொணர்ந்த தாங்கள், சிங்களம் மட்டும் சட்டத்தை நிறுத்திவைக்குமாறு செய்வது பெரிய காரியமல்ல. அவசரகாலச் சட்டம் வேண்டிய பாதுகாப்பு அளிக்கும்.

மற்றொரு முக்கிய விஷயம் மலைநாட்டுத் தமிழரின் மனித உரிமைகளைப் பற்றியது. தாங்கள் எதிர்க் கட்சியில் இருந்தபோது, மலைநாட்டுத் தமிழர்களின் வாக்குரிமை, பிரஜா உரிமை இவற்றைப் பறிக்கப்படாதென்று பேசிய பேச்சுக்களை எல்லாம் தாங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்: அவர்களுக்குச் செய்யப்பட்ட அநீதிகளையும் நீக்க வேண்டியது தங்கள் பொறுப்பும் கடமையுமாகும்.

இவ்விரு நடவடிக்கைகளையும் வகுப்பு வெறியர்களும், சுய நலமிகளும் எதிர்க்கலாம். ஆனால் அவர்களிடம் தாங்கள் இன்னும் தாட்சண்யம் காட்டி, அவர்களுக்குப் பயந்து நடப்பதாயின், தாங்கள் விரும்புவது போல் இந்நாட்டில்எல்லோரும் ஒரே குடும்பத்தினரைப்போல் வாழமுடியாது போகும். சமூக அமைதியும், ஒத்துழைப்பும் இருந்தால் தான், நாடு பொருளாதாரத் துறையில் முன்னேற முடியும். வாழ்க்கைச் செலவு குறையும். வேலையில்லாக் கஷ்டம் தீரும். உருப்படியான காரியங்களையும் செய்யலாம்.

இவையெல்லாம் தாங்கள் அறிந்ததே. மேலே கூறப்பட்ட இரு விஷயங்களையும் கேட்டு மலைத்துவிடாதீர்கள். இது முடியாத காரியமென்று கைவிட்டுவிடாதீர்கள். முதலில் தமிழ்ப் பேசும் மக்களின் பிரதிநிதிகளையும், தலைவர்களையும் அழைத்து அவர்களுடன் மனம் விட்டுப் பேசுங்கள். குறைகளை அறிந்து, அவற்றைப் படிப்படியாக எப்படி நீக்கலாமென்பதைப் பற்றி அவர்களுடன் சேர்ந்து ஆலோசனை செய்யுங்கள். மனமுண்டானால் மார்க்கமுண்டு. இந்நாட்டு மக்களனைவரும் ஒரே குடும்பத்தினராக வாழுமாறு தாங்கள் செய்தால், தங்கள் பெயர், இலங்கையின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்படுமென்பதற்குச் சநதேகமேயில்லை.

---

## வவனியா பிரதிநிதியின் ராஜினாமா

வவனியா எம். பி. திரு. சுந்தரலிங்கம் ஏற்கனவே அறிவித்ததுபோல் சனப்பிரதிநிதிகள் சபைப் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார். இதில் வியப்பெதுவுமில்லை. ராஜினாமாச் செய்வது அவருக்குப் புதிதல்ல. அவர் ஏற்கெனவே வகித்த பல பெரிய பதவிகளைத் திடீர் திடீரென உதறித் தள்ளியிருக்கின்றார். இது அவருக்கு வழக்கமாகிவிட்டது.

என்றாலும் இம்முறை அவர் தமது ராஜினாமாவுக்கான காரணத்தைப்பற்றி நீண்டதொரு விளக்கம் வெளியிட்டிருக்கின்றார். அதன் விபரம் சென்ற வாரத்து 'ஈழநாடு' இதழில் வெளியாகியுள்ளது. திரு. சுந்தரலிங்கத்தின் ராஜினாமா அர்த்தமற்றதென்றும், தமிழ் பேசும் மக்களுக்கு நன்மை செய்யாதென்றும் பலர் கருதுகின்றனர்.

எம். பி. பதவி வகித்தபோது அவர் வவனியா பட்டின சங்கத்துக்கு அபேட்சகராக நின்று போட்டியிட்டதே தவறு. எம். பி. ஒருவரின் பொறுப்பு விரிவானது. நாட்டு அரசியலைப் பற்றியது. பட்டினசங்க நிர்வாகமோ அரசியற் தொடர்பற்றது. அப்படியிருக்க வவனியாவிலே மூன்று வட்டாரங்களுக்குத் தமதுஅரசியற் கொள்கையின் அடிப்படையிற் போட்டியிட்டது பெரிய அரசியல் தவறு. அரசியற் துறையில் அவருக்குக் கருத்து வேற்றுமை இருக்கலாம். மற்றவர்கள் அவருடன் ஒத்துப் போகாததால் ஏமாற்றமடைந்திருக்கலாம். தமது வாக்காளரின் விருப்பத்தை அறிய அவர் தமது எம். பி. பதவியை ராஜினாமாச் செய்து, மீண்டும் போட்டியிட்டிருப்பதே முறையாகும். அதைவிட்டு, பி. ஏ. வகுப்பு மாணவன், அரிச்சுவடி பரீட்சை எழுதுவதுபோல் அவர் பட்டின சங்கத்துக்குப் போட்டியிட்டார், அதிலும் தோற்றார். பின்னர் சில மாதங்கள் சபைக்குப் போகாமலே இருந்து இப்போது சபையிலிருந்து ராஜினாமாச் செய்து விலகுகிறார்.

தமிழுக்கு இதுவரை செய்யப்பட்டுள்ள பல அநீதிகளையும், இலங்கையில் ஜனநாயகத்தின் பேரால் நடக்கும் கேடுகளையும் அவர் விவரித்து, தமிழருக்குத் தனி அரசே வேண்டுமென்றும், அதற்கு உழைப்பதற்காகவே தாம் ராஜினாமாச் செய்துள்ளதாகவும் கூறுகிறார். பட்டினசங்கத் தேர்தலில் அவர் வெற்றிபெற்றிருந்ததாக வாதத்துக்காக வைத்துக்கொள்வோம். பதவியை அவர்கூற்றின்படியே இன்று துறந்திருக்க மாட்டார். ஆகவே, அச் சபையின் மூலம் தமிழருக்குத் தொண்டாற்ற முடியாதென அவர் கருதவில்லை. அப்படியாயின் இன்று அவர் அச் சபையிலிருந்து எதற்காக விலகவேண்டும்? தமது இலட்சியத்தை அடைவதற்குச் சனப்பிரதிநிதிகள் சபைமூலம் பணி செய்ய முடியாதா? அவரது உள்ளத்தை அறிந்துகொள்ள முடியாதிருக்கிறது

பார்லிமெண்ட் தேர்தலுக்குப் போட்டியிடுவதற்கு அவருக்கு எவ்வளவு உரிமையுண்டோ, அதே உரிமை விலகுவதற்கும் உண்டு. ஆனால், இன்று தமிழ் அரசியல்வாதிகளில் மூத்தவர் அவர். நீண்ட கால அனுபவமும், பேச்சுத் திறனும், மிகுந்த ஆற்றலும் படைத்த இப் பெரியாரின் சேவைகளை இவ் வேளையில் இழப்பது, தங்களுக்குப் பெரிய நஷ்டமென்று தமிழர் உணர்ந்து அவர் செய்துள்ள தீர்மானம் பற்றிவருந்துகிறார்கள். அவரது ராஜினாமாவின் பயனாக, தமிழரின் கஷ்டங்கள் தீர இனி வழி ஏதும் பிறக்குமாயின் அவரது தற்காலிக அரசியல் துறவுபற்றி எவரும் வருந்த வேண்டியதேயில்லை.

---

## புது சீனத்துக்கு இடமில்லை

புது சீனத்தை ஐக்கிய நாடுகள் சபையில் சேர்த்துக் கொள்வது பற்றி ஆலோசிக்க வேண்டுமென்று இந்தியா கொண்டுவந்த தீர்மானம் ஐ. நா. பொதுச்சபையில் தோற்றுவிட்டது. இது தவறான முடிவாகும். இலங்கையும்கூட இத் தீர்மானத்தைப் பலமாக ஆதரித்தது.

எல்லைப் புறத்தில் "ஆக்கிரமிப்பு" நடாத்தியும்கூட புதுச் சீனத்தை ஐ. நா. சபையில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று இந்தியா விடாமல் முயற்சிசெய்யக் காரணமுண்டு. ஐ. நா. சபையில் புதுச்சீனமும் அங்கத்துவரானால்,அதைக் கட்டுக்கடங்கி நடக்குமாறு கேட்கலாம். கீழ்த்திசை அமைதிக்கும் இது வழிசெய்யும்.

ஆனால் புதுசீன அரசாங்கம் "சட்டவிரோதமானது" என்று காரணம் கூறி, அத் தீர்மானத்தை மேற்கு வல்லரசுகள் எதிர்த்து நிராகரித்து விட்டன. மன்னர்களைக் கொலை செய்தும், திடீர் புரட்சி நடத்தியும் அமைக்கப்பட்டுள்ள பல அரசாங்கங்களை ஐ. நா. சபையில் அங்கத்தினராக அனுமதித்திருக்கையில், 60 கோடி மக்களடங்கிய பெரியதோர் ஆசிய தேசத்தை ஏன் அதில் அனுமதிக்க மறுக்க வேண்டும்? என்பது விளங்கவில்லை. புதுச்சீனம் இல்லாததால், ஐ. நா. ஸ்தாபனத்துக்குத்தான் பலவீனமாகும். சீப்பை ஒளிப்பதால் கல்யாணம் நின்றுவிடாது. எதிர்காலத்தில் புதுச்சீனம் உலகிலேயே முதன்மையான வல்லரசாகும் என்று குருஷேவ் கூறியது குறிப்பிடத்தக்கது.

---

## சக்தியின் ஆட்சி

உலகம் தோன்றிய காலந் தொட்டுச் சக்தியின் ஆட்சி நிலைத்து வருகின்றது. கீழைத் தேச மக்கள், சிறப்பாக இந்துக்கள் **சக்தியைத்** தெய்வமாகக் கருதி அதற்கு மிகுந்த மதிப்புக் கொடுத்துவருகின்றனர். மேனாட்டினர் சக்தி(Energy)யைக்கொண்டு உலகத்தை ஆக்கவும் அழிக்கவும் செய்து வருகின்றனர். வீட்டிலும் வெளியிலும் பெண்ணுக்கு முதன்மை அளித்து வரும் இந்துக்கள் சக்தியையும் பெண்ணை உருவகித்து அவளை வழிபாடு செய்துவருகின்றனர்.

**தெய்வம் யாவும்**
**உணர்ந்திடுந் தெய்வம்;**
**தீமை காட்டி**
**விலக்கிடுந் தெய்வம்;**
**உய்வ மென்ற**
**கருத்துடை யோர்கள்**
**உயிரினுக் குயிராய தெய்வம்;**
**செய்வ மென்றொரு**
**செய்கையெடுப்போர்**
**செம்மை நாடிப்**
**பணிந்திடு தெய்வம்;**
**கைவருந்தி உழைப்பவர்**
**தெய்வம**
**கவிஞர் தெய்வம்,**
**கட்வுளர்தெய்வம்.**

என சுப்பிரமணிய பாரதியார் உயிரினுக் குயிராகிய தெய்வத்தின் உயர்வைப்பற்றி நன்கு விளக்கியிருக்கின்றார். சொகுசான வாழ்க்கையை வாழ்பவர்களும், தமது உடலை வருத்தி உழைப்பவர்களும், கவிஞர்களும் ஒருமித்து வணங்கும் அறிவுத் தெய்வமாகிய சக்தியின் அருளை இன்று உலகமே வேண்டி நிற்கின்றது. மேனாட்டிலும் சரி கீழ்நாட்டிலும்சரி சக்தியின் அருளுக்குத் தலை வணங்காதவர்களே இலர். அவளுடைய ஆட்சி நாடெங்கணும் நிலவி வருகின்றது. ஏழையின் உள்ளத்திலும் வீரனின் உள்ளத்திலும் கைவருந்தி உழைப்பவன் உள்ளத்திலும் அவள் ஒருங்கே நடமாடி உலகை இயக்குகின்றாள். சக்தி வழிபாடு உழைப்பின் உயர்வையே எமக்கு உணர்த்தி வைக்கின்றது. இன்று சக்தியின் சிலம்பொலி உலகெங்கும் கேட்கும் புனித நாளாகும். கலையின் விளக்கத்தை வீடு தோறும் கண்டு மகிழும் நாளும் இதுவே. அவள் ஒளி எங்கும் ஒளிர்வதாக!

## அன்பே சிவம்!

ஒரு தமிழ்க் கிழவனார்; வயது எழுபதுக்கு மேலிருக்கும். இலங்கைத் தோட்டங்களில் சிப்பந்தியாக ஐம்பது வருஷங்களுக்கு மேல் வேலை பார்த்தாராம். சென்ற வருஷம் நடந்த கலகத்தில் அடிபட்டார். இங்கு அவருக்கு யாருமில்லை. இந்தியாவுக்குத் திரும்பிவிட வேண்டுமென்று ஆவல் கொண்டார்.

கொழும்பு, கண்டி இவ்விடங்களிலுள்ள இந்திய தூதுவராலயத்துக்கு நடையாக நடந்தார். பார்க்காதவர்களையெல்லாம் பார்த்தார். "எப்படியாவது இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பி விடுங்கள். அங்கு போய் தலையைச் சாய்க்கிறேன்" என்று பலரையும் வேண்டினார்.

"இந்தியாவில் நீங்கள் பிறந்த அத்தாட்சிப் பத்திரத்தைக் கொண்டுவாருங்கள்" என்று தூதுவராலயத்தில் சொல்லிவிட்டார்கள்.கிழவனார் இந்தியாவில் பலருக்கும் எழுதினார். தந்தி அனுப்பினார். பிச்சைவாங்கியாவது 'சம்திங்' ஏதாவது தருகிறேன் ஒரு சர்ட்டிபிகேட் அனுப்புங்கள் என்று மன்றாடினார். ஆனால் அவருக்கு இந்தியாவிலிருந்து ஒருவர் கூட பதில் போடவில்லை. பணமில்லாதவனை, அனாதையை யார்தான் லட்சியம்செய்வர்? பிறந்த சர்ட்டிபிகேட் இல்லாததால் இந்தியா செல்லமுடியவில்லை.

* * *

அவருக்கு சலரோகம். கண்டி ஆஸ்பத்திரியில் இருகால்களையும் துண்டித்து விட்டனர். நொண்டியாகிவிட்டார். நடக்க முடியாது. சிலரிடமிருந்து யாசகமெடுத்த பணமும் வைத்தியச் செலவுக்கு ஆகிவிட்டது.

ஒரு தோட்டத்திலே ஒரு குடிசையில் தங்கியிருப்பதாயும், அங்கிருப்பவர்களும் வெளியேறிவிடுமாறு வற்புறுத்துவதாகவும், எங்காவது, ஓர் அனாதை விடுதியில், சேர்க்குமாறும் அழுது, அழுது எழுதியிருந்தார்.

கொழும்பிலுள்ள வயோதிகர் விடுதிக்குச் சென்று விசாரித்தேன். அங்கிருந்த "மதர்" மிக அன்புடனே எல்லாம் கேட்டார். கொழும்பு விடுதியில் சிங்களம் பேசுபவரே அதிகமென்றும், மட்டக்களப்பிலுள்ள விடுதியில் இடமிருக்கிறதா? என்று தந்தி கொடுத்துக் கேட்பதாகவும் கூறினார். தந்தி அடித்ததில்இடம் இருப்பதாகப்பதில் கிடைத்தது. அங்கு செல்லுமாறு அவருக்குப்பதில் எழுதிவிட்டு, ஒரு நண்பரிடம் இதைப் பற்றிச் சொன்னேன்.

"அடடா! அவரை கிறிஸ்தவராக்கிவிடுவார்களே. இந்து வயோதிகர் விடுதி ஒன்றிலும் சேர்க்க முடியாதா?" என்று கேட்டார். இந்துக்களுக்காக ஒரு வயோதிக விடுதியும் இலங்கையில் கிடையாதென்று தெரிந்தது. "அன்பே சிவம்" என்றும், "மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" என்றும் கூச்சல்கள் எழுவதைக் கேட்கிறோம். ஆனால் சைவர்கள், இந்துக்கள், இவ்வித சமூக தர்மத்தை, அன்புப் பணியை எங்கே செய்கிறார்கள்? கிறிஸ்தவ 'மதர்' மார்களைப்போல் சங்க தொண்டுக்கே தங்களை அர்ப்பணிக்க சைவப் பெண்மணிகள் எப்போது முன்வரப் போகிறார்கள்?

—ஐயாறன்

# இரத்தினக் கம்பளம்

பதுமன்

கோப்பாய் தொகுதிக்குத் திருமதி கோமதி வன்னியசிங்கம் தமிழரசுக் கட்சியின் சார்பிற் போட்டியிடுவது நிச்சயமாகிவிட்டது. கட்சியின் முடிவையேற்று அம்மையார் தேர்தல் காற்றில் 'போட்டி' யென்ற படகை மிதக்கவிடுவார். எதிர்க்கட்சிகளிலிருந்து சண்டமாருதம் கிளம்பினாலும் அவருக்குப் பக்கபலமாக இருப்பதற்குத் தமிழரசு மாலுமிகள் தான் உஷாராக இருக்கின்றார்களே!

தமிழ்க் காங்கிரஸ் இதனைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கப் போவதில்லை. அச்சுவேலிப் புரக்டர் திரு. குணரத்தினம் என்பவர் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிட முன் வந்துள்ளாராம். சமசமாசக் கட்சியின் அபேட்சகராகத் திரு. பாலசிங்கம் என்பவர் போட்டியிடுவாராயின் கொம்யூனிஸ்டுகள் திரு. எம். ஸி. சுப்பிரமணியத்தைக் களத்தில் நிறுத்துவார்களாம். கோப்பாய் உபதேர்தல் சம்பந்தமாக ஊரெழு ஆசிரியர் திரு. நடராசா என்பவரின் பெயரும் அடிபடுகின்றது.

இந்த உபதேர்தலில் கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு. ச. பேரின்பநாயகம் போட்டியிடுவார் என்பது உண்மையாகிவிட்டது. அவர் எந்தக் கட்சியின் ஆதரவில் தேர்தலில் இறங்குவார் என்பதைப் பற்றிப் பின்னர் தெரிந்து கொள்வீர்கள்.

### வவனியாவில்

அரசியலில் தனிக்காட்டு இராஜாவாக விளங்கிய அடங்காத் தமிழர் முன்னணித் தலைவர் திரு. ஸி. சுந்தரலிங்கம் வவனியாத் தொகுதி எம். பி. பதவியை உதறித் தள்ளிவிட்டார். நினைத்ததைச் சாதித்து முடிக்கும் இயல்பினரான திரு. சுந்தரலிங்கத்தின் கடந்தகால வாழ்க்கையைக் கவனித்து வருபவர்களுக்கு இச்செய்தி ஆச்சரியத்தை ஊட்டமாட்டாது. பதுமன் இங்கு ஏற்கனவே எழுதியது போல வவனியாத் தொகுதி உபதேர்தலில் பட்டின சங்கத் தலைவர் திரு. சுப்பிரமணியம் போட்டியிட முன் வருவாராயின் அது ஆச்சரியமாகாது!

கிராம விவசாயப் பகுதியைச் சேர்ந்த திரு. எஸ். சிவசிதம்பரம் என்பவரின் பெயரையும் போட்டியிடுபவர்களின் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம். இவருடன் கூடவே சமசமாஜக் கட்சியின் அபேட்சகராக இளம் அப்புக்காத்து ஒருவரும் பலப் பரீட்சையில் இறங்குவார் என்ற செய்தியையும் தட்டிக் கழித்துவிட முடியாது. இவருடைய தகப்பனார் வவனியாவிலுள்ள வியாபாரிகளிடையே ஒரு புள்ளி எனவும் அறிகிறேன்.

### அந்தச் சங்கம்!

இங்கு சிலவாரங்களுக்கு முன்னர் வவனியாவுக்கு அணித்தாகவுள்ள ஓர் இடத்தில் முளை கொண்ட யாழ் அகற்று சங்கம் பற்றி எழுதியிருந்தேன். அதைப்பற்றி நமது வவனியா நிருபர் என்ன கூறுகிறார் தெரியுமா? கேளுங்கள்:

நெடுங்கேணியில் உருவான இக்'கற்பனைச் சங்கம்'வவனியா எங்கும் காட்டுத் தீ போலப் பரந்துவிட்டது. வஞ்சகம் சூது அறியாத வவனியா மக்களை ஏமாற்றும் விதத்தில் யாரோ ஒரு தமிழாசிரியர், தனது சுயநலத்தை முன்னிட்டு, தனது மனைவியின் பிறந்தகம் யாழ்ப்பாணம் என்பதையும் மறந்து துவேஷ மனப்பான்மையைத் தமிழ் மக்களிடையே விதைத்து விட்டார் என்ற பேச்சும் ஆங்காங்கு ஒலித்துக்கொண்டே இருக்கிறது. நகரகாவலர் ஒருவரே ஆச்சரியத்துடன் என்னை வினவத் தொடங்கிவிட்டார். குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்புகளாக இருக்கக்கூடாது தமிழ்மக்கள் என்ற பரந்த நோக்கம் பலரிடையே இப்போது ஏற்பட்டுள்ளது.

# ஒற்றுமையே உயர்வளிக்கும்

## தாழ்ந்த தமிழினத்துக்கு முன்னாள் வவனியா எம். பி. வேண்டுகோள்

## கோப்பாயிற் போட்டியிடும் எண்ணம் இல்லை

— நமது சிறப்பு நிருபர் —

வவனியா இராஜாவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? நீங்கள் கேள்விப்படாவிட்டாலும் சென்ற வருடம் நடைபெற்ற வகுப்புக் கலவரத்தின் போது இலங்கை மந்திரிகளில் ஒருவர் அப்படி ஒரு இராஜா வவனியாவின் ஆட்சியைக் கையேற்று விட்டதாக நம்பினார். அதுவும் தமிழ் இராஜா என்றால் நீங்கள் நம்புவீர்களோ என்னவோ! அந்த இராஜா யாராக இருக்கலாம் என எண்ணுகின்றீர்கள்?

அந்த இராஜா திரு. ஸி. சுந்தரலிங்கமல்லாமல் வேறு யாராக இருக்க முடியும்? சென்ற வகுப்புக் கலவரத்தின்போது கிளம்பிய வதந்திகளில் இப்படியுமொரு செய்தி பிறந்து, பொறுப்புள்ள மந்திரி ஒருவரின் வாயினின்றும் பறந்ததாகத் தெரிகின்றது. திரு. சுந்தரலிங்கமே இதனைச் சொல்லி உரக்கச் சிரித்தார்.

வவனியாவில் கண்டி றேட்டிலே சொந்தமான ஒரு இல்லத்தை அமைத்துக்கொண்டு ஹான்சாட் புத்தகங்களையும் பழைய வரலாறுகளையும் மிகக் கவனமாக அலசி ஆராய்ந்து கொண்டிருக்கும் திரு. சுந்தரலிங்கத்தைப் பார்த்துத் தமிழினத்தின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகின்றதெனக் கேட்டபோது, அவர்தாம் ஆதரித்து நிற்கும் தனித்தமிழ் அரசு தான் தமிழினத்துக்கு விமோசனம் அளிக்குமெனத் தெரிவித்தார். இதில் அவருக்கு நல்ல நம்பிக்கையுமிருக்கின்றது.

### சைப்பிரஸ் மக்கள் வீரம்

இதுபற்றி அவர் தொடர்ந்து நியதாவது: தமிழ் ஈழம் என நான் குறிப்பிடும் தனித் தமிழ் அரசை உருவாக்கலாமோ எனச் சிலர் என்னைக் கேட்கலாம். அது முடியக் கூடிய காரியமென நான் துணிந்து கூறுவேன். சைப்ரஸ் நாட்டைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். (இது துருக்கியிலிருந்து தெற்கே 40 மைல் தூரத்திலும் சீரியாவிருந்து மேற்கே 60 மைல் தூரத்திலும் உள்ளது. பரப்பு 3.572 சதுரமைல்: மக்கள் தொகை 536,000)

இங்குள்ள மக்கள் சென்ற ஆண்டுதான் பிரித்தானிய ஆதிபத்திய விலங்குகளைத் தகர்த்தெறிந்து வீரசுதந்திரமடைந்தனர். அவர்களின் எண்ணிக்கை எங்களிலும் பார்க்க குறைவு. அவர்கள் குடியிருக்கும் பிரதேசம் வடமாகாணத்திலும் பார்க்கப் பரந்த பிரதேசமுமல்ல. இவ்வளவு சிறிய நாடு இத்தனை பெரியதொரு ஏகாதிபத்தியத்தை முறியடித்திருக்கின்றதே.

தமிழ்த் தலைவர்களிடையே ஒற்றுமை வேண்டுமென்பதை வற்புறுத்தி அவர் தெரிவித்ததாவது:

### ஒற்றுமை வேண்டும்

தமிழினம் ஒன்றுபட்டு நின்றாலன்றி அடுத்த பார்லிமெண்டில் அவர்களின் குரல் கேட்கவேமாட்டாது. 157 பிரதிநிதிகள் கொண்டு விளங்கப்போகும் புதிய பார்லிமெண்டில் ஆகக்கூட 17 தமிழ்ப் பிரதிநிதிகள் தாம் இருப்பார்கள். யு. என். பி., எஸ். எல். எப். பி., எல். எஸ். எஸ். பி.,ஸி. பி.ஆகியவற்றிடையே ஏற்படும் பலப் போட்டியில் ஏதாவது மாறுதல் ஏற்படுத்துமளவுக்குத் தான் இவர்கள் உபயோகமாயிருப்பார்களே யன்றி, மற்றும்படி கணக்கிற் சேர்க்கப்படாதவராகவே கணிக்கப்படுவர்.

தமிழ்த் தலைவர்களிடையே ஒத்துழைப்பும், தமிழ்பேசும் மக்களிடையே ஒற்றுமையும் ஏற்படவேண்டுமென்ற ஒரே உயர் நோக்கத்துக்காகவே, நான் வவனியாப் பட்டின சங்க வாக்காளப் பெருமக்களின் தீர்ப்பை அப்படியே ஏற்றுக் கொண்டேன். ஒருவேளை நான் அரசியலை விட்டு விலகியது தற்காலிகமோ, என்னவோ?

தமிழினத்தின் ஏகபோகப் பிரதிநிதிகள் தாமே என்று கூறிக் கொள்ளும் தமிழரசுக் கட்சியினர் தமிழினத்துக்கு ஆகவேண்டியவற்றைச் செய்து கொள்ளட்டும்.

இன்றுவரை தமிழரசுக் கட்சித் தலைவர்கள் பெற்ற பேறுகள் தாம் என்ன? துக்கம், துயர், அழிவு, அடிப்படை உரிமைகள் பறிமுதல் இவைகள் தாம்! 1958-ம் ஆண்டில் நடைபெற்ற வகுப்புக் கலவரத்தின்போது ஏற்பட்ட கொலைகளில் இவர்களுக்கும் பங்குண்டு.

### பொய்யான போர்வை

இவர்களின் ஆஷாடபூதித்தனம், திருகுதாளங்கள் நேர்மையற்ற செயல்கள் யாவும் 'நேர்மையுள்ள தலைமை' என்ற போர்வையில் நடைபெற்று வருகின்றன. இவை சம்பந்தமான விபரங்களை விரைவில் வெளியிடுவேன்.

சமய சந்தர்ப்ப வாதத்திலோ, மறைந்த ஒரு தலைவருக்கு செலுத்தப்படும் அனுதாபத்திலோ, பந்தல்கள் கள் மலர் மாலைகளிலோ அன்றேல் அடுக்கு மொழிப் பிரசங்கங்களிலோ ஈழத்தமிழரின் பார்லிமெண்ட் பிரதிநிதித்துவம் தங்கி நிற்கமுடியாது.

தமிழ்ப் பிரதிநிதி ஒருவர் மிகக்கடினமான வாழ்க்கையை மேற்கொண்டு கண்ணீர் சொரியவேண்டி நேரிடும். தனது உயிரைக் கையிற் பிடித்துக் கொண்டு ஆபத்துக்கள் நிறைந்த காடுகளில் வாழ வேண்டிய நிலைமையும் ஏற்படக்கூடும். ஆகவேதான் தகுந்த தலைவர்களிடம் தமிழினத்தின் எதிர்காலம் ஒப்படைக்கப்பட வேண்டுமென நான் வற்புறுத்திக் கொண்டு வருகிறேன்.

தமிழ்மக்கள் இலங்கையில் சுதந்திரத்துடன் வாழவேண்டுமென விரும்பும் தாங்கள் பார்லிமெண்ட்பதவியை ராஜினமாச் செய்திருக்கின்றீர்களே. கோப்பாய்த் தொகுதியிற் போட்டியிடும் எண்ணம் தங்களுக்கு உண்டா, எனக் கேட்டபோது, திரு.சுந்தரலிங்கம்கூறியதாவது

கோப்பாய்த் தொகுதியிலோ அன்றேல் வவனியாத் தொகுதியிலோ நான் போட்டியிடப் போவதில்லை. தனித்தமிழ் அரசை நிறுவி தமிழ் ஈழத்தை மீண்டும் மலரச் செய்வதே எனது நோக்கமாகும். இக் கொள்கையை ஏற்பவர்களுடன் சேர்ந்து நானும் உழைப்பேன்.

# சிங்களரும் தமிழரும் ஒருமித்துவாழலாம்

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தியைத் தமிழினம் நம்புவதற்குப் பின்னிற்கும்.

நுட்பத் தொழிற் கல்லூரியில் தமிழ் மாணவர்களுக்குள்ள கஷ்டங்களை நீக்குமாறு புதிய பிரதமர் உத்தரவு பிறப்பித்திருக்கிறாரே, அதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? என்றேன்.

'இன்று தமிழினம் அடைந்துவரும் இன்னல்களோ அளப்பில என்பதை வெளிநாட்டினரே உணர்ந்து விட்டனர் என்று ஆரம்பித்து அவர் கூறியதைக் கேளுங்கள்: நுட்பத் தொழிற் கல்லூரி (தொழில் நுட்பக் கல்லூரி எனக் கூறுவதை அவர் விரும்பவில்லை.) சம்பந்தமாகப் பிரதமர் கையாளும் நடவடிக்கை எவ்வளவு தூரம் கைகூடுமென்பதைத் தமிழினம் ஆவலுடன் பார்த்துக்கொண்டிருக்கிறது. சிங்களம் மட்டும் சட்டமும், மந்திரிமார், உயர்பதவி அதிகாரிகள் போன்றோரின் விஷமச் செயல்களும் தமிழினத்தைப் படாதபாடு படுத்திவிட்டன. இவையனைத்துக்கும் பிரதமர் விரைவிற் பரிகாரம் கண்டபின்னர் தான் தமிழினத்தின் உள்ளத்துள் குடிபுகுந்துள்ள திகிலும் ஐயப்பாடும் அகலுமென எண்ணுகின்றேன்.

திரு. தஹநாயக்கா கல்வி மந்திரியாக இருந்தகாலத்தில் பல துறைகளில் தமிழினத்தைப் பாதிக்கும்முறையில் அவர் நடந்துகொண்டார். நுட்பத் தொழிற் கல்லூரியிற் சிங்களம் ஒன்றே கல்விமொழியாக இருக்கவேண்டுமென முடிவு செய்தவரும் அவரே. வெளிநாடுகளுக்கு அரசினர் உதவி பெற்றுச் செல்லும் வாய்ப்பினைச் சிங்கள ஆசிரியர்களுக்கும் வேறு துறைகளிற் சேவை செய்யும் சிங்களர்க்கும் கிடைக்கச்செய்தவரும் இவரே. இவை யாவற்றையும் எண்ணிப் பார்க்கும்போது திரு. தஹநாயக்காவிற்கு மன மாற்றம் ஏற்பட்டிருக்கிறதென நம்புவது அவ்வளவு எளிதல்ல. ஆனால், திரு. தஹநாயக்கா ஒரு புத்திசாலி. இந்த மூன்றரை வருடகாலமும் நாடு அல்லோல கல்லோலப்பட்டதற்கு சிங்களம் மட்டும் சட்டமே காரணமென்பதை அவர் உணர்ந்திருக்கக் கூடும். ஆனபடியால் தான் அவருடைய கொள்கை மாறியிருக்கக்கூடுமென நான் கருதுகின்றேன்.

திரு. தஹநாயக்காவின் வீரதீரச் செயல்களை இவ்வளவில் நிறுத்திவிட்டு முன்னாள் வவனியா எம். பி. திரு. சுந்தரலிங்கம் தமிழினத்துக்குச் சிபார்சு செய்யும் தனித்தமிழ் இராச்சியத்தைப்பற்றிப் பேசலானோம். திரு. சுந்தரலிங்கத்தின்மீது திரு. பேரின்பநாயகத்திற்குப் பெருமதிப்புண்டு. எனினும் தான் சரியெனக் கருதுவதைப் பிறருக்கு எடுத்துரைப்பதற்கு அவர் ஒருபோதும் பின்னிற்பதில்லை. திரு. சுந்தரலிங்கம் காட்டும் வழியைப்பற்றி அவர் கூறியதாவது:

**சிங்களரும் தமிழரும் ஒரு**மித்து வாழமுடியாதென்ற முடிவுக்கு நான் இன்னும் வரவில்லை. நாடு பிளவுபடுவது இருபகுதியினருக்கும் பேராபத்தாய் முடியும். இதனை நான் பலமுறை கூறியுள்ளேன். ஒத்துழைப்பை விரும்பும் மனப்பான்மை சிங்களரிடமும் தமிழரிடமும் போதியளவு உண்டென நான் நம்புகின்றேன். திரு. சுந்தரலிங்கம் எனது அன்பையும் அபிமானத்தையும் பெரிதும் பெற்ற பெரியார். அவருடைய உள்ளத்தில் ஏற்பட்டுள்ள வைராக்கியத்தை விளங்கிக்கொள்வது கஷ்டமன்று எனினும் அவர் காட்டும் வழி தமிழினத்துக்கோ, ஈழநாட்டுக்கோ நன்மை பயக்குமென நான் கருதவில்லை.

ஃ ஃ ஃ

ஒரு சுந்தரலிங்கமும், ஒரு செல்வநாயகமும், ஒரு பேரின்பநாயகமும், ஒரு பொன்னம்பலமும் எத்தனையோபேருக்கு வகை சொல்லக்கூடியவர்கள். இத்தனைபேரும் ஒருமுகமாகக் கருமமாற்றினால் தமிழினத்தின் எதிர்காலம் எப்படியாகும்? வாசகரே நீர் என்ன நினைக்கின்றீர்?

—அஜன்

# ஆற்றல் மிக்க பிரதமர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், அவரைப் பதவிக்குக் கொண்டு வந்த தீவிரவாதிகள், தீக்கோழி தலையை மணலில் புதைப்பதுபோல், உண்மையை உணராமல் தங்கள் பிடிவாதக் கொள்கையைக் கடைப் பிடித்தார்கள். அத்துடன் தமிழர்களிலும் சில தீவிரவாதிகள் அவர் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் தடை போட்டுக் கொண்டிருந்தார்கள். அவருடைய ஆதரவாளர்களும் தமிழ் தீவிர வாதிகளுமாகச் சேர்ந்து அவர் சமரசமாகச் செய்து முடிக்கக் கூடிய ஓர் அலுவலுக்குக் குறுக்கே நின்றார்கள். இந்தியத் தோட்டத் தொழிலாளர்களைப் பற்றியும் அவர் குறித்திருந்த பரிகாரத்தை மீண்டும் இந்த தீவிர வாதிகளின் கட்டுப்பாடு தடுத்துவிட்டது.

### நல்ல பாடம்

திரு. பண்டாரநாயக்காவின் மரணத்திலிருந்து நாம் ஒரே ஒரு பாடத்தைப் படிக்கலாம். இலங்கையில் வாழும் எல்லாச் சமயத்தவரும் எல்லாச் சாதியினரும் ஒன்று கூடி உழைத்தால் தான் நாம் முன்னேற முடியும். தீவிர வாதிகள் எல்லோரையும் தொலைக்க வேண்டும். அவர்கள் வீணாக விரயம் செய்யும் சக்திகள்யாவும் தேச முன்னேற்றத்துக்காகச் செலவழிக்கப்படவேண்டும்.

திரு. பண்டாரநாயக்காவின் மரணத்தையிட்டு நாம் துக்கம் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், அவர் எந்த லட்சியங்களைப் பின்பற்றினாரோ அவற்றைத் தொடர்ந்து நாமும் பின்பற்றுவது தான் அவருக்கு நாம் செய்யக்கூடிய சிறந்த சேவை.

செனேட்டர் நடேசனைத் தொடர்ந்து, செனேட்டர் கே. ஆதமலி, சேர் சங்கரப்பிள்ளை பரராசசிங்கம் முதலியவர்களும் பேசினார்கள்.

### தமிழுக்கு அந்தஸ்து

சிங்களம் மட்டும் ஆர்ப்பாட்டம் உச்சியிலிருந்தபோது கூட அவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் தமிழுக்கு நீதியான அந்தஸ்து வழங்க வேண்டுமென்று விரும்பியிருந்தார்கள். ஆனால், அவரைத் தூக்கி வைத்த தீவிர வாதிகள் அதை ஒப்புக்கொள்ளவில்லை. அவர் கட்சியிலிருந்த தீவிர வாதிகளும் பிறரும் அவருடைய பிராந்தியச் சுதந்திரம் என்ற கொள்கையைப் பிய்த்தெறிந்து விட்டார்கள். தமிழர்களும் கூட, தங்கள் தீவிரக் கொள்கைகளினால் அவருடைய முயற்சிகளைத் தடுத்துவிட்டார்கள்.

இந்தியத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினைகூட இப்படித்தான். இந்த விஷயமாக நான் அவருடன் அநேக தடவை ஆலோசித்திருக்கிறேன். ஆகையினால் எனக்கு இதைப்பற்றி நன்றாக விளங்கும். இந்தப் பெரும் பிரச்சினையை அவர் நேர்மையான முறையில்தீர்த்து வைக்க ஒரு தருணம் பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் இதிலும், தீவிர வாதிகள் அவரைத் தடுத்து விட்டார்கள்.

அவரை அரசியல் தலைமைப் பதவிக்குத் தூக்கி வைத்தவர்களையும், மறைமுகமாக அவரை நாட்டின் தலைவனாக்கியவர்களையும் அவர் நேர் முகமாகத் தாக்கிப் பேச முடியாது போய்விட்டது.

பிரதமர் பண்டாரநாயக்கா, தானே உற்பத்தியாக்கிய புரட்சிக்குப் பலியாகி விட்டாரென்பதை நினைக்கும் பொழுது ஒரே திகிலாகவிருக்கின்றது.

மாதர் பகுதி

**தமது தங்கைக்கு டக்டர் எழுதும் இந்த நான்காவது கடிதத்தில் கருவளர்ச்சியின் நுட்பத்தைத் தமக்கே உரித்தான இலகுவான நடையில் விளக்குகின்ருர். இதன் இரண்டாவது பகுதி அடுத்த இதழில் வெளிவரும்.**

# கண்ணுக்குத் தெரியாத அணுக்கள் கருவாகி உருவாகும் விந்தை

‘நந்தி’

நான் இந்தக் கடிதத்தை எழுதுமுன் எனது வைத்தியப் புத்தகங்களில் கரு வளர்ச்சியைப்பற்றிப் படித்துக்கொண்டிருந்தேன். அப்போது எனது டக்டர் நண்பர்களில் ஒருவர் வந்தார். அவர் நான் புத்தகங்களைப் புரட்டியதன் காரணத்தை அறிந்ததும், ‘இந்த விஷயங்களையெல்லாம் உனது ஆயிரம் தங்கைகள் அறிந்திருக்க வேண்டுமா? கருவளர்ச்சியின் நுட்பம் டக்டர்களுக்கு மட்டும் தெரிந்தால் போதுமே’ என்று வாதித்தார்.

‘அப்படியானல் வானத்திலே அழகிய ஏழு வர்ண வானவில் எப்படித் தோன்றுகிறது என்பதை நாம் ஏன் விஞ்ஞான வகுப்பில் படித்தோம். அதைக் கடவுள் மாத்திரம் அறிந்திருந்தால் போதாதோ?’ என்று நான் கேட்டேன். அரை மணி நேரம் இப்படி வேடிக்கையாக வாதாடிய பின் நண்பர் போய் விட்டார்.

போன பிறவியில் நாம் என்ன பிறப்பு எடுத்திருந்தோம் என்று அறிய ஆவல் கொள்ளும் நாம், இப்பிறவியில் நமது அன்னையின் வயிற்றில் உருவான கதையை அறிந்திருக்கக் கூடாதா? உண்மையில் கர்ப்பிணியாயிருக்கும் ஒவ்வொரு பெண்ணும் தனது குழந்தை எப்படி வளர்கிறது என்று அறிய விரும்புகிருள். அவள் தன் ஆசையை வெளியே தெரிவிப்பதில்லை; அவ்வளவுதான். இந்த உண்மையை உணர்ந்து கரு வளர்ச்சியைப் பற்றி உன்னைப் பேசச்சொன்ன உங்கள் மாதர் சங்க காரியதரிசியை நான் பாராட்டுகிறேன்.

உனது சொற்பொழிவுக்கு வேண்டிய குறிப்புக்களைச் சுருக்கமாக இத்துடன் அனுப்புகிறேன். முதலாம் முறை விளங்காவிடில் இரண்டாம்முறைபடி. அப்போது நன்ருக விளங்கும். உனது தமிழில் தானே எழுதுகிறேன்.

உனது அன்புள்ள
**நந்தி அண்ண**

## கரு வளர்ச்சி

கண்ணுக்குத் தெரியாத பெண் அணுவுடன் அதாவது ஓவத்துடன், அதிலும் சிறியதோர் ஆண் அணு சேருவதாலேயே பிள்ளை அணு உண்டாகிறது. கண்ணுக்குத் தெரியாத அளவு நுண்ணியதாக இருப்பினும் இவ்வணுக்கள் தந்தையும் தாயும் தம் குழந்தைக்குத் தரப்போகும் குணங்களையும் லட்சணங்களையும் தம்முள் அடக்கியிருக்கின்றன. இவ்வாறு உருவான கரு அணு இரண்டாகப் பிரிந்து, இரண்டு நாலாகி, நாலு எட்டாகி......... இப்படிப் பலதரம் பிரிந்து, வளர்ந்து சில நாட்களில் பல அணுக்களைக் கொண்ட ஒரு சிறு பந்தாகக் காட்சி தரும். இப்போதுகரு, கருப்பையில்நன்ருகப் புதைந்து தனக்கு வேண்டிய சத்தைப் பெற்றுக்கொள்கிறது.

கரு உற்பத்தியான இரண்டாம் கிழமையில் பந்து போலிருக்கும் கருவின் அணுக்கள் மூன்று பிரிவுகளாகின்றன. ஒரு பிரிவு அணுக்கள் குழந்தையாக உருவெடுக்கும். இரண்டாம் பிரிவு நஞ்சாக மாறும் (Placenta). மூன்ருவது பிரிவு குழந்தையைக் காப்பாற்ற சூலுறையாக அமையும்.

மூன்ரும் கிழமையில் தான் கரு கண்ணுக்குத் தெரிகிற அளவில் உருவில்லாத ஒரு பிண்டமாக இருக்கும். எனினும் அதில் உறுப்புக்கள் தோன்றுவதற்குரிய அறிகுறிகள் காணப்படும். இனி, கரு அதிகம் வேகமாக வளரும்.

நாலாம் கிழமையின் முடிவில் கருவின் நீளம் ஓர் அங்குலத்தின் ஆறில் ஒரு பங்கு ஆகும். இந்த நேரத்திலே குழந்தையின் உறுப்புக்கள் தோன்ற ஆரம்பமாகின்றன.

ஆரும் கிழமையில் கரு அரை அங்குல நீளமிருக்கும். தலைப் பக்கம் பெரிதாக இருக்கும். கால்களும், கைகளும் சிறு வாலும் நன்ருகத் தெரியும்.

ஏழாம் கிழமையில் கருவின் முகம் நல்ல தோற்றமெடுக்கும். கண் இமைகள் தோன்றும். காதுகள் உருவாகும்.

இரண்டாம் மாத முடிவில் நஞ்சும் சூலுறையும் பூரணமாகத் தோன்றிவிடும். பனிநீரில் கரு நீந்தும்.

மூன்ரும் மாதத்தில் கை, கால், விரல், காது எல்லாம் சரியாக அமைந்துவிடும். விரல்களில் சின்னஞ் சிறு நகங்களைக் காணலாம். வால் மறையும். பார்க்கச் சின்ன மனிதனைகவே கரு காட்சி தரும். ஆகையால் இனிக் கருவைச் சிசுவென்று அழைப்போம். ஆனல் இந்த வளர்ச்சியிலும் திருவாளர் மனிதனின் நீளம் மூன்று அங்குலங்கள் தான். நிறை ஓர் அவுன்சு.

நாலாம் மாத இறுதியில் ஆண் பெண் குறிகள் தோன்றுகின்றன. சிசு துடிப்பதைத் தாய் உணரத் தொடங்குகிருள். டக்டர் சிசுவின் இருதயத் துடிப்பின் ஓசையைக் கேட்க முடியும். இந்த நிலையில் தான் ஒரு பெண் கர்ப்பவதியாக இருக்கக்கூடுமெனப்பிறர் ஊகிக்குமளவுக்கு வயிறு பெருப்பமடைகிறது. சிசுவின் நீளம் சுமார் எட்டு அங்குலங்கள். நிறை ஆறு அவுன்சு.

ஐந்தாம் மாதக் கடைசியில் சிசுவின் நீளம் ஓரடியாகவும் நிறை ஒரு இருத்தலாகவும் அதிகரிக்கும். தலையில் உரோமம் வளரத் தொடங்கும்.

ஆரும் மாதத்தில் சிசுவின் தலையில் உரோமம் நன்ருகக் காணப்படும். தேகம் வழுவழுப்பான ஒரு பசையால் மூடப்பட்டிருக்கும்.

ஏழாம் மாதத்தின் இறுதியில் சிசு சுமார் பதினறு அங்குல நீளமும் மூன்றே முக்கால் இருத்தல் நிறையுமாகும். ஏழாம் மாதத்தில் குழந்தை பிறந்தால், போதிய நல்ல பராமரிப்பு இருக்குமாயின் அது வாழ்வதற்கு நூற்றுக்கு ஐம்பது சத வீதத்தில் நல்வாய்ப்பு உண்டு. ஏழாம் மாதத்தில் பிறக்கும் குழந்தை எட்டாம் மாதக் குழந்தையிலும் பார்க்க வாழ வல்லமையுள்ளது என்று ஒரு தவருன அபிப்பிராயம் உலக வழக்கில் உண்டு. அது எப்படி முடியும்? எட்டாம் மாதக் கடைசியில் பிறக்கும் குழந்தை ஏறத்தாழ ஐந்து இருத்தல் எடையுள்ளது. அதன் வளர்ச்சியும் ஏழுமாதக் குழந்தையிலும் பார்க்க ஒரு மாத காலம் அதிகமாக நிறைவேறிவிட்டது. ஆகையால் தான் எட்டுமாதக் குழந்தைகள் நூற்றுக்குத் தொண்ணூறு சத விகிதம் உயிர் வாழ்கின்றன.

## அகில இலங்கைத் தமிழ் மறைத் தேர்வு 1960

தமிழ் மறைக்கழகம் நடாத்தி வரும் அகில இலங்கைத் தமிழ் மறைத் தேர்வு அடுத்த ஆண்டில் (1960 இல்) மார்ச்சு மாதம் இரண்டாஞ் சனிக்கிழமை நடைபெறும். ஆசிரியர் பலருடைய வேண்டுகோளின்படி இத்தேர்வுக்கு விண்ணப்பம் அனுப்புந் தேதி அடுத்த மாதம் (நவம்பர்) முதலாந் தேதியாகப் (1-11-59) பின்போடப்பட்டுள்ளது.

இத்தேர்வுக்குப் பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றிப் பிறருந் தோற்றலாம். இத் தேர்வு இலங்கையில் 40 இடங்களில் நடைபெறும். 50 க்கு மேற்பட்டவர்கள் சேர்ந்து கேட்டால் வேறு இடங்களிலும் நடாத்தப்படும். விவரங்களுக்குத் தமிழ்மறைக் கழகம், 58, 34 ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை எனும் முகவரிக்கு எழுதுக.




# சிறுவர் பகுதி

## ச ர ஸ் வ தீ பூ ஜை

இன்று கல்விக்கரசியாக விளங்கும் கலைமகளின் திருநாள். இப் பெருநாளைப் பாலரும் பெரியோரும் கொண்டாடுவர். பள்ளிக்கூடங்களிலும், வீடுகளிலும் இன்று ஒரு மகிழ்ச்சிகரமான நாள்.



வீட்டுப் பூசையறையிலே சரஸ்வதி வீணையுடன் காட்சியளிக்கும் படம். அதன்முன்னால் அன்புத்தாய் தந்தையரும், அவர்களின் அருமைச் செல்வங்களாகிய மக்களும். தம்மக்கள் படித்துப் பட்டம் பெற்றுப் பெரியவர்களாக வரவேண்டுமென்ற பிரார்த்தனை தாய், தந்தையரின் உள்ளங்களில். 'நான் கல்வியில் தேர்ந்து, எனது பெற்றோர் அகமலரும்படி அறிவில் சிறந்தவனாகவும், அன்பில் நிறைந்தவனாகவும் விளங்க வேண்டும், என்பது குழந்தையின் ஆசை. இதனை அவன் சரஸ்வதித் தாயிடம் வேண்டிக்கொள்கிறான்.

பூஜை முடிந்ததும், பின் என்ன? ஒரே ஆனந்தம் தான். கலைமகளுக்கு அன்புடன் படைத்த அவலும், அமுதும், சுண்டலும், பழங்களும் பிள்ளைகளுக்கு விருந்தாகிவிடும். அவற்றை நண்பர்களுடன் உண்டு மகிழ்ந்து உறவாடுவர் சிறுவர், சிறுமியர். அவர்கள் இன்பத்தைக் கண்டு மகிழ்ந்து உரையாடுவர் பெற்றோர். இந்த ஆனந்தக் காட்சிகளை நாம் இந்துக்களின் வீடுகளில் இன்று கண்டு மகிழலாம்.

## பொறுமையின் உயர்வு

(இந்திரா காங்கேஸ் — ப. எண் 433)

ஓர் ஊரிலே இராஜசேகரன் என்பவருக்கு ராமு, ராதா என இரு புத்திரர்கள் இருந்தார்கள். முதியவன் ராமு, இளையவன் ராதா. ராமுவும், ராதாவும் தினமும் பாடசாலை சென்று வருவது வழக்கம்.

குமாஸ்தாவாக இருந்த தந்தையார் ஒருநாள் தனது சட்டைப் பைக்குள் 5 ரூபா நோட்டை மறதியாக வைத்துவிட்டு ஆபீசிற்குச் சென்றுவிட்டார். சுவையான தின்பண்டங்களில் அவாக்கொண்ட ராதா, மெதுவாகத் தந்தையாரின் சட்டைப் பைக்குள்ளிருந்த 5 ரூபா நோட்டைக் களவாடினன்.

அலுவலகத்திலிருந்து திரும்பிய ராஜசேகரத்திற்கு 5 ரூபாய் நோட்டின் நினைவு வரவே, நோட்டைத் தேடினர். ஆனால் அதைக் காணவில்லை. 'யாராவது எனது சட்டைப்பைக்குள்ளிருந்து 5 ரூபாய் எடுத்தீர்களா?' என்று கேட்டார். ராதா ரூபா ஐந்தை அண்ணனின் புத்தகப் பைக்குள் திணித்துவிட்டான்.

ராஜசேகரம் தன் மனைவியிடம் காசைப்பற்றிக் கேட்டார். அவள் தனக்குத் தெரியாது என்று தலை அசைத்தாள். ராமுவைக் கேட்க அவனும் இல்லையென்று கூறினன். ராதாவைப் பார்த்துக் கேட்க அவன் 'அப்பா, நான் ஒருபோதும் களவாடமாட்டேன்.' என்று சொன்னன். பின் ராஜசேகரம் எல்லா இடங்களிலும் தேடினர். ஈற்றில் மூத்த புதல்வனின் புத்தகப் பைக்குள்ளிருந்து தமது பணத்தை எடுத்தார். பின் ராமுவைப் பார்த்து 'உன் புத்தகப் பைக்குள்ளிருந்து இந்த 5 ரூபாவையும் எடுத்தேன்' என்று சொல்லி ஒரு தடியால் அவனை அடித்தார். ராமுவுக்கு தம்பியின் சூழ்ச்சிதான் இது என்று விளங்கியிருந்தும் அதை வெளியிடாமல் பொறுமையுடன் தந்தையார் கொடுத்த அடிகளை வாங்கினன். ராதாவிற்குத் தமையனின் பொறுமையைக் காண அவன்மேல் இரக்கம் பிறந்தது. உடனே ஓடோடி வந்து தந்தையின் கால்களைக் கெட்டியாகப் பிடித்து 'அப்பா அண்ணனுக்கு அடிக்காதீர்கள், நான்தான் அண்ணனின் புத்தகப் பைக்குள் பணத்தை ஒளித்து வைத்தேன்' என்று கூறினன்.

ராஜசேகரம் ராமுவின் உதார குணத்தை மெச்சினர். அடித்த கைகளால் அணைத்துமுத்தம் கொடுத்தார். அந்த ஐந்து ரூபாயுடன் இன்னும் ஐந்து ரூபாய் சேர்த்துக் கொடுத்தார். அதன் பின் தம்பியாகிய ராதாவும் எல்லோராலும் மெச்சக்கூடிய உத்தம குணதிசயங்கள் கொண்டவனக வாழத் தொடங்கினன்.

## புதிய மருமக்கள்

பெயரும் பதிவு எண்ணும்

516. பா. வ. நீரேக்குட்டி, 35, லோறீஸ் வீதி, கொழும்பு 4.
517. ஏ. சிவகுருநாதன், அட்டபாகி, மொறக்கொல்லை, அட்டபாகி போஸ்ற்.
518. ச. நக்கீரன், புலோலி வளவு, பருத்தித்துறை.
519. எம். என். என். பூபதி, மாலையா குரூப், தெய்யோவிற்றை.
520. க. சற்குமார், 80, சேர்ச் வீதி, திருக்கோணமலை.
521. மேரி ஜோசப்பின் மைக்கல், 7ஆம் கட்டை, மல்லாகம்.
522. சி. குலசபாநாதன், பிங்கருவைப் பாடசாலை, நமுனகுல.
523. என். சே. மரியநாயகம், கீரியத் தோட்டம், சில்லாலை.
524. எஸ். டேனியல், பாலம்கோட்டைத் தோட்டம், இறக்குவானை.
525. இ. பாலசுப்பிரமணியம், 1ஆம் கட்டையடி, கச்சாய் வீதி, கப்பச்சி மாவடி, சாவகச்சேரி.
526. ரி. அப்துல் மன்னன், 13A, எம். ஓ. ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
527. எஸ். பரமேஸ்வரன், 420, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
528. சி. சச்சிதானந்தம், 2, இரண்டாம் குறுக்குத் தெரு,

அருமைச் சிறுவர்களே!

அனைவருக்கும் வணக்கம். புத்தகத்துக்குள்ளே ஒரு தெய்வம் இருக்கின்றது. அந்தத் தெய்வம் தான் சரஸ்வதி. அவள் வெள்ளைத் தாமரைப் பூவிலும் இருப்பாள். வீணையின் ஒலியிலும் இருப்பாள். இத் தெய்வத்தைக் கலைமகள், வாணி, அறிவுத் தெய்வம், கலைச்செல்வி என்ற பல பெயர்களால் அழைத்துவருகின்றோம். கலைத்தெய்வம் எமக்கு எல்லாம் தருபவள். அவளுடைய விழாவை இந்துக்கள் இன்று கொண்டாடுகின்றார்கள்.

"தாமரைப் பூவினிலே—
சுருதியைத்
தனியிருந் துரைப்பாள்
பூமணித் தாளினையே—
கண்ணி லொற்றிப்
புண்ணிய
மெய்திடுவோம்"

சின்ன மாமா

## மண்ணா மாணிக்கமா?

இரா. அறிவழகு — ப. எண். 284

மாலை மங்கிவர, கதிரவனும் தன் கிரணங்களை சாய்த்துக் கொண்டபடியே இருந்தான். மோகனும் தான் மேய்த்துக் கொண்டிருந்த ஆடுகளை, தன் இருப்பிடத்திற்கு விரட்டி ஓட்டினன். அப்பொழுது அம்மந்தை ஆடுகளில் நடுவிலுள்ள ஒரு ஆட்டிற்கு இடையில் ஏதோ ஒன்று தெரிந்தது. ஓடிப்போய் ஆட்டின் அருகில் பார்க்கும் பொழுது ஒரு அற்புதமான காட்சியைக் கண்டான். அங்கு சுமார் இருவிரல் பரப்பளவுள்ள ஒரு வேலின் மேற்பகுதி மட்டும் மின்னியது; மின்னிக் கொண்டிருந்தது. மோகன் வியப்புடன் அதை எங்நேரமாகிலும் தோண்டிப் பார்த்துவிடுவது என்று எண்ணி மண்ணைத் தோண்டிக்கொண்டே இருந்தான். சிறிது நேரம் கழிந்ததும் இரவு வந்தது. அன்று அமாவாசை இரவு. ஆகவே ஒரே இருட்டாக இருந்ததனல் அவனல் ஒன்றுமே செய்ய முடியவில்லை. அதை நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம் என நினைத்துக்கொண்டு, மனம்மாறி ஆடுகளையெல்லாம் ஓட்டிக் கொண்டு வீடு செல்லத்தொடங்கினன். ஆடுகளையெல்லாம் பட்டியில் அடைத்தான். பின்னர் உணவருந்திவிட்டு உறங்கினன். உறங்கிக்கொண்டிருக்கும் பொழுது ஒரு கனவு கண்டான். தான் மாலையில் கண்டபொருளைத் தோண்டுவதாகவும், கடைசியில் அந்த வேலே காணுதது போலவும். பின்னர் கையில் மண்ணைத்தான் ஏந்தியுள்ளதுபோலவும் கண்டு திடுக்கிட்டு விழித்துக் கையைப் பார்த்தான். ஒன்றுமில்லாதது கண்டு தான் கண்டது ஒரு கனவு என்று நினைத்து, மீண்டும் உறங்கினன்.

(தொடரும்)

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

★ ஈழநாடு சிறுவர் பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் இங்குள்ள விண்ணப்ப பத்திரத்தை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள பத்திரம் 17-10-59க்குப் பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் பத்திரத்தை அடுத்துவரும் சனிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை அங்கத்தவர் பத்திரத்தை நிரப்பி அனுப்பினல் போதுமானது.

★ ஈழநாடு அலுவலகத்திலிருந்து அங்கத்தவர் பதிவுத்தாள் கிடைத்தபின்னர்தான் ஈழநாடு சிறுவர் பகுதிக்கு அங்கத்தவர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் சிறுவர் பகுதி யில் வெளியிடப்படும்.

★ சிறுவர் பகுதி சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
ஈழநாடு சிறுவர் பகுதி,
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

### ஈழநாடு சிறுவர் பகுதி

விண்ணப்பப் பத்திரம்

(10-10-59)

அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு
வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னை ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்.

விலாசம்

கையொப்பம்

பெற்றூர் அல்லது
ஆசிரியரின் கையொப்பம். வயது............

இங்கே வெட்டவும்

## உண்மைக் கதைகள்: டெலிவிஷனின் தந்தை I







**அலென் பி. டூமொன்ற்:—** அலென் பி. டு. மொன்ற்றின் திறமையால், இன்று மனிதன் படங்களைக் கூடப்பரந்த வெளியூடாக, இடத்துக்கு இடம் அனுப்பவும் முடிந்துள்ளது. இவருடைய முயற்சிகளினலேயே இன்று உலகம் தொலைக்காட்சி முறை (டெலிவிஷன்)யையும், தொலை இயக்கமானி (றடார்) யையும் காணச் சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. இக்கதை அப்பெரியாரைப் பற்றியதேயாகும்.

**சிறு வயதில்:—** டூமொன்ற், நியூயோர்க் நகரிலுள்ள புரூக்லின் என்னுமிடத்தில் 1901 ஆம் ஆண்டில் பிறந்தார். அவருடைய தந்தை, வியாபாரத் துறையில் ஒரு சில்லறை வியாபாரி. சிறு வயதிலே, டூமொன்ற் பள்ளிக் கூடத்தைச் சகித்தார்; பலவிதமான விளையாட்டுக்களையும் விரும்பினர். அவர் இளமையிலே கூரியபுத்தியுடையவராயும், திறமைசாலியாகவும் விளங்கினர். வெளியிலே ஏதாவதொரு விளையாட்டிலும் பங்குபற்ருது, வீட்டிலே இருந்த நேரமெல்லாம் புத்தகங்கள் வாசிப்பதில் அக்கறை காட்டிவந்தார்.

**பாரிஸ வாதம்:—** அவருடைய 11 ஆவது வயதில் அவர் பாரிஸ வாதத்தினல் தாக்கப்பட்டார். இது அவருடைய உடம்பின் பாதியை முடமாக்கிவிட்டது. தனது சுகவீன காலத்தில், பொழுதைப் போக்குவதற்காக அவர் ரேடியோக் கருவியில் தமது கவனத்தைச் செலுத்தினர். அந்தக்காலமே ரேடியோவின் குழந்தைப் பருவமுமாகும். விரைவிலே, டூமொன்ற், வேறு ஒருவரின் உதவியுமின்றித் தாமாகவே ஒரு சிறு ரேடியோவை ஆக்கிவிட்டார்.

(தொடரும்)

# நமது நூல் நிலையம்

**மூன்ருவது கண்:** ஆசிரியர், கனக. செந்திநாதன் **வெளியீடு:** வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம். விலை சதம்: **65.**

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் இன்று ஈழத் தமிழர் இதயத்திலே இடம் பெற்று மிளிர்கின்ருர். அன்னாரைப்பற்றி அவரிடம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையிலே பயிற்சி பெற்ற பின்னரும் பெரிதும் தொடர்பு பூண்டு ஒழுகும் சிறந்த எழுத்தாளர் கனக செந்திநாதன் அவர்கள் எழுதிய நூலிஃதாகும்.

புகழ்பெற்ற உரையாசிரியர் மட்டுவில் க. வேற்பிள்ளை அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர் பண்டிதமணி. அவர்களிடம் முதற்கண் கல்வி பயின்று பின்னர் இரு பெரும் மணிகளாக மிளிர்ந்த த. கைலாசபிள்ளை, குமாரசாமிப்புலவர் இருவரிடமும் சமயம், இலக்கண இலக்கியங்கள் கற்றவர்பண்டிதமணி. சுன்னுகம் குமாரசாமிப் புலவர் இறைவனடிசேரப் பண்டிதமணி, வித்துவான் சுப்பையாபிள்ளையிடம் தொல்காப்பியங் கற்று மதுரைப் பண்டித பரீட்சையிலும் தேறினுர். அக்காலத்தில் விரல் விட்டெண்ணக் கூடிய தொகையினர்தாம் அந்த உயர் பரீட்சையிலே வெற்றி பெற்றிருந்தனர்.

> மதிப்புரை விரும்புவோர் ஒவ்வொரு நூலிலும் இரு பிரதிகள் அனுப்பவேண்டும்.

தேனூறக கதை சொல்லும் தன்மை மணியவர்களிடம் அமைந்திருப்பது ஆச்சரியமன்று. அவரதனை தம் அருமைத் தந்தையாரிடமிருந்து பெற்றுக் கொண்டார். மணி அவர்களுடைய வாழ்க்கை இலக்கியத் தொடர்புடையதாக ஆரம்பித்து, சமயச்சார்புடையதாகப் பூரணமெய்தியதை இந்நூலாசிரியர் சுவை பெற "கம்பர் இடத்தில் கச்சியப்பர் தோன்றினுர், திருக்குறளோடு திருவருட்பயனும் ஒட்டிக் கொண்டது. மெய்கண்டாரும் உமாபதிசிவமும் மேசை முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டார்கள்" என எழுதுவதனுல் நாமறியலாம். (பக்கம்27)

வெறும் இரசிகராகவும் இரசிக்கச் செய்பவராகவும் மாத்திரமிருந்து நமதுமணி ஒளிபெற்ருரல்லர். 1930—42 வரையுள்ள காலகட்டத்தை (1) கண்டனங்கள் (2) காவியபாடசாலை (3) பிறதொண்டுகள் என முப்பிரிவினதாக வகுத்துக் கூறுமாற்ருல் சரியான பண்டிதமணியை 'பச்சைப் படியாக' நாம் உணரச் செய்கிருர் இவ்வாசிரியர். (பக்கம் 17-26)

பண்டிதமணியின் பரந்த உயரிய தேசிய நோக்கத்தைப் பல ஆண்டுகளுக்கு முன்னரே அன்னுர் காவிய பாடசாலை கண்டு அதிலே தமிழ், வடமொழி, சிங்களம் ஆகிய மொழிகளை விரும்பியோர் கற்க அவர் வழி செய்ததிலிருந்தே நாம் சுலபமாக அறிந்து கொள்ளலாம்.

திருநெல்வேலி ஈரப்பலாவடி இரசிகர் குழுவினிடையே மணியவர்களை எழுத்தாளர் நன்கு படம்பிடித்துக் காட்டுகிருர். (பக்கம்15)

மணியவர்களை நல்லாசிரியர், சிறந்த பேச்சாளர், பிரபல எழுத்தாளர் என்ற முறையிலே பலவித நோக்கோடு இவ்வாசிரியர் நமக்குக் காட்டும் பகுதி சுவைமிக்குடைத்து. மகான் கைலாசபதி அவர்களுடைய தொடர்பினுலே பண்டிதமணி பழுத்த சைவமணியாகத் தமிழுலகத்திற்கே வரப்பிரசாதமாக விளங்குமாற்றையறிதல் நம் பெருங்கடனுகும்.

நாவலர் பரம்பரையைச் சேர்ந்த இம்மணியினை, ஈழத் தமிழ்ச் சைவமரபினைக்காக்கும் பிரமசாரியை-நாம் மேலும் மேலும் அறியத் தூண்டும்வகையில் எழுந்த இந்நூல் ஒரு நல்ல படைப்பாகும். நல்லதை ஆக்கித்தீயதைச் சுட்டெரிக்கும் இக்கண் தமிழினத்திற்கு நல்லாசியாக அமைகின்றது.

—பொ. கி.

## 1. புயல் ஓய்ந்தது; 2. பழிக்குப் பழி; 3. அனுபமா;

**ஆசிரியர்:** சரத்சந்திரர். **தமிழாக்கம்:** ஆர். ஷண்முகசுந்தரம். **விற்பனை உரிமை:** மேர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயம்புத்தூர். **விலை:** முறையே: ரூபா 2-75, ரூபா 1-50, ரூபா 1-50.

"வந்தே மாதரம்" என்ற தாரக மந்திரத்தை ஆனந்த மடம் என்ற நூல்மூலம் அளித்த பங்கிம் சந்திர சட்டர்ஜியை பாரதநாடு என்றும் மறந்திருக்கமுடியாது. அவரை அளித்த வங்காளம் நாவல் இலக்கியத்தை வளமுறச் செய்திருக்கிறது. அந்த வங்காள நாவலாசிரியருள் முதன்மையான ஸ்தானத்தைப் பெற்றவர்தாம் சரத்சந்திரர்.

"இந்தியாவில் நாவல்துறைக்குப்புத்தழகும் புத்துயிரும் ஊட்டிய சரத்சந்திர சட்டர்ஜி அவர்களுக்குத் தனியான அறிமுகம் தேவையில்லை" என்று நூல்களைத் தமிழ்மணம் கமழ மொழிபெயர்த்துள்ள திரு. ஆர். ஷண்முகசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டிருப்பது வெறும் புகழ்ச்சியல்ல.

மனித உணர்ச்சிகளை அலாதியான சம்பவ உத்திகளுடன் இணைத்துச்செல்லும் ஆசிரியரின் திறமையைக் காட்டுபவை தாம் இந் நூல்கள்.

### 1. புயல் ஓய்ந்தது

இதயம் என்ற அழகிய காவை நோக்கி வழி வழி வந்த சம்பிரதாய வைதீகக் காற்று அடிக்கிறது. அதிலே அந்த காவின் எழில் எப்படி எப்படித் துடிக்கிறது!

குசுமா, வாழ்க்கையில் அடிபடாத மொட்டு. ஆனுல் கணவன் உயிருடன் இருந்தும் விதவையாக வாழ்கிருள். அவளுடன் ஒன்றிய பெண்மை, மானங் கலந்த அகங்காரம் ஆகியவை ஆட்கொள்கின்றன. இருந்தும் அவள் பெண் தான்.

பிருந்தாவனன்: மனித இதயங்களைத் தெரிந்துகொள்பவன். ஆசிரியரின் அபிலாஷைகளை வெளியிடும் கருவியாகவும் இப்பாத்திரம் இயங்குகிறது.

இவ்விரு பாத்திரங்களையும் முக்கியமாகக்கொண்டது புயல் ஓய்ந்தது. சிறுகச்சிறுகச்சென்று உணர்ச்சிகளைத் தூண்டித் தன்னுடன் வாசகர்களை ஒன்றுபடச் செய்யும் சக்தியுள்ளதாகின்றது. கடைசி அத்தியாயங்களில் வரும் தத்துவக் கருத்துக்கள் ஆன்றமைந்த சிந்தனைக் குவியல்களாகும்.

### 2. பழிக்குப் பழி

"விளக்கின் சுடர் மங்க ஆரம்பித்தால் அப்போது தூண்டுகோல் உதவுகிறது. விளக்கில் எண்ணெயும் திரியும் இருந்தால் கூட தூண்டுகோல் இல்லாவிட்டால் சுடர் பிரகாசிக்காது"

சுரேந்திரன் ஒரு திரி. இளமையிலே சிற்றன்னையால் தூண்டப்பட்டுவரும்அவனுக்கு வெளியுலகத்திலும் திரியைத் தூண்டுவதற்கு ஒரு கரம் தேவைப்பட்டது. அதுதான் விதவை மாதவி.

இவ்விரு பாத்திரங்களையும் வேறு கோணங்களுக்குத் திசை திருப்பி—இந்துமத பாரம்பரிய புனிதங் கெடாது திரியை எரியவிட்டு அணைத்து விடுகிருர் ஆசிரியர்.

### 3. அனுபமா

i. அனுபமா

ii. ஒளியும் நிழலும்.

குறுநாவலும், நெடுஞ் சிறுகதையுமான இரு நூல்களின் தொகுப்பே அனுபமா.

கற்பனையில் உருவகப்படுத்திய காதலன் கிடையாத அனுபமா நோயாளிக் கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டு விதவையாகிருள். சாவிலே சாந்திகாணமுற்பட்ட அவளைத் தூக்கிவிடுகிறது ஒரு கரம். அந்தக்கரம் புனிதமற்றதுதான்: ஆனுல் இதயம் உள்ளது.

ஒளியும் நிழலும்: நீளத்திலும் அமைப்பிலும் சிறுகதையை ஒத்திருக்கும்இக்கதையிலும் உணர்ச்சிகளின் வலையில் சிக்கும் மனிதர்கள் மூவரைச் சந்திக்கலாம்.

மொத்தத்தில் இந்நூல்கள் விதவைகளை அதிகமாகக் கொண்டது. குணசித்திரமும், குணதோஷமும் கூடிய பாத்திரங்களின் கொட்டத்தைக் கொண்டு அக்கால பாரதநாட்டின் நிலையைக் காட்டுகிருர் ஆசிரியர். தான் வாழ்ந்த காலத்துச் சூழ்நிலை, ஆசிரியரைப் பலமாக உறுத்தியிருக்க வேண்டும் போலும்!

கதைக்குப் புறம்பாக நின்று பேசாது பாத்திரங்கள் மூலமாக ஆசிரியர் முடிவுகாணும் பல கருத்துக்களை இந்நூலில் தூவியிருக்கிருர். அத்தனையும் இதயத்தைத் தொடக்கூடியனவாக அமைந்திருக்கின்றன. அக்கால இந்தியநாட்டின் சாஸ்திரத்தின் தூய்மையை அவர் இகழவில்லை. ஆனுல் தூய்மையான பாதையைவிட்டு விலகாது சீர்திருத்தத் துடிக்கும் அவர் உள்ளத்தை இந்நூலைப் படித்தவர்கள் கண்டு பயன் பெற்றிருக்கலாம் என்று துணிந்து கூறலாம்.

ஒரே சாயலான பாத்திரங்களாக 3 நூலிலும் தென்பட்டாலும் ஒவ்வொரு கதையிலும் மாறுதலான உணர்ச்சிப் போராட்டங்கள் இடம் பெற்றிருப்பது வரவேற்க வேண்டியதாகும். காலத்தால் முந்திவிட்டாலும் கிழடுதட்டிப்போகாது, இளமை குன்ருத படைப்புக்களாக மிளிரும் இந்நூல்கள் திரு. ஷண்முகசுந்தரம் அவர்களின் கைவண்ணத்தின் எழிலையும் காட்டுகின்றன.

—ஆறென்னுர்.

**தென்றலும் புயலும்:** **ஆசிரியர்:** இளங்கீரன்; **வெளியீடு:** நவபாரத பிரசுராலயம்; 9 கம்மாளர் தெரு, சென்னை; 6. விலை ரூ. 2-4-0.

ஈழத்து எழுத்தாளர்களில் பெருந்தொகையான கதைகளும், கட்டுரைகளும், பெருங்கதைகளும் எழுதிய பெருமைக்குரியவர் 'இளங்கீரன்'. அவரது பதினேழாவது நாவலே இத் 'தென்றலும் புயலும்'. வளமான சமுதாயத்தை நிர்மாணிக்க முட்டுக்கட்டையிடும் பழைய சமுதாயக் கட்டுப்பாடுகளை அகற்றிப் புதியதொரு சமுதாயத்தை அமைக்கத் துடிக்கும் துடிப்பின் எதிரொலியே இந்நாவல். யாழ்ப்பாணத்துச் சாதிக்கட்டுப்பாடு இளம் உள்ளங்களைக் கருக்கி அதனுல் பல பிரச்சினைகளையும் பிணக்குகளையும் உற்பத்திசெய்யும் பாங்கைப் பின்னணியாக்கி, காதல் புயலாகவும் தென்றலாகவும் சுழன்றுவரும் வகையைக் கூறிச் செல்கிறது இந்நாவல்.


யாழ்ப்பாணம்

ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

எஸ். கனகசபை

சிருப்பர்

Std. 14.


# தூய சிந்தனை சாந்தி தரும்

## எண்ணத்தால் பின்னிற்கும் இன்றையதமிழினம்

### மாணவர்களுக்கு குன்றக்குடி அடிகளார் அறிவுரை

யாழ்நூல் தந்த விபுலாநந்த அடிகளார் பிறந்த மண்ணிலே யான் நிற்பது குறித்து மகிழ்கின்றேன். அவரைப் பார்த்தும் இழந்தும் பல ஆண்டுகள் சென்று விட்டன. எனது மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர். விபுலாநந்தர் தொடர்பாலும், விவேகாநந்தர் நூல்களைப்படித்ததாலும் ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தில் சேர்ந்து பணியாற்ற ஆசைப்பட்டேன். ஆனுல் அப்போது வயதாகிய எல்லை என்னைத் தடுத்து நின்றது. எனவே தான், இயன்ற அளவு பணி புரிவதையே நோக்கமாகக் கொண்டேன். விபுலாநந்த அடிகளார் தம்மால் இயன்ற அளவு பணிபுரிந்து மறைந்து விட்டார். நாமும் அவர்வழிச் செல்ல ஆசைப்படவேண்டும். முடியுமட்டும் முயலவும் வேண்டும்.


மனிதனுக்குப் புத்தகக்கல்வி இருபத்தைந்து வீத அறிவையும், சூழல் எழுபத்தைந்து வீதப் பேரறிவையும் கொடுக்கின்றது. மாணவர்களான உங்களுக்கு விபுலாநந்தர் வாழ்ந்த நல்ல சூழல் இருக்கின்றது. அவர் வழிபற்றி நற்பணிபுரியும் சுவாமி நடராஜனந்தஜி போன்ருேர் நற்சேவை இருக்கின்றது. எனவே நீங்கள் நிச்சயம் பேரறிஞர்களாக வரமுடியும்"

இவ்வாறு மட்டக்களப்பு, சிவாநந்த வித்தியாலயத்தில் நடைபெற்ற மாணவர் மன்றக் கூட்டத்தில் பேசும் போது, தவத்திரு குன்றக்குடிஅடிகளார் குறிப்பிட்டார்கள்.

சுவாமி நடராஜானந்தஜி தலைமைவகித்தார். குன்றக்குடி அடிகளார் தொடர்ந்து பேசியதாவது:

"படிப்பு உடலையும், கல்வி ஆன்மாவையும் போன்றது. கல்வி மனிதனைச் சிந்திக்கத் தூண்டிப் புரட்சியையும், புதுமையையும்உண்டாக்குகின்றது: மனிதன் சிந்தனையுள்ளவனுக வாழ அவன் எண்ணங்கள் பற்றிய நாட்குறிப்பு வேண்டும். நாட்குறிப்பு ஒரு இலக்கியம் போன்றது. இதனுல் எண்ணங்கள் வளரும். இன்றையத் தமிழினம் எண்ணத்தால் பின்னிட்டுக் கிடக்கிறது. நிலத்துக்கு விளைவிக்கும் இயல்பு இருப்பதுபோல் மனத்துக்கும் அவ்வியல்புண்டு. நாம் மன எண்ணங்களைப் புனிதப்படுத்திப் பாதுகாக்க வேண்டும். அதனுல் மனிதஇனம் வளர்ச்சியடைவதுடன் உலகில் சாந்தியும் சமாதானமும் ஏற்படும். மாணவர்களாகிய நீங்களெல்லோரும் பொன்னும், பொருளும் கடவுள் நம்பிக்கையும் உடையவர்களாகி, நல்ல மேதைகளாக வரவேண்டுமென வாழ்த்தி விடைபெற ஆசைப்படுகின்றேன்."

அடிகளார் விபுலாநந்த மணி மண்டபத்தைப் பார்வையிட்டதுடன், விபுலாநந்தரின் சமாதியையும் தரிசித்தார்கள்.



இங்கிலாந்தில், கடலைத் துளைத்துச் செல்லும் ஒரு நிலையத்தைப் பார்வையிடச் சென்றிருந்த நான்கு இந்திய விஞ்ஞானப்பகுதி உத்தியோகஸ்தர்கள், கடலுக்கு 100 அடி உயரத்தில் ஒரு பெட்டியில் செல்வதைக் காணலாம்.

அருள்வழி

## நீங்காத ஞானம் நல்கும் கலைத் தெய்வம்

# இன்று கலைமகள் விழா

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள்.



எழிற்கோலம் தாங்கிநிற்கும் துல்லியமான வெண்மலரில் அவள் வீற்றிருக்கிருள். ஆத்ம சுத்தமும், கவிதா ஞானமும் கொண்ட பாரதியின் கண் முன்னே அப் பெண் தென்படுகிருள். அவள்தான் அன்னை பராசக்தி, இலக்குமி, சரஸ்வதி என்றெல்லாம் திரிபுகொண்ட பெயர்களை உடைய சக்தி.

உலகமே தாய்மையை மூல மாகவுடையது. தாய்மையின் அன்பூற்றிலேதான் சகல ஜீவ ராசிகளும் தம்மை வளர்த்துக் கொள்கின்றன. சர்வ வியாபகமான உலகத்தில் அத்தனை உயிர்களுக்கும் ஒவ்வொருதாய். ஆனல், அந்த அத்தனை தாய்களுக்கும், சேய்களுக்கும் தாயான சக்திதான் எங்கும் பரந்தும்,பரந்து செறிந்தும்ஒன்ருக ஒளிர்கின்ருள்.

### அன்னையின் அருள்

தினமும் அவளை நினைவு கூர்கிருர்கள். அந்த நினைவு கூரும் நெஞ்சிலே நீங்காத ஞானத்தை நல்கி வளப்படுத்துகிருள் அன்னை.ஏன்?நினையாத நெஞ்சிலும் அவளுண்டு. ஆனல் அந்த நெஞ்சுக்கு முன்னே நீண்ட திரை. அதனை நீக்கிப் பார்க்கும் திராணியற்று அந்த ஜீவன் அலைகிறது. அவ்வளவு தான்.

அவளைப் பலவந்தமாகவேனும் நினைக்கும் சுபதினங்கள் எம்முன் ஊடாடுகின்றன. ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 10ஆம் திகதிவரை நவராத்திரி காலம். முதன் மூன்று நாளில் மகா காளியாகவும், இடை மூன்றுநாளில் இலக்குமியாகவும் கடைசி மூன்று நாளில் சரஸ்வதியாகவும் அன்னையை வேண்டுதல் செய்வதற்கு அரிய வாய்ப்பு இது.

சோழன் மனையில் அம்பிகாபதி செய்த அசம்பாவிதம் கம்பரைக் கதிகலங்கச் செய்துவிட்டது.மின்னர் இடை துவள வட்டில் சுமந்து வரும் அமராவதியைக் கண்டதும் அம்பிகாபதி:

இட்டவடி நோக
எடுத்தவடி கொப்பளிக்க
வட்டில் சுமந்து மருங்கசைய

என்று தொடங்கிவிட்டான். ஆம்.அவர்கள் முன்னே வட்டில் சுமந்துவருகிருள் அமராவதி. கம்பர் அந்தக் காட்சியைக் கண்டு கலங்கி சரஸ்வதியைத் துணைக்கழைக்கிருர்.

—கொட்டிக்
கிழங்கோ கிழங்கென்று
கூறுவாள் நாவில்
வழங்கோசை வையம்
பெறும்.

கம்பரின் ஆபத்துக்குதவ சரஸ்வதி பாட்டியுருவில் வந்து கொட்டிக் கிழங்கு விற்ருள்.

இப்படி யெல்லாம் அன்னை சரஸ்வதியின் அருள் திறன் தமிழ் இதிகாச புராணங்களில் பரக்கக் கிடக்கின்றது. அவைகள் தனித்தனி சரிதங்களாகும்.

### அவளின் ஒளி

நம்பிக்கையென்ற இலட்சியப்படிகளினூடே செல்லுபவனுக்கு அன்னையின் தீபஸ்தம்பம் தெரியும். அந்த ஒளியிலே அவனது அஞ்ஞான இருள் அகன்றுமெய்ஞ்ஞானம்சுரக்கின்றது. பண்ணும்,பரதமும் ஆகிய நுண்மாண் கலைகளுட்பட அறுபத்து நாலு கலை ஞானங்களுக்கும் கொள்கலம் சரஸ்வதி தேவிதான். அவளது அனுக்கிரகத்தினலேதான் இவைகள் கிடைக்கின்றன என்பது இந்துக்களின் பூரண நம்பிக்கை. அதற்கு இசைய பழங்காலத்தில் வாழ்ந்த புலவர்களின் வாழ்க்கை சான்ருக அமைந்து கிடக்கின்றது.

ஆய கலைகள் அறுபத்து
நான்கினையும்
ஏய உணர்விக்கும்
என்னம்மை—தூய
உருப்பளிங்குபோல்வாளென்
உள்ளத்தினுள்ளே
இருப் பளிங்கு வாராதிடர்.

இது கவிஞனின் அசையாத நம்பிக்கையிலிருந்து பெருகிய கவிதைத் துளி. இதுபோல் பல உள. நவராத்திரி காலத்தில் எம்மனைகளை அலகிட்டு மெழுகி நறுமலர் மாலைகொண்டு அழகுபடுத்தி சக்தியை வழிபாடு செய்வோமாக. கலைமகள் விழாக் கொண்டாடுவோமாக.

கொடுமையென்னும் இருளிலே இன்று ஈழமாதேவி மூடுண்டு கிடக்கிருள். எங்கும் பீதி. அரசியலில் ஒரே துன்பம். மக்கள் அலையில் அள்ளுண்டு செல்லும் கலம்போல் கரை துறை தெரியாது தவிக்கின்றனர். இத்தனைக்கும் வழியெங்கே? அதுதான் நமது நம்பிக்கை! அந்த நம்பிக்கைக்கு நம்மை இழுத்துச் செல்பவள் தாம் சக்தி. எங்கள் தாய்க்கு எங்களைப் பற்றிய கவலையிருக்காதென்று நம்மால் கூறமுடியுமா? அந்தத் தாயை வணங்கி நாமனைவரும் உய்வோமாக.

வாணி கலைத்தெய்வம் மணிவாக்
குதவிடுவாள்
ஆணி முத்தைப் போலே அறிவு
முத்து மாலையினள்
காணுகின்ற காட்சியாய்க் காண்ப
தெல்லாங் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே
சூழ்வோமே.

# 'ஆரிய இனம்' என்பது கட்டுக் கதை

## விஞ்ஞான அடிப்படையில் இக் கொள்கையை நிலை நாட்ட முடியாது

— மு. வைத்தியலிங்கம் —

வேதமந்திரங்கள் தோன்றிய காலத்தையோ தொகுத்த காலத்தையோ சரித்திர நூலார் வரையறுத்துக் கூறவில்லை, கூறவும் முடியவில்லை. மேலைத் தேச ஆராய்ச்சியாளர் தங்கள் மனத்தில் தோன்றிய சில கருத்துக்களைக் கூறியிருக்கிருர்கள். அவைகள் முடிந்த முடிபுகளல்ல; அபிப்பிராயங்கள். ஒரு சிலருடைய கருத்துக்கள் வருமாறு:—

1. வெபர் இந்திய இலக்கிய வரலாற்றில் வேத காலத்தை "கி. மு.2780–க்கும் 1820–க்கும் இடையில் இருக்கலாம்" என்றுஅபிப்பிராயப் படுகிருர்.
2. ஹாங் "ஐத்திரேயபிராமணம்" என்பதில் வேத காலம் கி. மு. 2400–க்கும் 2000–க்கும் இடையில் இருக்கலாம் என்கிருர்.
3. பாகிற்றர் 'பழைய இந்திய சரித்திர ஐதீகம்' என்னும் நூலில் வேதகாலம் கி. மு. 2050–க்கும் 1600–க்கும் இடையில் இருக்கலாம்" என்று கூறுகிருர்.
4. பேராசிரியர் கீத் 'கேம்பிறிஜ் பல்கலைக் கழக இந்திய வரலாறு' என்னும் நூலில் வேதகாலம் கி. மு. 1400–க்கும் 1000க்கும் இடையில் இருக்கலாம்என்று கூறுகிருர்.
5. வடல் என்பவர் வேதகாலம் கி. மு. 700–க்கு முன் இராது என்று கூறுகிருர்.

### முரணுன கருத்துக்கள்

இவர்களின் வேறுபட்டகருத்துக்களையும் இன்னும் மற்றவர்களின் அபிப்பிராயங்களையும் ஆராய்ந்து கொண்டு பேராசிரியர் வின்றணீற்ஸ் காய்தல் உவத்தல் இன்றி நடுநின்று கூறுவதாவது "இந்தியாவின் புராதன இலக்கியங்களின் காலத்தை வரையறுத்துக் கூற முடியாது என்பதை ஏற்றுக் கொள்வது மிகவும் நல்ல ஒரு காரியமாகும்" என்று. இன்னும் அவர் தொடர்ந்து கூறுவதாவது. "இந்தியாவின் புராதன நூல்களைப்பற்றி இக்கால ஆராய்ச்சியாளர்கள் கொண்ட அபிப்பிராயங்கள் ஒன்றுக்கொன்று முரணுனவைகளாய் இருக்கின்றன. அபிப்பிராய பேதங்கள் சில ஆண்டுகளாலோ, அல்லது சில நூற்ருண்டுகளாலோ ஏற்படவில்லை. ஆயிரக்கணக்கான வருடங்களால் ஏற்படுகின்றன" என்று.

பேராசிரியர் டபிள்யூ. டி· விற்னி கூறுவதாவது "புராதன இந்தியாவின் நூல்களையொட்டி எழுந்த கால நிர்ணயங்கள் எல்லாம், ஒருவர் இட்ட குண்டூசியை மற்றவர் எறிந்து விழுத்தும் விளையாட்டுக்கு ஒப்பாகும்" என்று.

இப்படி மேல்நாட்டு ஆராய்ச்சியாளர் கருத்துக்கள் இருக்க எங்கள் நாட்டில் ஒரு சிலர் பாரத நாட்டின் பண்டை இலக்கியங்களுக்குக் காலவரையறை செய்யலாமெனத்துணிந்து விடுகின்றனர்.

### மாக்ஸ் முல்லர்

காலவரையறை ஒருபுற மிருக்க, பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்ருண்டுகளில் தோன்றி வளர்ந்த ஆரிய இனக் கொள்கையை மெய்யென நம்பி, ஆரியர் வெளி நாடுகளிலிருந்து வந்து இந்தியாவை அடைந்தார்கள் என்பது சரித்திராசிரியர் அறுதியிட்டுக் கூறும் முடிபு என்று கூறுகிருர்கள்.

இவர்கள் கூற்று மாயவித்தை போன்றது. "ஆரிய இன"க் கொள்கையை உற்பத்திசெய்தவர் பேராசிரியர் மாக்ஸ் முல்லர் ஆவார். இவர் ஜேர்மனியில் பிறந்து, பிரான்ஸ் நாட்டில் சமஸ்கிருதம் கற்று இங்கிலாந்திலுள்ள 'ஒக்ஸ்போட்' பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகக் கடமையாற்றினர். இவர் "கிட்டத்தட்ட 1853–ம் ஆண்டளவில் 'ஆரியன்' என்ற துரதிர்ஷ்டம் வாய்ந்த சொல்லை ஆங்கில மொழியில் உபயோகித்தார்." பின்பு 1861–ம் ஆண்டிலும் 1863–ம் ஆண்டிலும் நிகழ்த்திய சொற்பொழிவுகள் மூலம் "ஆரிய இனம்" என்று ஓர் இனம் மத்தியாசியாவில் தோன்றி வளர்ந்து இந்தியாவை அடைந்தது என்று அபிப்பிராயப்பட்டார். இது அவர் அபிப்பிராயம். சரித்திர உண்மையல்ல. பேராசிரியர் மாக்ஸ் முல்லர் அவர்களே 1888–ம் ஆண்டளவில் தனது அபிப்பிராயத்தைப் பிழையெனக் கண்டு மாற்றிக் கொண்டார். ஆனுலும் "மக்கள் செய்யும் தீமை அவர்கள் பின்னும் வாழ்கின்றது. அவர்கள் நன்மையோ அவர்களுடன் புதைக்கப்பட்டுவிடுகிறது."


### நாங்கள் ஐரோப்பியர்

இப்பொழுது ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் உயிர் நூல் பேராசிரியராக இருப்பவரும், ஐக்கிய நாட்டுக் கல்வி விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனத்தின் தலைவராக விருந்தவரும், மேலைத்தேச விஞ்ஞானிகளுட் தலை சிறந்தவருமான ஜுலியன் ஹக்ஸ்லியும் இனக்கலை நிபுணரும் பேராசிரியருமாகிய ஏ. சி. ஹடன் என்பவரும் சேர்ந்து எழுதிய நூலொன்று இருக்கிறது. இதன் பெயர் "நாங்கள் ஐரோப்பியர்" என்பது. அதில் 'ஆரிய இனம்' வெறுங் கட்டுக் கதையென நிரூபிக்கப்பட்டிருக்கிறது. "The theory of an Aryan race is shown to be a myth". இந்நூலை அடிப்படையாகக் கொண்டு ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் ஒரு சிறு பிரசுரம் வெளியிட்டிருக்கிறது. இதன் பெயர் "ஐரோப்பாவில் மக்கள் இனம்" என்பது. இத்துண்டு வெளியீட்டின் இருபதாவது பக்கத்தில் ஜுலியன் ஹக்ஸ்லி கூறுவது "இன்னும் மாக்ஸ் முல்லர் ஒரு பிரிவினையைக் கிளப்பி விட்டார்; ஐயந்திரிபறப் பிழையென நிரூபிக்கக் கூடிய ஒரு கொள்கையைப் புதிதாகத் தொடக்கி வைத்தார். அவர் ஆரிய மொழியும் அதன் வழி மொழிகளும் உண்டு என்று சொல்லுவதோடு அமையாது மொழியோடு இணைந்த ஓர் 'ஆரிய இனமும்' இருந்தது என்று கூறினர்.

### 'ஆரிய இனம்'

இக் கொள்கை ஜேர்மனியிலும் இங்கிலாந்திலும் காட்டுத் தீ போல் பரவியது. இக் கொள்கை - "ஆரியர்" என்று ஓர் இனம், சாதி, இருக்கிறது என்ற கொள்கை - பரவுவதற்குப் பேருதவியாய் இருந்தவர் பிரான்சிய தேச எழுத்தாளர் 'டீ கோபினே' என்பவர். மிதமிஞ்சிய நாட்டுப் பற்றுள்ள சரித்திர நூல்களுள்ளும், புனைகதைகளுள்ளும் இக்கொள்கை அக் காலத்தில் ஓர் அளவிற்கு இடம் பெற்றிருந்தது. ஆனல் இந்த வகையான எழுத்தாளர்களுக்கு கலைத்துவப் போக்கான இன ஆராய்ச்சி வாய்ப்பு இல்லையென்பது குறிப்பிடத் தக்கது. இக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு எழுதிய ஆங்கிலேயருள் சிறந்தவர்கள், தொமஸ் காளையில் (1795-1881), ஜே. ஏ. பிறவுட் (1818-1894), சாள்ஸ் கிங்ஸ்லி (1819-1875) ஜே. ஆர். கிறீன் (1837-1883) முதலியோர். இவர்கள் இவ் விஷயமாக எழுதியவைகள் எல்லாம், சரித்திராசிரியர்களால், கழிவுப் பொருள் சென்றடையும் குப்பையுள் வீசப்பட்டு விட்டன. இப்பொழுது இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் விஞ்ஞான அறிவு படைத்த எழுத்தாளர்களால் 'ஆரிய இனம்' என்ற சொற்ருெடர் உபயோகிக்கப் படுவதில்லை; அரசியல்வாதிகளும், பிரசாரக் கும்பல்களும் சில வேளைகளில், எப்பொழு

(14ஆம் பக்கம் பார்க்க)



நியூயோர்க் நகரின் ஓர் அழகிய தோற்றம்

விளையாட்டுப் பகுதி

# அனுராதபுரத்தில் மக்கள் கிண்ண உதை பந்தாட்டப் போட்டி

## காரியதரிசியின் ஏற்பாடு

— நமது நிருபர் —

முன்னாள் பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டார நாயக்காவின் மறைவையொட்டிப் பின் போடப்பட்டுள்ள அனுராதபுரம் விளையாட்டுச் சங்கத்தின் மக்கள் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி திங்கட்கிழமை தொடங்கியது.

அன்று அனுராதபுரம் மத்திய கல்லூரி மைதானத்தில் மாலை 4–45 க்கு ஆரம்பமான முதற் போட்டி யுனைட்டட் ஸ்போர்ட்ஸ் கிளப்பைச் சேர்ந்த இரு குழுவினருக்கிடையே நடைபெற்றது. யுனைட்டட் கோல்ட்ஸ் கடந்த இரு வருடங்களாக மக்கள் கிண்ண வெற்றி வீரர்களாகத் திகழ்ந்து வருவதால் இவ்வாண்டும் அவர்கள் தங்கள் பழைய வெற்றிகளைத் திருப்ப முடியும் என்று பலரும் கருதுகிறார்கள்.

எனினும் சென்ற ஆண்டு விளையாடிய யங்ஸ்டார்ஸ் கோஷ்டியினர் புகையிரதப்பகுதிக் கோஷ்டியுடன் இணைந்து இருப்பதால் அவர்கள் இவ்வருடம் வெற்றி வீரர்களுக்கு முக்கிய தலையிடியாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் அகில இலங்கை பொலிஸ் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 'பெர்குஸன்' கோப்பையைச் சுவீகரித்துக் கொண்ட அனுராதபுரம் பொலிஸ் கோஷ்டியும் தன் திறமையைக் காட்டும் என எதிர்பார்க்கலாம்.

இவ்வாண்டு மக்கள் கிண்ணம் பொலிஸ் கைக்கு மாறினாலும் மாறிவிடும் என்று பலரும் கருதுகிறார்கள்.

சென்ற முறை மத்தியக் கல்லூரியிடம் தோல்வி அடைந்த அர்ச். சூசையப்பர் கல்லூரிக் கோஷ்டியிடமும் அதிக அபிவிருத்தி எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை.

மொத்தத்தில் இவ்விளையாட்டுப் போட்டிகள் சுமுகமாக நடைபெற வேண்டிய சகல ஏற்பாடுகளையும் சங்கக் காரியதரிசி திரு. ஜேம்ஸ் மிராண்டா கவனித்து வருகிறார். சமீபத்தில் தேர்வுபெற்ற மத்தியஸ்தர்களே இப் போட்டிகளில் கடமை யாற்றுவார்கள் என்றும் அவர் என்னிடம் தெரிவித்தார்.

**போட்டி விபரம்:**

1. யுனைட்டட் கோல்ட்ஸ் × யுனைட்டட் ப்ளூஸ் (10-10-59)

2. ரயில்வே × ஜோசப்பியன்ஸ் (11-10-59)

3. பொலிஸ் × சுகாதார சேவை (17-10-59)

4. கத்தோலிக் கிளப் × மத்தியக் கல்லூரி (18-10-59)

**முதல் இறுதியாட்டம்**

1. முதலாவது ஆட்டத்திலும் மூன்றாவது ஆட்டத்திலும் வெற்றி பெற்ற கோஷ்டியினருக்கிடையே (24-10-59) நடைபெறும்.

2. இரண்டாவது கட்டத்திலும் நாலாவது ஆட்டத்திலும் வெற்றி பெற்ற கோஷ்டியினருக்கிடையே (25-10-59), நடைபெறும்.

**இறுதியாட்டம்:**

இதற்கான தேதியைப் பின்னர் முடிவு செய்து கொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மண்முனைப்பகுதிக்கு மின்சார வினியோகம்

மட்டக்களப்பு

மட்டக்களப்பு-மண்முனை வட கிழக்கு, வடபகுதி கிராம சங்க எல்லைக்குட்பட்ட ஆறு கிராமங்களுக்குக் கல்லோயா அபிவிருத்திச் சபையினரால் மின்சார வினியோகம் கிடைக்க இருக்கின்றது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை அப்பகுதிக் கிராமச்சங்கம் ஆரம்பித்துள்ளது. இவ்வருட இறுதிக்குள் கல்லடி மின்சாரநிலையத்திலிருந்து மின்சாரவினியோகம் கிடைத்துவிடலாம். இதன்பயனாக கல்லடி முகத்துவாரம், கல்லடி, கல்லடி உப்போடை, நொச்சிமுனை, நாவற்குடா, மஞ்சந்தொடுவாய் ஆகிய கிராமங்கள் நன்மையடையும். சிறு கைத்தொழில் நிலையங்கள் பல, மின்சார உதவியால் விருத்தியுற விருக்கின்றன.

## உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில்

### பாரதி விழா

யாழ்ப்பாணம்

இவ் வித்தியாசாலையின் இலக்கிய சங்க ஆதரவில் தலைமை யாசிரியர் திரு. தி' சுப்பிரமணிய ஐயர் தலைமையில் பாரதியின் நினைவுவிழா சமீபத்திற் கொண்டாடப்பட்டது.

## 'ஆரிய இனம்'

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாவது இருந்துவிட்டு, இச் சொற்றொடரை உபயோகிப்பார்கள்.

**சிறு பிரசுரங்கள்**


இன்னும் ஐக்கிய நாட்டுக் கல்வி, விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனம் அண்மையில் சில சிறு பிரசுரங்கள் வெளியிட்டிருக்கிறது. இவற்றுள் ஒன்று "இனக் கட்டுக் கதைகள்" என்பது. இப்புத்தகம் மெக்சிக்கோ தேசத்தில் இன வளர்ச்சிக் கலைக்கல்லூரி அதிபர், பேராசிரியர் ஜுவான் கோமஸ் என்பவர் எழுதியது. இதில் 33-ம் பக்கம் தொடக்கம் ஆரிய இனக் கொள்கை ஆராயப் பட்டிருக்கிறது. அதன் பலனைக் கொண்ட முடிபு இது, "மேற் காட்டப் பட்ட தொகையான அபிப்பிராயங்கள் (ஆரிய இனக் கொள்கைபற்றி) நேர் முரணானவை. இதிலிருந்து நாம் கொள்ளக் கூடிய கருத்தென்னவென்றால் "ஆரிய இனம் என்பது வெறுங் கட்டுக் கதை. இக் கொள்கையை நிலைநாட்ட எவ்விதமான உண்மையோ, விஞ்ஞான ரீதியான அடிப்படையோ இல்லையாகும்."

பக்கம் 34.


நான் விரும்புவது

நெஸ்டோமோல்ட்

ஏனெனில்
அது எனக்கு
எவ்வளவோ
நன்மையளிக்கின்றது..






நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம் இது மோல்ட்டட்பார்லி மற்றும் கோதுமைமாவுடன் முழுப்பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, $B_2$, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம் ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள் மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B 1 சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்.

நெஸில்ஸ்

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப்பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரோடக்ட்ஸ்
(சிலோன்) லிமிட்டெட்,
த. பெ. 189 கொழும்பு.

மெக்கானிக்குகள் குழந்தைகள், வாலிப வயதினர் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும் இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்கவல்லது. சூடானாலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானாலென்ன இழந்த சக்தியை மீட்டுத்தரவும், ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்ட்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்றால், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி அலாதியானது.

நெஸ்டோமோல்ட்

விட்டமின் B1 அடங்கியது.

**இக் கட்டுரை சேர் லோறன்ஸ் ஒலிவியரால் 1945ஆம் ஆண்டில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு, 'தி சற்றடே புக்' என்னும் நூலில் வெளியாயிற்று. சேர் லோறன்ஸ் ஒலிவியர் ஒரு தலை சிறந்த ஆங்கில சினிமாநடிகர். அத்துடன், அவரது நாடகங்களும் உலகப் புகழ்பெற்றவை. நடிப்புக்கலைக்கு அவர் ஆற்றிய சேவையின் பயனுக அவருக்கு 'சேர்' பட்டமும் வழங்கப்பட்டது.**

சினிமா உலகம்

# ஒரு நடிகனுக்கு அமைய வேண்டிய பண்புகள்

— சேர் லோறன்ஸ் ஒலிவியர் —

ஒரு யூதனுக்கு ஒரு கிறிஸ்தவனைப்போன்றே கைகள், கண்கள், உறுப்புக்கள் எல்லாம் அமைந்திருக்கவில்லையா? அவன் உண்ணும் உணவும் அப்படியே; அவன் உடலைக் காயப்படுத்தும் ஆயுதமும் அப்படியே. அவனைக் குண்டுசியினுல் குற்றினுல், இரத்தம் வருவதில்லையா? அவனுக்குக் கீச்சம் காட்டினுல், அவன் சிரிக்கவில்லையா? இக் கேள்விகளுக்கு எந்தப் பள்ளிக்கூடச் சிறுவனும் விடை கூறிவிடுவான். ஒரு யூதன், மற்றவர்களைப் போல், ஒரு மனிதன். அப்படித்தான் ஒரு நடிகனும். மனிதனுக்குரிய மற்ற அம்சங்களில் மனிதனுக விளங்கும் நடிகன். இன்னுமொரு முக்கிய அம்சத்திலும் மனிதனுக விளங்குகிருன். அதாவது, அவன் தன் சீவியத்திற்கு உழைக்கிருன், மேசன் தொழில் இருக்கின்றதே, அதுபோலவே நடிப்பும் ஒரு தொழிலேயாகும்.

அதுமாத்திரமல்ல. அது ஒரு கஷ்டமான தொழிலும் கூட. ஆனுல் இந்த உண்மையை ஒரு சிலர்தான் உணர்கிருர்கள். யாரையும் பார்த்து, 'நீ கரிச் சுரங்கத்தில் வேலை செய்ய விரும்புகிருயா?' என்று கேளுங்கள். உடனே அவர், அத்தொழில் ஒரு குறுகிய காலத்துக்குள்ளேயே தம்மை வாட்டி வதைத்துவிடுமென்று பதிலளிப்பார். ஆனுல், அதே மனிதர், நடிப்புக்கலையில் ஈடுபட்டால் தமக்கு இலகுவாக விருக்குமென எண்ணக்கூடும். அத்துடன், நடிப்புக் கலைக்கு கலா ரசிகத்தன்மை, ஒரு தனிவிதமான மனப்பான்மை, பலத்த ஞாபகசக்தி, நினைத்த நேரங்களில் வேலைசெய்யும் ஆற்றல் இவையெல்லாம் தேவையென்றும், இக் காரணங்களுக்காகத் தாம் அத் தொழிலில் ஈடுபட விரும்பவில்லையென்றும் கூட அவர் கூறலாம். ஆனுல், ஒருவருக்கு நடிப்பினுல் ஏற்படும் தேகச் சோர்வைக் கணக்கிடும்பொழுது, மேற்சொன்னவரின் மதிப்புத் தப்பானதே. அவர் நடிப்புத் தொழிலை மிகவும் இலகுவான தொழிலாகக் கருதிவிட்டாரென்றே கூற வேண்டும்.

நடிப்புக்கலையில் பயிற்சி பெருத எந்தச் சாதாரண மனிதனையும், ஒருவருட நடிப்பு, அப்படியே அலைத்துக் களைக்கச்செய்துவிடும். முக்கியமாக அவருடைய குரல்வளைக்கு அது பாதகம் செய்யக்கூடும். மேடையில் நடப்பதெதுவுமே நாம் நினைப்பதுபோலன்று. அதோ தெரிகிறதே மேடையில், அந்தச் சமையலறை, அது நான்கு சுவர்களுள்ளது போல் தோன்றினுலும், உண்மையில் மூன்று சுவர்களே உள்ளன! மேசையில் இருக்கும் உணவு உண்மையான உணவல்ல. மின்னும் அந்த ஆபரணம் இருபது சதம் பெறுமோ என்னவோ. இன்னும், மண்டபத்தின் முதல் வரிசை நாற்காலிகளில் இருப்பவர்களுக்குக் கேட்கின்றதே நடிகனின் முணுமுணுப்பு (அது முணுமுணுப்பாக இருந்தால்)- அது ஒரு தனிவகையான முணுமுணுப்பாகும். 300அடி தூரத்துக்கப்பால் கடைசி வாங்குகளில் இருக்கும் ரசிகர்களின் காதில்கூட விழும், இந்த முணுமுணுப்பு!

அதிகமாக, நடிகர்கள் தமது தொண்டையின் அடியிலிருந்தே பேசுகிருர்கள். தங்கள் சொற்களை அவர்கள் தமது தொண்டைத் தசை நார்களின் மூலமே உச்சரிக்க முயலுகின்றனர். அதிக சப்தத்துடன் பேச வேண்டியிருந்தால், இத்தசை நார்களையே அவர்கள் பலவந்தப்படுத்துகின்றனர். இது அவர்கள் மேடை வாழ்க்கையைச் சிதைத்துவிடும். அதிக காலத்துக்கு, இவ்விதமான சிரமத்தை எந்தக் குரல் வளையும் தாங்கமாட்டாது. அது நிரந்தரமாகக் கரகரத்து விடும். ஆகவே, முதல் முதலாக ஒரு நடிகர் படிக்க வேண்டிய பாடமென்னவெனில், தனது தொண்டைத் தசைகளை அதிகம் உபயோகிக்காது பேசப் பழகுவதே யாகும்.

பேச்சுக்கலையில் பயிற்சியளிக்கும் பள்ளிக் கூடமொன்றில் நான் பேசக் கற்றுக் கொண்டேன். அங்கு ஒரு தலைசிறந்த உபாத்தியாயினி இருந்தார். அவர் தமது மாணவர்களைக் கண்டிப்பான ஒரு திட்டப்படி பயிற்றுவித்தார். எதிருக்கெதிரான குரல்களைக் கொண்டு பேசச் செய்தார். அத்துடன், அவர் அளித்த பயிற்சிகளில் பல சுவாசப் பயிற்சிகளாகும். நல்ல பேச்சின் வெற்றி, திருப்திகரமான முறையில் சுவாசம் விடுவதிலே தான் தங்கியிருக்கிறது. நெஞ்சிலிருந்து பேசவே அதிகம் பேர் முற்பட்டாலும், வயிற்று முகட்டிலிருந்து பேசுவதே சரியான முறை. நெஞ்சிலிருந்து பேசினுல், விரைவிலேயே மூச்சு வாங்கத் தொடங்கி விடும்; அத்துடன், சப்தமும் குறைந்து விடும். வயிற்று முகட்டிலிருந்து நீண்ட மூச்சை இழுத்து, தொண்டைத்தசை நார்களைப் பாதிக்காமல் அதை மேலெழும்ப விட்டு, பின்னர் அது பற்களையும், நாக்கின் நுனியினையும் தொடும் வரைக்கும் வார்த்தைகளையும், ஒலிகளையும் உருவாக்காது விட்டால், பிறகு என்ன?—நீங்கள் ஒவ்வொரு இரவும் உங்களுடைய சப்தத்தினுல் தியேட்டரை அப்படியே கிடுகிடுக்கச் செய்யலாம்; வருடக்கணக்கில் இவ்விதம் செய்தாலும், உங்கள் குரல்வளைக்கு எவ்வித ஆபத்து மேற்படாது.

இவை, பேச்சுக்கலையின் சில நுட்பங்களேயாகும். இவை ஓரளவுக்கு இலகுவானவையே. ஆனுலும், மனத்தை ஒருமுகப்படுத்திக் கடுமையாக உழைத்தாலே ஒருவர் இக்கலையை ஆட்படுத்தலாம்.

ஒரு நடிகனின் முக்கியமான ஆயுதமாக விளங்குவது அவன் குரலாகையினுல், அது கவனமாகப் பாதுகாக்கப்படவேண்டும். தடிமன் தம்மிடம் காணப்படும் பொழுதுதான், தம்முடைய குரல் நல்லதாகவும், இனிமையாகவும், உணர்ச்சிகரமாகவும் அமைந்திருக்கின்றது என்பது பல நடிகர்களுடைய அநுபவம். ஒரு பிரபல பாடகர் தமது டக்டரிடம் சென்று எனக்குத் தடிமன் காய்ச்சல் வந்துவிடும்போல் தெரிகிறது. நேற்று இரவு என்னுடைய குரல் அற்புதமாக அமைந்திருந்தது!' என்று கூறினுராம்!

(தொடரும்.)

## புதுச்சட்டத்தை உற்பத்தியாளர் எதிர்க்கின்றனர்

சினிமாப்படங்கள் சம்பந்தமாக இந்திய அரசாங்கம் எடுத்துள்ள சில நடவடிக்கைகளைத் தென்னிந்திய சினிமா உற்பத்தியாளர் விரும்பவில்லை.

சினிமாப்படத் தணிக்கையாளருக்கு இதுவரை அளிக்கப்பட்டு வந்ததிலும் பார்க்க இன்னும் சில புதிய சட்டங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இப்புதிய சட்டங்களின் படி, பிச்சைக்காரர்கள் தமதுதொழிலில் ஈடுபட்டிருக்கும் பொழுதோ, அல்லது மக்களின் வறுமை நிலையையோ படம் பிடித்துக் காட்டக்கூடாது.

'இப்படி ஒரு இரும்புத்திரையைப் போட்டு விடுவதால், நாட்டிலுள்ள வறுமையைப் போக்கி விடலாமென்றெண்ணுவது பிழையாகும். மனித உள்ளத்திற்கு, பாழும் வறுமை எவ்வளவு வெறுப்பை ஊட்டமுடியும் என்பதைச் சித்திரித்துக் காட்டுவதின் மூலமாகவே, நாம் வறுமையை எதிர்த்துப் போராட முடியும் என திரு. ஸி. சீதாராம் கூறுகின்ருர். இவர் சினிமா உற்பத்தியாளர் ஏற்படுத்தியுள்ள செயற்குழுவின் அங்கத்தவர்களின் ஒருவராவர்.

## அளவுக்கு அதிகமான படங்களில்நடிக்கவேண்டாம்

**நடிகர் நாகேஸ்வரராவின் புத்திமதி**


அதிகமான ஒப்பந்தங்களை நடிகர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாதென்பதே தமது அபிப்பிராயமெனப் பிரபல நடிகர் நாகேஸ்வரராவ் தெரிவித்துள்ளார்.

ஒரு குறிப்பிட்ட திட்டத்தின் படியே படப் பிடிப்பு நடை பெற வேண்டுமென்றும், தங்கள் சொந்த நன்மையை முன்னிட்டும், சினிமாத் தொழிலின் விருத்தியை முன்னிட்டும் படவுலகின் முன்னணி நடிகர்கள் அதிக படங்களில் நடிக்க ஒப்புக் கொள்ளக் கூடாதென்றும் அவர் கூறியுள்ளார்.


நடிகர் நாகேஸ்வரராவ், ஒரு வருடத்தில் தாம் ஆக ஆறு ஒப்பந்தங்களையே ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்திருக்கிருர்.


மகத்தான 3-வது வாரம்!

சென்ட்ரல் (மருதானை) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்) லிபேர்ட்டி (பதுளை) ஜோதி (திருக்கோணமலை)



★ ஏ. நாகேஸ்வரராவ்
★ ஜமுனு
★ ராஜசுலோசனு
★ எம். என். நம்பியார்
★ ஏ. கருணுநிதி
★ கே. சாரங்கபாணி
★ எஸ். வி. ரங்கராவ்
★ டி. பி. முத்துலட்சுமி



இன்னும் பலர் நடித்த

ஜெயந்தி பிக்ஸர்ஸ்

அளிக்கும்

வாழ்க்கை ஒப்பந்தம்

பின்னணி:
கண்டசாலா, திருச்சி லோகநாதன், லீலா, சுசீலா, ஜிக்கி, டி. வி. ரத்தினம்.

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்!

சென்ட்ரல் (மருதானை)

ஸிஸில். பி. டி. மெல்லின்

பத்துக் கற்பனைகள்


## சந்திரனை வலம் வரும்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் 1409 அபேட்சகர்களும் 1951 இல் 1,376 அபேட்சகர்களும் போட்டியிட்டனர்.

**ருஷியப் பிரதமர்**

சீனத்தில் நிகழ்ந்த 10-வது மக்கள் குடியரசு வைபவக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டுவிட்டு சோவியத்துப் பிரதமர் குருஷேவ் சென்ற ஞாயிற்றுக்கிழமை சைபீரிய நகராகிய வளடிவொஸ் ரெக் போயிருக்கிருர். அமெரிக்க ஜனுதிபதியுடன் தாம் நடாத்திய பேச்சுவார்த்தையின் முடிவுகளையும் சீனத்தலைவர்களுக்குத் தெரிவித்து விட்டு ருஷிய-சீன உறவின் அழியாத் தன்மையையும் விளக்கி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிருர்.

**சைப்பிரஸ்**

அதி மேற்றிராணியார் மக்காரியோசும் முன்னுள் எயோக்காத்தாபனத் தலைவராகிய ஜெனரல் கிறிவாசும் சென்ற வியாழக்கிழமை ஏதென்ஸ் நகரில் சந்தித்து தமக்கிடையே சைப்பிரஸின் எதிர்காலத்தைக் குறித்து எழுந்திருக்கும் கருத்து வேற்றுமைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

**லாவொஸ்**

லாவொஸிற்கு விபரங்களைச் சேகரிப்பதற்கு அனுப்பப்பட்ட பாதுகாப்பு சபையின் உபகுழுவினர் தமது கடமைகளை முடித்துக்கொண்டு இவ்வாரத்தில் நியூயோர்க் நகருக்குப் புறப்பட்டு தமது அறிக்கையைப் பாதுகாப்பு சபைக்கு சமர்ப்பிப்பார்கள் எனத் தெரிகின்றது.

**அல்ஜீரியா**

ஜெனரல் டீ கோலின் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அல்ஜீரிய தேசியவாதிகள் பிரெஞ்சு அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகள் நடாத்துவதற்கு சிலநிபந்தனைகளுடன் விரும்புவதாகத் தெரிய வருகின்றது. கடந்த 5 வருடங்களாக நடைபெற்றுவரும் சுதந்திரப் போருக்கு விரைவில் முடிவு ஏற்படுமா?

**திபெத்**

திபெத் விவகாரத்தை ஐக்கிய நாடுகள் பொதுமகா சபைக்கூட்ட நிகழ்ச்சிநிரலில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என மலாயாவும் அயர்லாந்தும் ஒரு பிரேரணையைக் கொண்டு வந்திருக்கின்றன. செயற்குழு இக் கோரிக்கையை நேற்று ஆராய்ந்திருக்கவேண்டும்.

3வது வீர வாரம்!

கிங்ஸ்லி பிளாஸா நவா விஜயா வெம்பிளி

மற்றும் ஏழு திரைகளில்

ரஞ்சன், வீரப்பா, காகா ராதாகிருஷ்ணன்,
சந்தியா, வனஜா, முத்துலட்சுமி

நடித்த

டி. என். ஆர். புரொடக்ஷன்ஸ்

# மின்னல் வீரன்

இப்பொழுது காட்சியளிக்கிறுன்!

காமினி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) சிலோன் ரூரிங்ஸ் (அம்பாரை)

சாகர (சிலாபம்) லட்சுமி (இரத்தினபுரி) ஸ்ரீ பாத (ஹட்டன்)



மாயாஜாலம், மந்திர வித்தைகள் மலிந்த
மகத்தான திரைச் சித்திரம்

★ பிரேம் நஸீர்
★ ஸ்ரீ தரன் நாயர்
★ எஸ். பி. பிள்ளை
★ மிஸ் குமாரி
★ குமாரி தங்கம்
★ பங்கஜம்

நடித்த

நீலா புரொடக்ஷன்ஸ்

# மந்திரவாதி

விரைவில்
சினிமாஸ் திரைகளில்

இதயத் துடிப்புக்கு ஓர் இன்ப விருந்து

★ ஆசைக்காக வாழாமல் கடமைக்காக வாழ்பவள்தான் பெண். அந்தப் பெண் இனத்தில் பிறந்து விட்ட வசந்தி பெண்மைக்கே உயர்வு தந்தாள்,

★ உள்ளத்தை உருக்கும் கதை மட்டுமல்ல. நெஞ்சையே கொள்ளை கொள்ளும் காதல். நினைத்து நினைத்துச் சிரிக்க வைக்கும் ஹாஸ்யம் இவையனைத்தும் கொண்டதுதான்...

ஜெமினி கணேசன், பி. சரோஜாதேவி,
விஜயகுமாரி, தங்கவேலு, எம். சரோஜா

நடித்த

வீனஸ் பிக்சர்ஸ்

# கல்யாண பரிசு

கதை
வசனம்
டைரக்ஷன் } ஸ்ரீதர்

இசை
ஏ. எம். ராஜா

பின்னணி:
ஏ. எம். ராஜா
பி. சுசீலா
ஜிக்கி
ஜமுனாராணி

மூன்று லட்சம் இரசிகர்களால் முதல் ஐந்து வாரங்களிலேயே ஐந்து தியேட்டர்களில் கண்டு போற்றப்பட்ட மகத்தான திரை ஓவியம்!

வெற்றிகரமான 8-வது வாரம்!

எல்பின்ஸ்டன் (மருதானை) வின்ஸர் (யாழ்ப்பாணம்)

வீரமும் உரிமையும் ஒன்றோடொன்று கூடிக்குலவ, ஆங்கில நாட்டாரின் அடிமை விலங்கை அறுத்தெறிய முதல் முழக்கமிட்ட வீரன்!

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், ஓ. ஏ. கே. தேவர், கருணாநிதி,
பத்மினி, ராகினி, வரலெட்சுமி, முத்துலெட்சுமி

நடித்த

வீரபாண்டிய

# கட்டபொம்மன்

(முழுநீள டெக்னிக்கலர் படம்)

தமிழ்த்திரை வானிலே ஒளிவிடும் நட்சத்திரங்களை ஒருங்கே சந்திக்கும் அரிய வாய்ப்பு!
கலைத்துவம் செறிந்த காட்சிகளை உடனே கண்டானந்தியுங்கள்!!

4-வது வாரம்! கெயிட்டி திரையில்

பாலையா, பண்டரிபாய், தங்கவேலு, ஈ. வி. சரோஜா நடித்த

# மனைவியே மனிதனின் மாணிக்கம்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10-ந் திகதி வெளியிடப்பெற்றது.